Registered as a Newspaper in Srilanka


தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 40 ரூபா • தீபம் 145 • 17.06.2018

அண்ணா பொதிகள் சேவை
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் கடிதங்கள் சேவை
AnnA EXPRESS COURIER SERVICE
976, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 5656
070 330 5500



## புலிகளின் திட்டத்திற்கு குறுக்கே வந்த ஆடு

புதிய தொடர்

குழந்தை கடத்தலின் பின்னணி என்ன?

## கோடு போடும் மாவை... றோடு போடும் பங்காளிகள்



# பிரபாகரனின் எதிரி லிஸ்ற்!


**உடனடி வேலை வாய்ப்புக்கள்**
உங்கள் தகைமைக்கும் திறமைக்கும் ஏற்ற சிறந்த வேலை வாய்ப்புக்களை


- ✓ நீங்கள் விரும்பிய இடத்தில்
- ✓ அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில்
- ✓ உயர்ந்த ஊதியத்துடன்


பெற்றுக் கொள்ள உங்கள் சுயவிபரக் கோவையுடன் எமது அலுவலகத்தில் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

WIN STAR JOB BANK, 45 Vempady Street, Jaffna.
PH:021-3202789 www.winstarjaffna.com


கிளிநொச்சியில் பல ஆண்டுகளாக உணவகத்தினை நடத்தி
வாடிக்கையாளரின் நன் மதிப்பை பெற்ற நாதன் அவர்களின் புதல்வனால்
இப்போது A9 வீதி பரந்தனில் திறந்து வைக்கப்பட்டுள்ளது
"அம்பாள் கபே"
காலை உணவுகள்
மதிய உணவுகள்
இரவு உணவுகள்
இவை அனைத்தையும்
ஒரே கூரையின் கீழ்
உண்டு மகிழ்ந்திட
இன்றே விரையுங்கள்
அம்பாள் கபே, A9 வீதி. பரந்தன்
தொலைபேசி: 0778623870
உரிமையாளர்: த.அமுதன்


YARL AHI
Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்
இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328


TOPAZ
Mall
NO 1
TOPAZ
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of items
TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933
coustomer is king


TILKO
hotels
TILKO
JAFFNA CITY HOTEL
TILKO JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com
Web: www.cityhoteljaffna.com

# மாவை சேனாதிராசாவிற்கு போன ஆறாவது கடிதம்!

தமிழரசுக்கட்சியின் இளைஞரணி தான் கடந்த ஓரிரண்டு வாரங்களாக அரசியலில் இரகசியமாக, சூடாக பேசப்பட்ட விடயம். மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதனை இளைஞரணி தலைவராக்கி, கட்சிக்குள் புதிய ஓட்டமொன்றை உருவாக்க நடந்த முயற்சி அப்படியே பிசுபிசுத்து நிறுத்தப்பட்டு விட்டது. மாவை சேனாதிராசாவே தலையிட்டு, இதைநிறுத்துங்கள் என கூறியிருக்கிறார்.

இளைஞரணி உருவாக்க முயற்சிகள், "ஒரு பக்க" முயற்சியாக நடப்பதாக கருதியதாலேயே அதை நிறுத்தியுள்ளேன் என மாவை தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார்.

இளைஞரணியை உருவாக்க வடக்கு, கிழக்கில் மாவட்டந்தோறும் ஓடி, நிறைய பணத்தை செலவிட்டு, தீவிரமாக முயன்றும், அது முடியாமல் பிசுபிசுக்க இரண்டு விசயங்களை காரணமாக சொல்கிறார்கள்.

முதலாவது, இந்த முயற்சியுடன் சமாந்தரமாக சுமந்திரன் எம்.பிக்கு எதிரான நகர்வொன்றும் கட்சிக்குள் நடந்துள்ளது. கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் சுமந்திரனின் வாயை அடைக்கும் தீர்மானமொன்றை கொண்டு வர முயல, அந்த தகவல் லீக் ஆகி, கட்சிக்குள் இரண்டு அணிகள் உருவாகிவிடலாமென்ற ஆபத்து எழ, இப்போதைக்கு சமரசம் செய்யப்பட்டுள்ளது.

இளைஞரணியை உருவாக்க முயன்ற எம்.பியுடன் நெருக்கமாக இருந்து, இப்போது யாழ் மாநகரசபையில் உறுப்பினரான ஒருவர்தான், சுமந்திரனிற்கு எதிராக எம்.பி செயற்பட்ட ஆதாரங்களை அப்படியே அள்ளிச்சென்று சுமந்திரன் அணி முக்கியஸ்தர்களிடம் கொடுத்தாராம்!

அந்த உறுப்பினர் இப்படி "விசயங்களை அள்ளிச்செல்வதில்" கில்லாடிதானாம். முன்னர் வடக்கு முதலமைச்சரின் அலுவலகத்தில் இருந்தும்சில பலதகவல்களை "அள்ளிச் சென்று" அந்த எம்.பிக்கு கொடுத்திருக்கிறார். நம்பி வேலையில் வைத்திருந்தவர், மாநகரசபை உறுப்பினரானதும் "சாப்பிட்ட கோப்பையில் மலம் கழித்துவிட்டார்" என அந்த எம்.பி இப்பொழுது புலம்பிக்கொண்டிருக்கிறார்.

இளைஞரணி சறுக்கியதற்கு இரண்டாவது காரணம் அதை குறுக்குவழியில் செய்ய முயன்றது. அதற்கு உதாரணம், சுன்னாகம் பிரதேசசபையில் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தவிசாளர் வேட்பாளரிற்கு எதிராகவே ஜி.பிரகாஷ் போட்டியிட்டார். அவரையும் இளைஞரணிக்குள் இணைந்து பணியாற்ற பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கட்சி தலைவர் அப்பா, மாவை சேனாதிராசா கடிதம் அனுப்பியிருந்த நிலையில், மகனை முன்னிலைப்படுத்தும் இளைஞரணியினர் அவருடன் பேச்சு நடத்தியிருக்கிறார்கள்.

இப்படி பல காரணங்களால் கட்சிக்குள் அதிருப்தி எழ, அது கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தலாமென கருதிய மாவை ' சேனாதிராசா, இளைஞரணி மாநாட்டை நிறுத்தி விட்டார்.

இதேவேளை, தேசியப்பட்டியல் ஆசனத்தை குலநாயகம் குறிவைத்துள்ளதாக கட்சிக்குள் 'பேசப்படுகிறது. முல்லைத்தீவு எம்.பி சாந்தி சிறிஸ்கந்தராசாவிற்கு வழங்கப்பட்ட இரண்டரை வருடம் முடிவடைந்து விட்டது என்பதை நினைவுபடுத்தி, மாவை சேனாதிராசாவிற்கு ஆறாவது கடிதத்தையும் குலநாயகம் அனுப்பியுள்ளார். ஆனால், தன்னை நியமிக்குமாறு அதில் குறிப்பிடப்படவில்லை. யாழ் மாநகரசபை வட்பார வேட்பாளர் பட்டியலில் இருந்து, பின்னர் நியமன உறுப்பினர் பட்டியலுக்குமாறி, பின்னர் மாநாகரசபை தேர்தலில் இருந்தே விலகிக் கொண்டது, எம்.பி கதிரையை குறிவைத்தாக இருக்கலாமென்ற அபிப்பிராயம் கட்சிக்குள் உள்ளது.

# தவராசாவிற்கு இன்னொரு எதிர்க்கட்சி!

வடக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி கொஞ்சம் சிக்கலான பதவி போலத்தான் தெரிகிறது. அந்த கதிரையில் உட்காரும் யாருமே நிம்மதியாக, நீண்டகாலம் இருக்க முடியாதென்பது சி.தவராசாவிற்கும் ஏற்பட்டுள்ளது. தவராசாவிடமுள்ள எதிர்க்கட்சி தலைவர் பதவியை, வவுனியாவை சேர்ந்த ஜெயதிலகவிடம் வழங்க வேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கூட்டாக கடிதம் மூலம் கோரிக்கை வைத்துள்ளனர். தவராசாவின் தலைக்கு மேல் நீண்டகாலமாகவே கத்தி தொங்கிக் கொண்டிருந்தாலும், தற்போது உண்மையிலேயே சிக்கலான கட்டத்தை எட்டியுள்ளது.

வடக்கு மாகாணசபை அமைந்த போது எதிர்க்கட்சி தலைவரானவர் ஈ.பி.டி.பியின் கமல்ராஜ். பின்னர் கொலைக்குற்றச்சாட்டில் சிக்கி பதவியை இழக்க, மாகாணசபை உறுப்பினரானவர் தவராசா. தவராசாவை எதிர்க்கட்சி தலைவராக்கும்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வடக்கு அவைத்தலைவரிடம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டது. தவராசா எதிர்க்கட்சி தலைவரானார்.

பின்னர் ஈ.பி.டி.பி தலைவருக்கும், தவராசாவிற்கும் ஏற்பட்ட "ஒரு" பிரச்சனை, அவரை கட்சியை விட்டு வெளியில் வர வைத்தது. தவராசாவை எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்து நீக்கி, கிளிநொச்சியின் ஈ.பி.டி.பி உறுப்பினர் வை.தவநாதனை எதிர்க்கட்சி தலைவராக்கும்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கடிதம் மூலம் கோரியபோது, அவைத்தலைவர் அதை "நிறைவேற்றவில்லை".

இந்த நிலையில் வவுனியாவில் அகில இலங்கை மக்கள் காங்கிரசில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அனிகாமையே ஜெயதிலக எதிர்க் கட்சி தலைவர் பதவியை குறிவைத்துள்ளார். இதற்காக ஆறு உறுப்பினர்களின் கையெழுத்தை பெற்றுள்ளார். இதில் சி.அகிலதாசும் கையெழுத்திட்டுள்ளார். பின்னர், அந்த கையெழுத்தை திரும்ப பெறுவதாக கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இதனால் ஐந்து உறுப்பினர்கள் ஜெயதிலகை ஆதரித்துள்ளனர். பின்னர் மன்னாரை சேர்ந்த அப்துல் நியாஸ் சீனி முகமட் திடீரென அதிலிருந்து விலகிக் கொண்டார்.

ஆகவே, நான்கு உறுப்பினர்கள் ஜெயதிலகவை ஆதரிக்காமலிருக்கிறார்கள். ஜெயதிலகவை 4 உறுப்பினர்கள் ஆதரிக்க, வெளியில் நான்கு உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

தவராசாவிற்கும், ஜெயதிலகவிற்கும் சமஅளவில் ஆதரவு உள்ளது. அதனால் தவராசாவின் பதவிக்கு உடனடி ஆபத்தெதுவும் கிடையாது. ஆனால் எதிர்க்கட்சி தலைவரிற்கு ஆதரவான அதேயளவு உறுப்பினர்களின் ஆதரவுடன், எதிர்க்கட்சிக்குள்ளேயே இன்னொரு எதிர்க்கட்சியும் உள்ளது!





# முதலமைச்சர் நட்ட ஆமி மரத்தால் சிக்கல்!

யாழில் இராணுவத்தினர் நடத்திய மரநடுகை நிகழ்வில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டிருக்கிறார். இது சமூக ஊடகங்களில் விமர்சனத்தை கிளப்பியுள்ளது. சமூக ஊடகங்களில் முதலமைச்சரை பலரும் விமர்சித்து வருகிறார்கள். சமூக ஊடகங்கள் இப்படித்தான் இருக்கும். ஆனால் சமூக ஊடகங்களை போலவே இந்த விடயத்தில் முதலமைச்சர் மீது கடும் அதிருப்தியடைந்துள்ள இன்னொரு தரப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணி.

முதலமைச்சர் இராணுவத்தின் நிகழ்விற்குசென்றது பெரிய தவறு என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் கருதுகிறார்கள்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் அரசியலே தூய்மைவாதத்திலிருந்து கட்டியெழுப்பப்பட்டது. அண்மைய நினைவேந்தல்களின் போது, நினைவேந்தலை எப்படி செய்வதென்பதை விட, யாரெல்லாம் நினைவேந்தலிற்கு வர முடியாது என்ற லிஸ்றைத்தான் முதலில் தயாரித்திருந்தார்கள். முதலமைச்சர் ஒரு கூட்டணியை அமைப்பார் என கருதப்படும் சமயத்தில், கூட்டணியில் எந்தக் கட்சிகள் வரக்கூடாது என்ற லிஸ்றையே முதலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தயாரித்திருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை தமது கூட்டணியில் இணைத்துக்கொள்ள முடியாது என மக்கள் முன்னணி நிபந்தனை விதித்ததற்கு ஒரே காரணம் உள்ளூராட்சிசபைகளில் சுதந்திரக்கட்சியின் . ஆதரவுடன் ஆட்சியமைத்தது என்பதே. முதலமைச்சர் இராணுவத்தின் நிகழ்வில் கலந்து கொண்டார் என்பதால், அவருடனும் கூட்டணி வைக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டை மக்கள் முன்னணி எடுக்குமா என்பது தெரியவில்லை. ஆனால், அதற்கு கிட்டவான அதிருப்தி நிலையை கட்சி பிரமுகர்கள், செயற்பாட்டாளர்களிடம் அவதானிக்க முடிகிறது.

இராணுவத்தின் மரத்தை நட்டதாலேயே முதல்வருடனான கூட்டணியைகடாசிஎறியப்போகிறார்களா? இல்லையா? என்பதை அடுத்தடுத்த வாரங்களில் தெரிந்து விடலாம்.

# கோடு போடும் மாவை... றோட் போடும் பங்காளிகள்

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பேசப்பட்டவை என்ன?




தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கடந்த 06ம் திகதி கொழும்பில் நடைபெற்றது. கடந்த உள்ளூராட்சிசபை தேர்தல் சறுக்கலில் தொடங்கி, அடுத்த வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் வரை பல விடயங்கள் இதில் ஆராயப்பட்டன.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், புளொட் சார்பில் இராகவன், ரெலோவின் ஹென்ரி மகேந்திரன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

வழக்கமாக இப்படியான கூட்டங்களை இரா.சம்பந்தன்தான் ஆரம்பிப்பார். இந்த கூட்டத்தை மாவை சேனாதிராசாவையே ஆரம்பிக்கும்படி சம்பந்தன் கூற, மாவை கூட்டத்தை ஆரம்பித்தார். கடந்த உள்ளூராட்சி சபை தேர்தல் சறுக்கலை பற்றித்தான் அவர் அதிகம் பேசினார். 35 வீதம் வரையான மக்கள்தான் கூட்டமைப்பிற்கு வாக்களித்துள்ளனர், மக்கள் மாற்றத்தை தேடியிருக்கிறார்கள் என வெளிப்படையாக பேசினார். வேட்பாளர்கள் தெரிவினால்தான் சறுக்கல் ஏற்பட்டதென சொல்லப்படுவதில் உண்மையில்லை, ஏனெனில் எல்லா இடங்களிலும்வெற்றிபெறுவார் என கருதிய வட்டாரங்களில் கூட சறுக்கல் நிகழ்ந்துள்ளது.

கூட்டமைப்பின் கட்சிகளிற்குள் இருந்த குத்துவெட்டும், போட்டியும், புரிந்துணர்வற்ற தன்மையும்தான் இதற்கு காரணம் என்றார்.

பங்காளி கட்சிகள் இரண்டுமே இந்த சறுக்கலிற்கு தமிழரசுக்கட்சியின் நடவடிக்கைகள்தான் காரணமாக இருந்தன என்று காரணங்களை அடுக்கினார்கள்.

மாவையை தொடர்ந்து உரையாற்றி செல்வம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சறுக்கலிற்கு திட்டமிடாத பிரசார நடவடிக்கையும் ஒரு காரணம் என்றார். குறிப்பாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரசாரங்களிற்கு பதிலளிப்பதாகவே எமது பிரசாரங்கள் இருந்தனவே தவிர, எமது நடவடிக்கைகள் பற்றிய விளக்கத்தை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பிப்பதாக பிரசாரம் இருக்கவில்லையென விசனப்பட்டார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதான பிரசாரமாக, கூட்டமைப்பு வாக்களித்த அரசியல்தீர்வு வரவில்லையென்பது இருந்தது.

ஆனால் அரசியல் தீர்வு வராவிட்டாலும், இங்கு ஜனநாயகசூழல் ஏற்பட்டுள்ளது. மாவீரர்நாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பவற்றை சுமுகமாக அனுட்டிக்க முடிகிறது. இது அரசாங்கத்துடன் நாம் நல்லிணக்கத்தை பேணுவதால் ஏற்பட்ட சூழல். இதையெல்லாம் மக்களிடம் சரியாக கொண்டுபோய் சேர்க்கவில்லை என்றார்.

பின்னர் உரையாற்றி புளொட் இராகவன் உள்ளூராட்சி தேர்தல் நடக்கப்போவதை நீண்டகாலத்தின்முன்னரே தெரிந்தும், இறுதிவரை எந்த முன்னெற்பாடும் இல்லாமல் கடைசிக்கட்டம் மட்டும் இருந்துவிட்டு, இறுதிநேரத்தில் கட்சிகளிற்கிடையில் ஏற்பட்ட இழுபறியால் மக்கள் மத்தியில் அவநம்பிக்கை ஏற்பட்டதாக குறிப்பிட்டார்.

இந்த இரண்டு கருத்துக்களையும் மாவை சேனாதிராசா, இரா.சம்பந்தன் இருவரும் மௌனமாக, ஆமோதிக்கும் விதத்தில் கேட்டுக்கொண்டிருந்தனர். கூட்டம் ஆரம்பிக்கும்போதே தனக்கு அவசரமான இன்னொரு கூட்டம் இருப்பதால் பாதியிலேயே புறப்பட்டு விடுவேன் என எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார். அப்படியே இடையில் கிளம்பி சென்றும் விட்டார்.

கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் ஒற்றுமையீனம் பற்றி சில சுற்று கருத்து பரிமாற்றம் நடந்தது. எல்லோருடைய கருத்துக்களையும் கண்ணை மூடியபடி, மௌனமாக கேட்டுக்கொண்டிருந்த இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசாவின் பக்கம் திரும்பி "நீங்கள் ஏதோ மாநாடு நடத்தப்போவதாக சொன்னீர்கள். அதில் எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டுமென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி விடுங்கள்" என்றார்.

மாவையும், "ஓமோம்" என ஏனோதானோவென பதிலளித்தார்.

இதன்பின்னர் தமிழரசுக்கட்சியின் இளைஞரணி மாநாடு குறித்த பேச்சு ஆரம்பித்தது. இளைஞரணி மாநாடு தொடர்பான செய்திகள் வெளியாகிறது, அது உண்மையா, தமிழரசுக்கட்சியின் இளைஞரணி மாநாடா அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பின் இளைஞரணி மாநாடா என பங்காளிகள்.

இதற்கு பதிலளித்த மாவை "இப்போதைக்கு அது கட்சியின் மாநாடாகத்தான் திட்டமிடுகிறார்கள்" என்றார்.

இதற்கு கூட்டத்தில் அவ்வளவு வரவேற்பிருக்கவில்லை. பங்காளிகள் மெல்லிய அதிருப்தியை வெளியிட்டனர். அதில் குறிப்பிடத்தக்க ஒரு கருத்தை சொன்னார்கள் "தமிழ் மக்கள் பேரவை ஒரு இளைஞர் மாநாட்டை திட்டமிடுகிறது. அது தமிழ் மக்கள் பேரவையின் இளைஞர் மாநாடு. அதில் பல கட்சிகள் உள்ளன. ஆனால் எல்லோரும் ஒன்றிணைந்து அந்த மாநாட்டை நடத்துகிறார்கள். ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருந்தாலும், அதிலுள்ள கட்சியொன்று மட்டுமே இந்த மாநாட்டை நடத்துகிறது. இதுதான் இரண்டு பக்கமுள்ள வித்தியாசமும், நமது பலவீனமும்" என்றனர்.

இதனால் மாவை கொஞ்சம் வெலவெலத்திருக்கிறார். "இல்லை யில்லை... இப்போதைக்கு நாங்கள் அதை செய்கிறோம். நீங்களும் (ரெலோ, புளொட்) கொஞ்ச இளைஞர்களை சேருங்கள். இன்னொரு முறை எல்லோரும் சேர்ந்து செய்வோம்" என்றார்.

அடுத்ததாக வடக்கு முதலமைச்சர் விவகாரத்தையும் ரெலோ தரப்பே ஆரம்பித்து வைத்தது.

"யார் முதலமைச்சர் வேட்பாளர் என்பதில் குழப்பமாக செய்திகள் வந்தபடியிருக்கின்றன. பலரது பெயர்கள் வருகின்றன. நீதிபதி இளஞ்செழியனின் பெயர் கூட வருகிறது. இப்படியான செய்திகளால் மக்கள் ஒருவரை எதிர்பார்த்து விட்டு, அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாத ஒருவரை நாம் களமிறக்கினால் சறுக்கல்தான் வரும். யாரென்பதை நேரகாலத்துடன் தீர்மானிக்க வேண்டும். நீங்கள்தான் என்பது முன்னரே தெரிந்தால், அதற்காக வேலை செய்யலாம்" என்றனர்.

"நான் போட்டியிடப்போவதாக பத்திரிகைகளில் செய்தி வருகிறது. பத்திரிகைக்காரர்கள் என்னைக் கேட்டார்கள். அவர்களிற்கு சொன்னேன் தம்பி தமிழ் தேசிய கூட்டமைப்பு என்னை நில் என கேட்டால் நிற்பேன். போனமுறை விட்ட தவறை இம்முறை விட மாட்டேன் என சொன்னேன்" என்றார்.

இதன்போது செல்வம் அடைக்கலநாதன் கொஞ்சம் காரசாரமாகவே வடக்கு முதலமைச்சரை விமர்சித்தார். சம்பந்தனால் நியமிக்கப்பட்டவர், சம்பந்தனின் கட்டுப்பாட்டை மீறி செயற்படுகிறார் என்ற பாணியில் விமர்சித்தார்.

இது மாவை சேனாதிராசாவை "கிளறி" விட்டிருக்கிறது. "கடந்தமுறை போட்டியிட நான் தயாராக இருந்தேன். நீங்கள் எல்லோருமே (ரெலோ, புளொட்) என்னை ஆதரித்தீர்கள். இவர்கள்தான் (சம்பந்தன், சுமந்திரனை குறிப்பிட்டு) கனகஈஸ்வரன் வீட்டில் கூடி கதைத்து விக்னேஸ்வரனை கொண்டு வந்தார்கள். பிரச்சனைப்படுத்தக்கூடாது என்று நான் ஒதுங்கிவிட்டேன். இவர்களால்தான் இந்த பிரச்சனை வந்தது. இம்முறை கடந்தமுறை விட்ட தவறை விட மாட்டேன்" என சம்பந்தரை நேராகவே குற்றம்சாட்டினார்.

மாவையர் இப்படி சொன்னபோதும், சம்பந்தர் மௌனமாக கண்ணை மூடிக் கொண்டிருந்தார். இந்த கலந்துரையாடலில்" மாவட்டக் குழு கூட்டங்கள் மூலம் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பது, மாதாந்தம் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை நடத்துவது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. விரைவில் நடக்கவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டத்தின் பின்னர், மீண்டும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை கூட்டுவதென்றும் முடிவானது.

**யார் முதலமைச்சர் வேட்பாளர் என்பதில் குழப்பமாக செய்திகள் வந்தபடியிருக்கின்றன. பலரது பெயர்கள் வருகின்றன. மக்கள் ஒருவரை எதிர்பார்த்து விட்டு, அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாத ஒருவரை நாம் களமிறக்கினால் சறுக்கல்தான் வரும்.**




# நமது உணர்வும் கட்டுக்கதையாகுமா?

## யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்... கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் நடந்த சம்பவங்கள் பற்றிய கட்டுக்கதைகளையும், அவற்றின் உண்மைத்தன்மை பற்றியும் கடந்த சில வாரங்களாக இந்த மினி தொடரில் குறிப்பிட்டு வந்தோம். இறுதியுத்தம் தொடர்பாக நிலவி வந்த பல கட்டுக்கதைகளையும், அவற்றின் உண்மைத்தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளோம். இன்னும் பேச நிறைய விசயங்கள் உள்ளன.

தீபத்தின் ஒவ்வொரு வார இதழ்கள் வெளியாகும்போதும், நிறைய வாசகர்கள் நேரிலும், தொலைபேசியிலும் எம்மை தொடர்புகொண்டு பேசுவார்கள். தொடர் தொடர்பான தமது அபிப்பிராயங்கள், தமக்கு தெரிந்த தகவல்கள் என பல விசயங்களையும் பேசுவார்கள்.

கடந்தவாரமும் இப்படியொரு தொலைபேசி அழைப்பு வந்தது. பேசியவர் ஒரு பெண்.

இந்த தொடரில் நாம் குறிப்பிட்ட சம்பவமொன்றுடன் தொடர்புடைய புலிகளின் தளபதியொருவரின் மனைவி அவர். இந்த தொடரில் அந்த தளபதியை பற்றியும் குறிப்பிட்டுள்ளோம். புலிகளின் உயர்மட்ட தளபதிகளில் ஒருவராக இருந்தவர்.

இறுதியில், ஆனந்தபுரம் BOX இற்குள் மரணமடைந்து விட்டார்.

அந்த தளபதியின் மனைவியின் இன்றையவாழ்க்கைஎப்படியிருக்கிறது?

யுத்தத்தின் இறுதி நாட்களில் ஆனந்தபுரம் BOX இற்குள் செல்வதற்கு பல நாள் முன்னரே தனது குடும்பத்தை பார்க்காமல் களத்திற்கு அவர் சென்றுவிட்டார். அவரது குடும்பம் சிறிய பிள்ளைகளுடன் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் கடற்கரையோரமாக, உதவிகள் இல்லாமல் பெரும் சிரமப்பட்டுள்ளார்கள். அந்த தளபதி நினைத்திருந்தால், தனது அணியிலுள்ள சில போராளிகளை அனுப்பி, தனது குடும்பத்திற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்திருக்க முடியும்.



ஆனால், அவர் அப்படி செயற்படவில்லை. எல்லா மக்களிற்குமுள்ள சிரமங்களே எனது குடும்பத்திற்கும் ஏற்பட்டது, அவர்களை அமை சமாளித்து கொள்ளட்டும் என தனது பணியில் இருந்தார். இறுதியில் மரணமடைந்தும் விட்டார்.

யுத்த வலயத்திற்குள் இருந்து வெளியேறி, இடைத்தங்கல் முகாம்களிற்கு போய், தற்போது யாழில் மீள்குடியேறற்ப்பட்டு அந்த குடும்பம் வசித்து வருகிறது.

அவர்கள் வசிக்கும் தென்மராட்சி பிரதேசசெயலகப் பிரிவில் அவர்களிற்கு வீட்டுத்திட்டமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. முறையான வருமானமும் இல்லாத நிலைமையில், சில குடும்பங்களை பராமரித்து அவர் தனது பிள்ளைகளை வளர்த்து வருகிறார்.

சொந்த வீடும் இல்லாத நிலையில், யாழ் மாவட்ட செயலகத்திற்கு சென்று, பெரு முயற்சியெடுத்தே வீட்டு திட்டத்தை பெற்றுக்கொள்ள முடிந்ததாக கூறினார்.

இது எல்லாவற்றையும்விட, அவர் வருத்தத்துடன் கூறிய இன்னொரு விசயம் ஆனந்தபுர சமர் நினைவு நாள் புலம்பெயர் தேசங்களில் அனுட்டிக்கப்பட்டிருந்தது. சுவிஸில் நடந்த அஞ்சலி நிகழ்வில் அவரது கணவரின் படத்தையும் பெரியளவில் வைத்து, விளக்கேற்றி அஞ்சலித்தனராம்.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் அவருக்கு வருத்தமில்லை. ஒரேயொரு கேள்விதான் அவரிடம் இருந்தது. நமக்காக அவர்கள் போராடினார்கள் என பெரியளவில் அஞ்சலி செலுத்தும் யாருமே, அஞ்சலி செலுத்தப்படுபவர்களின் குடும்பங்களை கவனத்தில் கொள்வதில்லை. இந்த சமூகம் தமது குடும்பங்களை கவனித்துக்கொள்ளும் என்ற நம்பிக்கையில்தானே அவர்கள் களத்தில் இறந்து போனார்கள் என்று ஒரு கேள்வி கேட்டார்.

இதற்கு உண்மையில் நம்மிடம் பதிலில்லை.

முள்ளிவாய்க்காலில் இறந்த பொதுமக்கள், போராளிகளிற்கு அஞ்சலி செலுத்த போட்டிபோடுகிறோம். மாவீரர்நாளில் விளக்கேற்றுவதும் ஒரு ஃபஷனாகி வருகிறது. எல்லோரும் அதற்கு போட்டிபோடுகிறோம்.

இந்தநாட்களில் சமூக வலைத்தளங்கள் “வேற லெவலில்“ இயங்கும். எல்லோருமே ஒருவகை உன்மத்த நிலையில் சமூக வலைத்தளங்களில் உலாவுவார்கள்.

இந்த அஞ்சலி, சமூக வலைத்தள உன்மத்தங்களை ஆற்றுப்படுத்தி, முறையான அஞ்சலி கலாசாரம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்பதை தீபத்தில் பலமுறை குறிப்பிட்டு வந்திருக்கிறோம். நாம் திரும்பத்திரும்ப வலியுறுத்துவது, சரியான ஒன்றைத்தான் என்பதை இப்படியான சம்பவங்கள் உறுதிசெய்தபடியிருக்கின்றன.

குறிப்பிட்ட ஒரு நாளில் விளக்கேற்றி, யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களிற்கு அஞ்சலி செலுத்துவதில் தவறில்லை. ஆனால், நமது அஞ்சலி அந்தளவில் மட்டுப்படுத்தப்பட்டு, அது So Call அஞ்சலியாக மாறினால், அந்த அஞ்சலிக்கு உண்மையான அர்த்தங்கள் கிடையாது.

உயிரிழந்தவர்கள் இந்த சமூகத்திற்காகவே உயிரிழந்தார்கள், அவர்களை நாம் நினைவுகூர வேண்டுமென விரும்பினால் நமது அஞ்சலி ஆத்மார்த்தமாக இருந்தால், நாம் செய்ய வேண்டிய முதன்மையான பணி நம் மத்தியில் உள்ள யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை நமது கைகளில் ஏந்திக்கொள்வதே. நாமெல்லோரும் சிறுதுளிகளாக செய்யும் உதவிகள் பெரு வெள்ளமாகலாம்.

இந்த குடும்பங்களை பாராமரிப்பதற்கும், உதவிகளை முறைப்படி செய்வதற்கும் முறையான பொறிமுறையொன்று அவசியம். நமது அரசியல் கட்சிகளோ அல்லது மாகாண நிர்வாகமோ அதனை ஏற்படுத்த வேண்டும். அதன்மூலம், உதவி செய்யப்பட்டால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரிற்கும் உதவி சமச்சீராக சென்றடையும்.

தற்போதைய உதவிகள் பொறிமுறையானதல்ல. ஒவ்வொருவரும் தமக்கு தெரிந்தவர்களிற்கு உதவிகள் செய்கிறார்கள். ஓரளவு ஊடக வெளிச்சம் பாய்ந்தவர்கள், அதிக தொடர்பை ஏற்படுத்துபவர்கள் உதவிகளை பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், இதற்கு அப்பால் இன்னும் ஏராளம் குடும்பங்கள் உள்ளன. தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் முகம் காட்டியவர்களிற்கு அப்பாலேயே, ஆழமான செயற்பாட்டாளர்கள் உள்ளனர். அவர்களிற்கு உதவிகள் சென்றடைவதில்லை.

நமக்காக போராடி வீழ்ந்தவர்களின் குடும்பங்கள் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிருக்கடியில் இருக்க, நாம் அவர்களின் நினைவேந்தலை யார் செய்வதென மல்லுக்கட்டிக் கொண்டிருப்பது உண்மையில் அவமானமானது.

இதேநிலைமைதான் நீடிக்குமென்றால் யுத்தத்தில் இறந்தவர்களின் குடும்பங்களை நாம் பராமரிக்கிறோம் என நம்பிக்கொண்டிருப்பது, நாளை கட்டுக்கதையாகவும் அமைந்து விடலாம்.



# புலிகளின் ஆரம்ப நாட்கள்!

பீஷ்மர்

## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன?

இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன என்றஇந்ததொடரைஆரம்பிக்கும் போது, அவ்வளவு திட்டமிடாமல், யுத்தத்தின் இறுதிக்கட்டத்தை சொல்லி விடலாம் என்ற நோக்கத்துடன்தான் ஆரம்பித்தோம். ஆனால், கிளைச் சம்பவங்களாக பழைய சம்பவங்கள் சிலவற்றையும், அதன் கிளையாக வேறு சம்பவங்களையும் குறிப்பிட, விடுதலைப்புலிகள் பற்றிய பழைய சம்பவங்களையும் குறிப்பிடும் பெரும் வரலாற்று தொடராக அது மாறிவருகிறது.

யுத்தத்தின் இறுதிக்காலத்தை நோக்கி தொடர் நகர்ந்தாலும், இப்படியான கிளைக்கதைகளுடன் நகர்வதையே வாசகர்கள் விரும்புவதாக நம்மால் உணர முடிகிறது. இந்த தொடர் வெளியாகிக் கொண்டிருக்கும் காலத்தில் வாசகர்கள் எம்முடன் தொடர்புகொண்டு பேசினார்கள். இறுதியுத்த விசயங்களிற்கு சமாந்தரமாக பழைய சம்பவங்களையும் குறிப்பிடும்படி பலரும் அன்பாக கேட்டு வந்தனர்.

ஓல்ட் இஸ் கோல்ட் இல்லையா? பழைய சம்பவங்களை படிப்பதற்கு வாசகர்களிற்கு உள்ள ஆர்வத்தை புரிந்து கொள்கிறோம்.

அதனால் ஒரு பழைய ஆனால் குறிப்பிட வேண்டிய சம்பவமொன்றை இந்த வாரம் குறிப்பிடுகிறோம்.

இலங்கையில் இனமோதல் எப்படி விஸ்பரூபம் எடுத்தது? சிறிய புள்ளியாக ஆரம்பித்த மோதல், அதன் வடிவம் எப்படி விஸ்பரூபம் எடுத்தது என்பதை இந்த சம்பவத்தின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

தமிழ் இளைஞர்கள் யாருமே பிறக்கும்போதே ஆயுதங்களுடன் பிறக்கவில்லை.அவர்களின் முன்னோர்களிற்கும் இந்த ஆயுதங்களை பற்றி தெரியாது. படித்து நல்ல வேலையில் இருந்தால்போதும் என்றுதான் வாழ்ந்தார்கள். ஆனால் 70, 80களில் தமிழ் இளைஞர்கள் ஆயுத வழியை நோக்கி நகர்ந்தனர்.

அதன் விளைவு என்னவானது என்பதை யாருக்கும் புதிதாக சொல்லி புரிய வைக்க வேண்டியதில்லை. தமிழ் மக்களின் பிரச்சனைகளை சிங்கள அரசுகள் புரிந்துகொண்டு, அதை தீர்க்க முயற்சித்திருந்தால், இந்த அழகிய தீவு ஒரு சொர்க்கபூமியாக மாறியிருக்கும்.

இந்த தொடர் தனியே பழைய சம்பவங்களை மீட்டிப்பார்க்கும் தொடரல்ல. இரண்டு இனங்களிற்கிடையிலான முரணால் எப்படியான வளர்ச்சியை ஆயுதவழிப் போராட்டம் பெற்றது, ஆயுதவழி போராட்ட அனுபவமற்ற இனமொன்று எப்படி அந்த பெரிய எல்லையை தொட்டது, அதற்கான பின்னணி காரணங்கள் என்ன என்பதையும் கூடவே உணர்த்தவே இந்த தொடர்.

ஆயுதங்களே அறிந்திராத ஒரு தலைமுறை, பெரும் இராணுவ படையணிகளை எப்படி கட்டியமைத்தது என்பது தனியே சம்பவங்களின் தொகுப்பல்ல. விட்டுக்கொடுக்காத இனப்பிரச்சனை முரண்பாட்டின் விளைவுகளையும் புரிய வைப்பதற்கே இந்தமுயற்சி.ஆயுதங்களையே அறியாத பரம்பரை, நமது என குறிப்பிட்டிருந்தோம்.

இளைஞர்கள் ஆயுத வழிக்குள் நுழைந்து, பல இயக்கங்கள் உருவாகி, அதில் புலிகள் முன்னிலைக்கு வந்து, பெரும் இராணுவ கட்டமைப்பாக உருவாகியது வரையான வரலாற்று நிகழ்வில் சுவாரஸ்யமாக பல சம்பவங்கள் உள்ளன.

இந்த வளர்ச்சி ஒரு பிரமாண்ட கட்டிடம் என்றால், அதன் அத்திவாரத்தில் இருக்கும் சம்பவங்களில் ஒன்று உமையாள்புரம் கண்ணிவெடி தாக்குதல்.






விடுதலைப்புலிகளின் ஆரம்ப காலத்தில், ஆயுதங்களை பற்றிய முறையான அறிவில்லாத,'இராணுவப்பயிற்சி பெற்றிருக்காத நிலைமையில், தமது அனுபவங்களின் அடிப்படையில்தான் ஆரம்ப தாக்குதல்களை செய்திருந்தார்கள். பின்னாளில் புலிகளின் வளர்ச்சியை மட்டும் தெரிந்தவர்களிற்கு, இந்த சம்பவங்கள் பெரிய ஆச்சரியமாக இருக்கும்.

புலிகளின் ஆரம்பகால தாக்குதல்களில் ஒன்றைப்பற்றி இந்தவாரம் குறிப்பிடவுள்ளோம். அதற்கு காரணமுள்ளது.

வரும் ஜூலை மாதம் விடுதலைப் புலிகளின் முதலாவது பெரிய தாக்குதலான திருநெல்வேலி கண்ணி வெடி தாக்குதல் நடந்த மாதம். அந்த சமயத்தில் பலரும், அதுதான் புலிகளின் முதலாவது தாக்குதல் என்று எழுதுவார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. திருநெல்வேலி தாக்குதலிற்கு இரண்டு மாதங்கள் முன்னரே உமையாள்புரம் தாக்குதலை புலிகள் செய்து விட்டனர். அந்த நாட்களை பற்றிய சில தகவல்களை இந்த வாரம் குறிப்பிடுகிறோம்.

தமிழர்களிற்கு ஆயுதப்போராட்டம் 70,80களின் புதிய விடயம். தமிழர்களிற்கு ஆயுதப்பரிசயத்திற்கும் வாய்ப்பிருக்கவில்லை. இந்த நிலைமையில் தான் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்தது. ஆயுதம், வெடிபொருளை பற்றி எதுவுமே தெரியாத நிலையில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஆரம்பித்த போராட்டம்தான் இவ்வளவு விஸ்பரூபம் எடுத்திருந்தது.

*1982* இல் விடுதலைப்புலிகள் பொன்னாலையில் கடற்படையினர் மீது கண்ணிவெடி தாக்குதவ் நடத்த திட்டமிட்டனர். அப்போது காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிய அப்பையா என்பவர்தான் புலிகளிற்குள் ஓரளவு வெடிபொருள் அறிவை கொண்டிருந்தார். காரணம், சீமெந்து தொழிற்சாலையில் கற்களை உடைக்க வெடிபொருள் பாவனையிருந்தது. அந்த பகுதியில் பணியாற்றியதால் அப்பையா அண்ணைக்கு வெடிமருந்து பரிச்சயம் இருந்தது.

ஆனால் வெடிமருந்தை பற்றிய அடிப்படையான பரிச்சயம்தான் அவருக்கு இருந்ததே தவிர, இராணுவத் தேவைகளிற்காக பயன்படுத்துமளவு அவரிடம் இருக்கவில்லை. ஆனாலும், எதையும் பூச்சியத்திலிருந்துதானே ஆரம்பிக்க முடியும். புலிகளும் அப்படித்தான் ஆரம்பித்தனர்.

அப்பொழுது புலிகளில் இருந்தவர்களே விரல் விட்டு எண்ணத் தக்களவானவர்கள்தான். இவர்கள் எல்லோரும் சேர்ந்து காரைநகர் கடற்படையினர் மீது ஒரு தாக்குதல் நடத்த திட்டமிட்டனர். காரைநகர் கடற்படை முகாமிலிருந்து பொன்னாலைக்கு குடிதண்ணீர் எடுக்க தினமும் கடற்படையினர் வருவது வழக்கம். அவர்களைத்தான் புலிகள் குறிவைத்தனர்.

வாகனத்தை அழிக்க கண்ணிவெடி எப்படி வைப்பது? எவ்வளவு வெடிமருந்து சேர்ப்பது? எப்படி வெடிக்க வைப்பது? இது ஒன்றுமே கண்ணிவெடி தாக்குதலிற்கு சென்றவர்களிற்கு தெரியாது.

ஒரு சிறிய பைப்பிற்குள் வெடிமருந்தை நிரப்பினார்கள். அதுதான் கண்ணிவெடி. வாகனத்தை சிதைக்க அந்தளவு வெடிமருந்து போதுமாக இருக்குமென அவர்கள் நினைத்தார்கள்.

அதை வெடிக்க வைக்க வேண்டும். எப்படி வெடிக்க வைப்பது?

அதற்கு ஜெனரேட்டரை பாவிக்கலாமென திட்டமிட்டார்கள். பின்னாளில் சிறிய பற்றரிகள், ரிமோட் கொன்ரோல்களின் மூலமெல்லாம் குண்டுகளை வெடிக்க வைத்த புலிகள், தமது முதல் கண்ணிவெடி தாக்குதலை எப்படி செய்திருக்கிறார்கள் பாருங்கள்.

இதற்காக யாழ் நகரில் ஸ்ரான்லி வீதியிலுள்ள கடையொன்றில் ஜெனரேட்டர் வாங்கப்பட்டது. ஜெனரேட்டர் அப்போது பெரிய விசயம். அதை அப்பையா அண்ணைதான் வாங்கியிருந்தார்.

ஜெனரேட்டர் வாங்கியாயிற்று. பைப்பில் கண்ணிவெடி தயாரித்தாயிற்று. முதலாவது கண்ணிவெடி தாக்குதல் நடத்த வேண்டும். பரபரப்புடன், ஒரு நாளை தெரிவுசெய்தனர்.

பொன்னாலை பாலப்பகுதியில் கண்ணிவெடியை புதைத்து விட்டு, கடலிற்குள் இருக்கும் சிறிய நிலப்பரப்பில் பதுங்குவதென்றுதான் முன்னர் திட்டமிட்டிருந்தனர். என்றாலும், பின்னர் அந்த திட்டத்தை மாற்றி, தரைப்பக்கத்திலேயே பதுங்கினார்கள்.

எதிர்பார்த்திருந்ததை போல கடற்படை வாகனம் வந்தது. கண்ணிவெடிக்கு கிட்டவாக வர, ஜெனரேட்டரை ஸ்ராட் செய்து, மின்சார இணைப்பை கொடுத்தனர். வாகனம் கிட்ட வர, கண்ணிவெடி வெடித்தது.

இந்த சம்பவத்தை போராளிகள் பின்னாளில் கொஞ்சம் நகைச்சுவை உணர்வுடன் குறிப்பிடுவார்கள்.

அது எப்படியெனில் அப்பையா அண்ணை ஜெனரேட்டரை இயக்கி, மின் இணைப்பை ஏற்படுத்தி கண்ணிவெடியை வெடிக்க வைத்துவிடுவார். ஆனால் கண்ணிவெடியால் வாகனத்திற்கு எந்த சேதமும் கிடையாது. அது சிறிய கண்ணிவெடி. கண்ணிவெடி வெடித்ததும், வாகனத்திற்கு கீழே யாரோ பட்டாசு கொளுத்திப்போட்டுள்ளார்கள் என்பதை போல கடற்படையினர் குனிந்து பார்த்தார்கள் என்றுதான் நகைச்சுவையாக குறிப்பிட்டனர்.

தம் மீது கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டதை கடற்படையினர் தெரிந்து கொண்டனர். இராணுவம் பதிலுக்கு சுட்டதால், தாக்குதலுக்கு போனவர்கள் வேகமாக பின்வாங்கி வந்துவிட்டனர். இராணுவத்தின் தாக்குதலிற்குள் ஜெனரேட்டரை அவர்களால் எடுத்து வர முடியவில்லை. கண்ணிவெடிக்கும் ஜெனரேட்டருக்குமிடையில் இணைக்கப்பட்ட வயர் அப்படியே இருந்தது. வயரை பின்தொடர்ந்து வந்து ஜெனரேட்டரை இராணுவம் எடுத்து விட்டது.


அந்த ஜெனரேட்டரின் மூலம் விசாரணையை இராணுவம் ஆரம்பித்தது. அது ஸ்ரான்லி வீதியில் வாங்கப்பட்டுள்ளதை இராணுவம் கண்டுபிடித்து விட்டது. அந்த கடைக்கு சென்று விசாரிக்க, ஜெனரேட்டர் வாங்கிய பற்றுச்சீட்டில் அப்பையா அண்ணையின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிறகென்ன, அப்பையா அண்ணையும் தேடப்படுபவர் பட்டியலிற்குள் வந்தார். இதன்பின்னரே காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை வேலையை முழுமையாக விட்டுவிட்டு, புலிகளின் உறுப்பினரானார் அப்பையா அண்ணை.

இதேபோல இன்னொரு முக்கிய தாக்குதல் உமையாள்புரம் கண்ணிவெடி தாக்குதல். பொன்னாலை கண்ணிவெடி தாக்குதலில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் உமையாள்புரம் தாக்குதலை திட்டமிட்டனர்.

உமையாள்புரம் தாக்குதலை தலைமை தாங்கியது புலிகளின் மூத்த தளபதி பொன்னம்மான். அவர் பின்னாளில் வெடிமருந்து நிபுணராக விளங்கியவர்.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து பரந்தனிற்கு பாண் வாங்குவதற்காக இராணுவம் வருவது வழக்கம். அந்த இராணுவத்தை புலிகள் குறிவைத்தார்கள்.



**எதிர்பார்த்தது மாதிரியே ஆடும், குட்டிகளும் நூலை தட்டிவிட, இராணுவ ட்ரக் அந்த இடத்திற்கு வருவதற்கு முன்னரே கண்ணிவெடி வெடித்து விட்டது. வெடித்த இடத்திலிருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில் இராணுவ ட்ரக் நிறுத்தப்பட்டு விட்டது.**

பொன்னாலையில் வைத்ததை போன்ற கண்ணவெடி வைத்தால் வேலைக்கு ஆகாது, ஜெனரேட்டர்களை கொண்டு திரிவதெல்லாம் இராணுவ நடவடிக்கைகளிற்கு உதவாது என்பது புலிகள் பற்ற முதலாவது பாடம். ஆகவே வேறு விதமாக சிந்தித்தார்கள்.

இம்முறை தயாரிக்கப்பட்டது, பொறிவெடியை ஒத்தது. அதாவது கண்ணிவெடி புகைப்பட்டு, கண்ணிவெடியில் இணைக்கப்பட்ட ஒரு நூலை வீதிக்கு குறுக்காக நில மட்டத்திலிருந்து சற்று உயரத்தில் கட்டி விடுவார்கள். இராணுவத்தின் வாகனம் போகும்போது, நூல் இழுபட்டு, கண்ணிவெடி வெடிக்கும்!

*1983* பங்குனியில் இந்த தாக்குதல் நடந்தது.

வீதியோரமாக கண்ணிவெடியை புதைத்து, கண்ணிவெடியிலிருந்து நூலைஇழுத்து மறுகரையில் நூதனமாக கட்ட வேண்டும். வீதியோரமாக இருக்கும் கண்ணிவெடியை வாகனத்தில் வரும் இராணுவம் கண்டுவிட கூடாது. நன்றாக உருமறைக்க வேண்டும். இதையெல்லாம் சரியாக செய்ய கொஞ்ச நேர அவகாசம் தேவை.

புலிகள் கண்ணிவெடியை புதைத்துக் கொண்டிருக்கும்போது, அன்று இராணுவம் சற்று நேரத்துடனேயே புறப்பட்டு விட்டார்கள். இராணுவ வாகனம் வந்து கொண்டிருக்கிறது என, கண்ணிவெடி இடத்திற்கு சற்று தொலைவில் நின்ற அவதானிப்பாளரிடமிருந்து தகவல் வந்தது. அவசர அவசரமாக கண்ணிவெடியை புதைத்துவிட்டு, புலிகள் நிலையெடுத்தார்கள்.

இராணுவ ட்ரக் கண்ணிவெடிக்கு அருகில் வருவதற்கு முன்னர் திடீரென ஒரு சம்பவம் நடந்தது.

ஆடொன்று தனது குட்டிகளுடன் பிரதான வீதியால் கண்ணிவெடி பகுதிக்கு வந்தது. வீதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நூலில் ஆடு, குட்டிகள் தட்டுப்பட்டால் கண்ணிவெடி வெடித்து விடும். அதை தவிர்க்க, வீதிக்கு போய் ஆட்டை கலைக்கவும் முடியாது. ஏனெனில் மறுகரையில் ஆனையிறவு பக்கமாக இராணுவ ட்ரக்கும் பக்கத்தில் வந்துவிட்டது. பற்றைக்குள்ளிருந்து வெளியில் வந்து ஆட்டை கலைக்க முடியாது. இராணுவத்திற்கு சந்தேகம் வந்துவிடலாம், அல்லது துப்பாக்கியால் சுட்டுவிடவும் வாய்ப்பிருந்தது.

இப்படியான சந்தர்ப்பங்களில் நடப்பவை நடக்கட்டுமென்று இருந்து, நிலைமைக்கேற்ப அடுத்த முடிவை எடுப்பதுதான் ஒரே வழி. புலிகள் அதைத்தான் செய்தனர்.

எதிர்பார்த்தது மாதிரியே ஆடும், குட்டிகளும் நூலை தட்டிவிட, இராணுவ ட்ரக் அந்த இடத்திற்கு வருவதற்கு முன்னரே கண்ணிவெடி வெடித்து விட்டது. வெடித்த இடத்திலிருந்து சுமார் *150* மீற்றர் தொலைவில் இராணுவ ட்ரக் நிறுத்தப்பட்டு விட்டது.

இரண்டாவது தாக்குதலும் குறிதவறி விட்டது!


இந்த சமயத்தில் பரந்தன் வீதியால் முல்லைத்தீவு முகாமிலிருந்து வாகனத்தில் ஒரு ரோந்து அணி வந்தது. கண்ணிவெடி தாக்குதல் திட்டம் பிசகியதும், புலிகள் வீதிக்கு ஏறினார்கள். அப்பொழுது அவர்களும் இராணுவச்சீருடைதான் அணிந்திருந்தனர். இராணுவச் சீருடையில் சிலர் வீதிக்கு வருவதை அவதானித்த, முல்லைத்தீவு இராணுவத்தினர், தமது சகாக்கள்தான் அவர்கள் என நினைத்து சிரித்தபடி வந்துள்ளனர்.

லெப்.செல்லக்கிளிதான் அவர்கள் மீது முதலில் துப்பாக்சூடு நடத்தினார். இந்த இடத்தில் பெரும் சண்டை நடந்தது. புலிகளின் அணிகள் மூன்று பிரிவாக பிரிந்து விட்டனர்.

கிட்டு உள்ளிட்டவர்கள் ஒரு அணியாகவும், ராஜேஷ், கணேஷ் உள்ளிட்டவர்கள் ஒரு அணியாகவும், சந்தோசம், பஷீர் காக்கா, பொன்னம்மான் உள்ளிட்டவர்கள் இன்னொரு அணியாகவும் பிரிந்து பின்னர் தமது இருப்பிடங்களிற்கு வந்து சேர்ந்தனர்.

இந்த சமயத்தில் நடந்த இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். அதை அடுத்த வாரம் குறிப்பிடுகிறோம்.

# அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் மறக்கப்பட்ட பக்கம்





✎ தமிழ்செல்வன்

முன்னாள் யாழ் மாவட்ட எம்.பி அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் முதலாவது ஆண்டு நினைவுநாள் கடந்த 02ம் திகதி அனுட்டிக்கப்பட்டது. அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் நினைவுநாள் நிகழ்வில் பலர் உரையாற்றிய போதும், அவரைப்பற்றிய முழுமையான சித்திரத்தை உருவாக்க முடியவில்லை. கொஞ்சம் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நினைவுநாள், நிறைய அரசியல் மேடையாக வழக்கமான தமிழ் மேடையாகவே அது முடிந்தது.

பொதுவாகவே நமது சமூகத்தில் ஒரு இயல்புண்டு. மரணமடைந்தவர்களை அதீத மேன்மைப்படுத்தியே பேசுவோம். அந்த மேன்மையுடன் அவரது உண்மையான வரலாற்றை பேசுவதில்லை. இறந்தவருக்கான



மேன்மையென்பது நாம் சொல்லும் முறையிலேயே இருக்க வேண்டுமே தவிர, மேன்மையென்ற பெயரில் ஒருவரது வாழ்க்கையையே மாற்றும் போக்கு, வரலாற்றுக்கு நாம் இழைக்கும் அநீதியாகும்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் நினைவுநாளில் நான்கைந்து பேர் உரையாற்றினார்கள். ஆனால் யாருமே அவரது முழுமையான வரலாற்றை பேசியிருக்கவில்லை. முழுமையான வரலாறென சொல்வது அவரது அரசியல் வாழ்விலிருந்த பேசப்படாத காலத்தை.

எல்லோருடைய வாழ்விலும் சில பேசப்படாத காலங்கள் இருக்கும். ஆனால்அரசியல்வாழ்க்கையிலிருக்கும் ஒருவருக்கு, அந்த காலப்பகுதியில் பேசப்படாத காலம் இருக்க முடியாது. அப்படியொரு காலத்தை ஒளித்து வைத்துவிட்டு, பொதுவாழ்வில் இருப்பவர்கள் யாரும் ஓடி ஒளிந்து விட முடியாது.

வரலாறு மிகக்கடுமையான ஆசான் என்பார்கள். நாம் கற்க மறுத்தாலும், அது கற்பித்தே தீரும்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இளமைக்கால அரசியல் ஈடுபாடு, அவர் எப்படி அகில இலங்கை தமிழ் காங்கிரசின் செயற்பாட்டாகி, அதன் முன்னணிக்கு வந்தார் என்பதை பற்றி நிறைய பதிவுகள் உள்ளன. அதை மீள நினைவூட்ட வேண்டியதில்லை.

அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கு மட்டுமல்ல, அகில இலங்கை தமிழ் காங்கிரசிற்கும் கண்ணுக்கு தெரியாத மறுமலர்ச்சி சம்பவமொன்று உள்ளது. இந்த மறுமலர்ச்சி சம்பவம் பற்றி யாருமே பகிரங்கமாக இதுவரை பேசியதில்லை. இதை பேசாமல் தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னகர முடியாது.

2000 ஆம் ஆண்டு ஜனவரி 05ம் திகதி குமார் பொன்னம்பலம் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார். குமாரின் மரணத்துடன், அகில இலங்கை தமிழ் காங்கிரசின் செயற்பாடு கிட்டத்தட்ட உறைநிலைக்கு சென்றுவிட்டது. குறிப்பாக, அப்பொழுது கொழும்பில் சட்டத்தரணியாக செயற்பட்டு வந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தி கட்சி அரசியல் செயற்பாட்டில் இருந்து ஒதுங்கிவிட்டார்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், பின்னர் தமிழரசுக்கட்சியில் இருந்தார். ஆனால் இந்த இரண்டு கட்சிகளையும் விட அவர் ஆத்மார்த்தமாக இரண்டு ஆயுத அமைப்புக்களுடன் நெருக்கமாக செயற்பட்டிருந்தார். இதை யாரும் குறிப்பிடுவதில்லை.

முதலாவது விடுதலைப்புலிகள். விநாயகமூர்த்தி கொழும்பில் தங்கியிருந்தபோது, அவர் ஏதோ ஒருவிதத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளிற்கு ஒத்தாசையாக இருந்தார். விடுதலைப்புலிகளின் சில நடவடிக்கைகளிற்கு வெளிப்படையான ஒத்தாசையாக இருந்தார். சிலவற்றை அவரும் புலிகளும் ஒருவருக்கு ஒருவர் சொல்லாமல், ஆனால் தெரிந்தே செய்தார்கள். புலிகளிற்கும் அவருக்குமிருந்த பிணைப்பு ஆழமானது.

அதேபோல அவர் நெருக்கமாக இருந்த இன்னொரு ஆயுத அமைப்பு புளொட். அவர் உயிருடன் இருந்தவரை புளொட்டின் சட்டத்தரணியாக இருந்தார். புளொட்டின் புனர்வாழ்வு பிரிவாக இயங்கிய ஜிஸிஸிதி தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் செயலாளராக இருந்தார். தலைவராக தாராகி சிவராம் செயற்பட்டார்.

2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தேர்தலில் பங்குபற்றும் எண்ணத்துடன் இருக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்கம்போல எல்லா இடங்களிலும் போட்டியிட தயாரானது. யாழிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ஆயுத இயக்கங்களாக இருந்து அரசியல் கட்சிகளாக மாறிய கட்சிகளிற்குமிடையில் அப்பொழுது நல்ல உறவிருக்கவில்லை. இரண்டு தரப்பும் ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டு வந்தனர். அப்பொழுது புளொட்டுடன் விநாயகமூர்த்தி நல்ல உறவில் இருந்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஒரு அழுத்தம் கொடுக்கலாமென்ற நோக்கத்துடன், யாழில் அப்பாத்துரை விநாயகமூர்த்தியை களமிறக்கியது புளொட்தான். இது பலருக்கு ஆச்சரியமான தகவலாக இருக்கும்.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை விநாயகமூர்த்தியிடம் அப்போதும் இருக்கவில்லை. அவநம்பிக்கையுடன் இருந்தவரை புளொட்தான் யாழ்ப்பாணத்திற்கு "அள்ளி" வந்தது. அப்படித்தான் குறிப்பிட வேண்டும். ஏனெனில், அப்பொழுது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானத்தில் வருவதென்றால் உடனடியாக சாத்தியமில்லை. முற்பதிவு செய்துவிட்டு, இரண்டு மூன்று மாதமாவது காத்திருக்க வேண்டும். தேர்தலில் போட்டியிடுவதென்றால் இப்படி வர முடியாது. பின்னர் இந்த போக்குவரத்து சேவையில் புளொட்டிற்கு இருந்த கோட்டாவை பயன்படுத்தி, புளொட் உறுப்பினர் என்ற பதிவிலேயே விநாயகமூர்த்தி யாழ்ப்பாணம் வந்தார்!

தேர்தலில் போட்டியிடும் எண்ணமேயில்லாமல் இருந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தியை கிட்டத்தட்ட வலுக்கட்டாயமாக அழைத்து வந்து தேர்தலில் போட்டியிட வைத்து எம்.பியாக்கியது புளொட்!

அப்பாத்துரை விநாயகமூர்த்தி தேர்தலில் வெற்றிபெற்றதும், உத்தியோகபூர்வ வாகனமொன்றை பெற்றுக் கொண்டார். அதற்கு சாரதி தேவைப்பட்டபோது, புளொட் பிரமுகர் ஒருவரின் வாகன சாரதியாக இருந்த புளொட் உறுப்பினர் ஒருவரையே சாரதியாக்கினார். வன்னிக்கு சென்று வரும்போது, அந்த சாரதியுடனேயே அப்பாத்துரை விநாயகமூர்த்தி சென்று வந்தார். அப்போதை பாராளுமன்ற உறுப்பினர்களில், தமது சொந்த வாகனத்தில், சொந்த சாரதியுடன் புதுக்குடியிருப்பு வரை சென்றுவர புலிகள் அனுமதித்திருந்த ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்திதான்!

தமிழ் காங்கிரசின் மறுமலர்ச்சியொன்று சத்தமின்றி நடந்ததாக ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஒருவகையில் பார்த்தால், அந்த மறுமலர்ச்சிக்கு புளொட்டும் வெளித்தெரியாத காரணமாக அமைந்திருக்கிறது.

குமார் பொன்னம்பலத்தின் மரணத்தின் பின் தமிழ் கார்ங்கிரஸ் உறைநிலைக்கு சென்றிருந்தது. அதை உடைத்து, தமிழ் காங்கிரசை மீளவும் இயங்கு நிலைக்கு கொண்டு வந்தது அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் வெற்றி.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி பின்னர் தமிழ் காங்கிரசிலிருந்து ஒதுங்கி, தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கமாக இருந்தார். அவரது பங்களிப்பை காங்கிரஸ் இப்பொழுது பகிரங்கமாக பேச விரும்புவதில்லை. அதேபோல, புளொட் அமைப்புடன் முதலமைச்சர் கூட்டணி வைத்தால் அதில் இணைய மாட்டோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறியுள்ளது.

இதைத்தான் வரலாற்றின் நகைமுரண் என்பது!

கே.ராகோத்தமன்

# ராஜிவ் ஏன் பிரபாகரனிற்கு எதிரியானார்?

உளவுத்துறைகளின் முதன்மையான பணி, நம்முடைய ஆபத்துகளை முன்கூட்டியே கண்டறிந்து, எச்சரிக்கை அளிப்பதுதான். பல்வேறு இயக்கங்களால், பல்வேறு காரணங்களுக்காக ராஜிவின் உயிருக்கு ஆபத்து உண்டு என்று நன்கு அறிந்த நமது உளவுத்துறை, விடுதலைப் புலிகள் விஷயத்தில் மட்டும் தொடக்கம் முதலே அலட்சியமாகவும் அக்கறை ஏதுமில்லாமலும் நடந்து வந்திருக்கிறார்கள்.






இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த காலத்தில் நடந்த அட்டூழியங்களை விவரிக்கும் மிகப் பிரம்மாண்டமான ஆவணம் ஒன்று (ஏற்கெனவே இது குறித்துக் குறிப்பிட்டிருக்கிறேன் சாத்தானின் படைகள் என்ற புத்தகம்) புலிகள் இயக்கத்தால் தயாரிக்கப்பட்டது.

இரண்டு வால்யூம்களாக வெளியிடப்பட்ட அந்தப் புத்தகம், சென்னையில் அண்ணா சாலையில் உள்ள ஓர் அச்சகத்தில்தான் அச்சிடப்பட்டது. சி.பி.ஐ. அதனைக் கைப்பற்றியதற்கு முன்னால், அது குறித்த அடிப்படைத் தகவல்கள் கூட றோவுக்கோ ஐபிக்கோ தெரிந்திருக்கவில்லை!

அந்தப் புத்தகம், வெறும் பிரசாரப் புத்தகமல்ல. ராஜிவ் காந்தியை விடுதலைப் புலிகள் ஏன் கொன்றார்கள் என்பதற்கான காரணங்களை மிகத் துல்லியமாக நாம் அந்தப் புத்தகத்தின் பக்கங்களிலிருந்து பெற முடியும்.

ஏப்ரல் 1, 1990 ம் ஆண்டு விடுதலைப் புலிகள் வெளியிட்ட ஓர் அறிக்கையில்,




I am not against people, I am not against the Indian Government, I am against the former leadership' 'நான் இந்திய மக்களுக்கு எதிரானவனோ, நான் இந்திய அரசின் எதிரானவனோ இல்லை, நான் முன்னாள் தலைமைக்கு எதிராக இருக்கிறேன் ' என்று பிரபாகரன் மிகவும் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

இது அனைத்து றோ, ஐ.பி. அதிகாரிகளுக்கும் தெரியும். அப்படியிருந்தும் விடுதலைப் புலிகள் மீது றோ தலைமைக்குத் துளி சந்தேகமும் கிடையாது!

மேற்படி அறிக்கையின் அடிப்படையில்தான் பின்னால், பத்திரிகையாளர் அனிதா பிரதாப் பிரபாகரனை வவுனியா காட்டில் சந்தித்து பேட்டி கண்டபோது, 'ராஜிவ் காந்தி மீது உங்களுக்கு அப்படியென்ன விரோதம்?" என்று கேட்டார்.

பிரபாகரன் அதற்கு ஐந்து அடுக்குகளாகக் காரணத்தைச் சொல்லியிருந்தார்.

1. இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பது எங்கள் கொள்கைக்கு விரோதமானது.
2. அப்படியும் நான் ராஜிவை நம்பினேன்.
   இந்தியா எமது மக்களுக்கு நல்லது செய்யும் என்று உளமார எண்ணி, அதையே எங்கள் மக்களுக்கும் எடுத்துச் சொல்லி (சுதுமலைக் கூட்டம்) ஒப்பந்தத்தை விருப்பமில்லாவிட்டாலும் ஏற்றோம்.
3. அந்த நம்பிக்கையை, திலீபனை இறக்கவிட்டு வேடிக்கை பார்த்த இந்திய ராணுவத்தின் மெத்தனம் சிதைத்துவிட்டது. இந்திய அரசும் வாய் திறக்காமல் இருந்துவிட்டது.
4. எங்களை ஆயுதங்களைக் கீழே போடச் சொல்லிவிட்டு, எங்களிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைப் பிற ஈழ இயக்கங்களுக்கு அளித்தார்கள்.
5. இலங்கை கடற்படையால் பிடிக்கப்பட்ட எங்களுடைய பதினேழு தளபதிகளை, போர் நிறுத்தக் காலத்தில் இந்திய ராணுவத்தின் பொறுப்பில் ஒப்படைத்தபோது, அவர்கள் வேண்டுமென்றே இலங்கை அரசிடம் அவர்களை ஒப்படைத்து துரோகம்செய்தார்கள்.

ராஜிவ் காந்தி வரை தொடர்பு கொண்டு, நான் அவர்களை விடுவிப்பதற்காகப் போராடினேன். பலனில்லை.

என் தளபதிகள் சயனைட் அருந்தி உயிர்விட வேண்டியதாயிற்று.

ஐ.பி.கே.எஃப் இலங்கைக்கு அனுப்பப்பட்டது, இலங்கைத் தமிழரின் நலனுக்காக அல்ல.


தன் அண்டை நாட்டு விஷயத்தில் தன்னுடைய பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளைத் தவிர்க்க முற்றிலும் சுயநலமுடன் இந்தியப் பிரதமர் மேற்கொண்ட முயற்சியே . அது என்று அழுத்தம் திருத்தமாக அந்தப் பேட்டியில் பிரபாகரன் பேசியிருப்பார்.

முத்தாய்ப்பாக, 'அவர் என் எதிரி' என்றே குறிப்பிடுவார்.

ஏப்ரல் 10, 1990ல் வெளியான அந்தப் பேட்டியைப் படித்த எந்த ஒரு உளவுத்துறை அதிகாரியும் ராஜிவுக்கு எதிரான சக்திகளின் பட்டியலில் விடுதலைப் புலிகளை முதலிடத்தில் வைப்பார்கள்.

ஆனால் படுகொலைக்குப் பிறகு சி.பி.ஐக்குச் சரியான ஆதாரங்கள் கிடைத்து நாங்கள் வழக்கில் முன்னேறத் தொடங்கிய சமயத்திலும் 'விடுதலைப்புலிகள் இதனைச் செய்திருக்க மாட்டார்கள்' என்று றோவின் தலைவர் சொல்கிறார் என்றால் நமது உளவுத்துறையை எந்தளவு நம்மால் நம்ப இயலும்?

எப்போது தமிழ்நாட்டில் துணிகரமாக வந்து இறங்கி பத்மநாபாவைக் கொன்றுவிட்டுத் திரும்பினார்களோ, எப்போது அடுத்த குறி. வரதராஜப் பெருமாள் என்று முடிவு செய்து திரும்பவும் ஆள் அனுப்பினார்களோ, எப்போது தமிழகத்தில் தனக்கென



ஓர் உளவு அமைப்பு தேவை என்று முடிவு செய்து முருகனையும் அவரது டீமையும் அனுப்பிவைத்தார்களோ, அப்போதே முடிவு செய்துவிட்டார்கள் அடுத்த இலக்கு ராஜிவ் காந்தி என்று.

அக்டோபர் 1990ல் தீர்மானித்து ஜனவரியில் ஆள்களை அனுப்பத் தொடங்கி மே மாதம் திட்டமிட்டபடி காரியத்தை முடித்தது விடுதலைப் புலிகள்.

படுகொலைச் சம்பவம் நடந்து முடிந்தபிறகு, உடனடியாக லண்டனில் அப்போது இருந்த கிட்டு, 'நாங்கள் செய்யவில்லை, நாங்கள் சம்பந்தப்படவில்லை' என்று அறிக்கைகள் விட்டுக்கொண்டே இருந்தார்.

அதன் எதிரொலியாகத்தான் றோவின் தலைவரும் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருந்தார்.

இந்த எரிச்சல் ஒருபுறம் இருக்க, அதே கிட்டு தனது அறிக்கையொன்றில், 'நாங்கள் செய்யவில்லை. யார் செய்தது என்பதை இந்தியக் காவல் துறை கண்டுபிடிக்கட்டும்' என்றும் சொல்லியிருந்தார். அவர் அப்படி சொன்ன நம்பிக்கையின் பின்னணி மிகவும் சுவாரசியமானது. (தொடரும்)

# மருத்துவ மூடநம்பிக்கைகள்... நம்பினால் கைவிடப்படுவீர்கள்!

நம்பிக்கையின் பெயரில் சில பழக்க வழக்கங்களைத் தொன்றுதொட்டு நாம் பின்பற்றி வருகிறோம். அவற்றில் சில சரியாக இருக்கலாம்; சில தவறாகவும் இருக்கின்றன.

ஆரோக்கியம் குறித்த தவறான நம்பிக்கைகளால் உடல்நலம் மேலும் பாதிப்படையலாம் என்பதால் அவற்றிலிருந்து விடுபட வேண்டியது அவசியம். தவறான அந்தப் பழக்கவழக்கங்கள் பற்றிப் பார்ப்போம்.

### மஞ்சள் காமாலைக்குச் சூடு


மஞ்சள் காமாலைக்குச் சூடு போடுவது, சூடு போட்ட இடத்தில் பச்சிலையை வைத்துக் கட்டுப் போடுவது என்பன போன்ற பழக்கங்கள் நடைமுறையில் உள்ளன. அவை தவறானவை. சூடுபோட்ட இடத்திலிருந்து மஞ்சள் நிறத்தில் நீர் வடிவதால், தேவையில்லாத பித்தநீர் வெளியேற்றப்படுவதாக தவறாக நினைக்கிறார்கள். மஞ்சள் காமாலை மட்டுமல்ல, வைரஸ் தொற்று, கல்லீரல்



பாதிப்பு, பித்தநீர் அடைப்பு, புற்றுநோய் எனப் பல காரணங்களாலும் நீர் வடியும் என்பதை நோயாளிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

### கருவைக் கலைக்குமா பப்பாளி?


பப்பாளிப் பழம் சாப்பிட்டால் கரு கலைந்துவிடும்என்றதவறானஎண்ணம் மக்களிடம் இருக்கிறது. பப்பாளிப் பழத்தில், விற்றமின் ஏ, சி, கல்சியம் மற்றும் இரும்புச்சத்து என எண்ணற்ற சத்துகள் அடங்கியுள்ளன. எனவே, பப்பாளிப் பழத்தால் நன்மைகள்தான் அதிகம். அதில் எந்தத் தீமையும் இருப்பதாக விஞ்ஞானப்பூர்வமாக



நிரூபிக்கப்படவில்லை. பப்பாளிப்பழம் சாப்பிடுவதால் கரு கலையாது.

### அடிக்கடி எடை பார்க்கலாமா?

குழந்தைகளை அடிக்கடி எடை போட்டுப் பார்த்தால் அவர்கள் நோஞ்



சானாகி விடுவார்கள் என்ற தவறான கருத்து மக்களிடம் நிலவுகிறது. ஆனால், குழந்தை பிறந்த உடனேயே எடை போட்டுப் பார்ப்பதுடன், தொடர்ந்து குழந்தையின் வளர்ச்சி, ஆரோக்கியத்தை அறிந்துகொள்வது அவசியம். மேலும் அவர்களுக்குத் தரும் மருந்தை அளவிட்டுக் கொடுப்பதற்கும் எடை போட்டுப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.



### வலிப்புக்குச் சாவிக்கொத்து?

'காக்கா வலிப்பு' வந்தால் அவர்களது கையில் சாவி கொடுப்பது வழக்கமாக இருக்கிறது. இது தவறான நம்பிக்கை. இரும்புக்கும் வலிப்பு நோய்க்கும் எப்படி முடிச்சுப் போட்டார்கள்



என்று தெரியவில்லை. மூளையிலுள்ள நரம்பிழைகளில் மின்னோட்டம் சீராக இல்லாமல், அதிகமாகக் கடத்தப் படுவதாலேயே வலிப்பு ஏற்படுகிறது. அப்படி வலிப்பு ஏற்படும்போது நோயாளிக்கு முதலுதவி செய்ய வேண்டியது அவசியமாகும். அவர் கையில் சாவியைக் கொடுப்பதால் எந்தப் பயனுமில்லை. மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்த வலிப்பு நோய்க்கான மருந்துகளால் மட்டுமே முடியும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### பொன்னுக்கு வீங்கியும் நெக்லஸும்


'பொன்னுக்கு வீங்கி' எனப்படும் புட்டாளம்மை வந்தால் 'நெக்லஸ்' மாட்டிக்கொள்வது வழக்கமாக உள்ளது. உமிழ்நீர்ச் சுரப்பிகளில்



ஒன்றான பெரோடிட் என்ற சுரப்பியில் (Parotid Glands) பாதிப்பு ஏற்படுவதால் காதின் முன்புறம் ஏற்படும் பாதிப்பே 'பொன்னுக்கு வீங்கி'. வீக்கத்துடன் காணப்படும் இந்தப் பாதிப்புக்கு, 'பொன்னுக்கு வீங்கி' என்று பெயர் வைத்ததால், பொன்னாலான நகையை அணிவதன்மூலம் நோய் விலகிவிடும் என்று கருதி தங்க நெக்லஸை வாங்கி அணிய ஆரம்பித்து விட்டார்கள். இந்த நோய், ஆண்களுக்கு விந்தணுக்களை உற்பத்தி செய்யும் விதைப்பகுதியைப் பாதித்து அதனால் ஆண்மைக் குறையை ஏற்படுத்தக்கூடும். எனவே, மருத்துவரிடம் காண்பித்துச் சிகிச்சை பெறுவதே சரியானது.

### பாம்புக்கடிக்குக் கல்

பாம்பு கடித்தால் அந்த இடத்தில் சிலவகைக் கற்களை வைத்துக் கட்டும் பழக்கம் சில கிராமங்களில் இன்றும் உள்ளது. அந்தக் கல் விஷத்தை உறிஞ்சி எடுத்துவிடும் என்று மக்கள் நம்புவதே காரணம். பாம்புகளில் சுமார் 3 ஆயிரம் வகைகள் இருக்கின்றன. இருந்தாலும், நாகப்பாம்பு (நல்ல பாம்பு), கட்டுவிரியன், கண்ணாடி விரியன், கடல் பாம்பு போன்றவைதான் விஷம் உள்ளவை. மற்ற பாம்புகள் கடிப்பதால் விஷம் இல்லை.



விஷப்பாம்புகள் கடித்து, நோயாளி பாதிக்கப்பட்டால், உடனடியாக அவரை மருத்துவமனையில் சேர்த்து, விஷ முறிவுக்கான மருந்து (ASV - Anti Snake Venom) கொடுக்கப்பட வேண்டும். கடல் பாம்பு கடித்தால், அதற்கென விசேஷ விஷமுறிவு மருந்து இருக்கிறது. சிலர் பாம்பு கடித்தால், அந்தப் பாம்பைப் பிடித்தோ, அடித்தோ மருத்துவமனைக்குக் கொண்டு வருவார்கள். இது, அந்தப் பாம்பு விஷமுள்ளதா? இல்லையா? என்பதைக் கண்டறிய உதவும்.

### ஆண் கருத்தடை அவஸ்தையா?

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு குழந்தைகள் பெற்றவர்களுக்குப் பெரும்பாலும் இந்தத் திட்டம் வலியுறுத்தப்படுகிறது. பெண்களுக்கு



மட்டுமின்றி, ஆண்களுக்கும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை எளிதானது. விந்தணுவைக் கடத்தக்கூடிய 'வாஸ் டெஃபெரென்ஸ்' (Vas Deferens) என்ற குழாய் துண்டிக்கப்பட்டு, விந்தணு வெளியேறாமல் அறுவை சிகிச்சை செய்யப்படும். வாசெக்டமி (Vasectomy) என்ற அந்த அறுவை சிகிச்சை செய்யப்படுவதால், அந்த நபரால் உடலுறவில் ஈடுபடமுடியாது என்ற தவறான கருத்து மக்களிடம் நிலவுகிறது. இந்த அறுவை சிகிச்சையால், குழந்தை பிறப்பது மட்டுமே தடுக்கப்படும். தாம்பத்ய வாழ்க்கையில் எந்தவிதப் பிரச்னையும் ஏற்படாது.

### மருக்களை மாயமாக்குமா மிளகு?




சருமத்தில் மரு வந்தால் சாமிக்கு உப்பும் மிளகும் போட்டால் அது மறைந்துவிடும் என்று சிலர் நம்புகிறார்கள். சருமத்தில், வைரஸ் கிருமிகள் பாதிப்பால், 'வார்ட்' எனப் படும் மருக்கள் தோன்றலாம். விற்றமின் 'ஏ' குறைபாட்டால் கண்ணில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பாதிப்பு ஏற்பட்டு மாலைக்கண் நோய் வருவதுபோல, சருமத்தையும் பாதித்து, அது உலர்ந்து, கைகளின் பின்புறம் மருக்கள் போன்ற முட்கள் ஏற்படலாம். இதுபோன்ற முட்களையும், மருக்களையும் நீக்க மருத்துவத்தில் சிறந்த சிகிச்சை முறைகள் உள்ளன.

### ரத்த அழுத்தம் குறைக்குமா காந்தம்?

கைகளில், காந்தத்தன்மை கொண்ட பிரேஸ்லெட் அணிவதால் ரத்தஅழுத்தம் குறையும் என்ற தவறான



கருத்து நிலவுகிறது. சிலர் ரத்த அழுத்தத்துக்கான மருந்துகளைக்கூட நிறுத்தி விடுவார்கள். பரிசோதனை செய்து பார்த்தால், ரத்த அழுத்தம் குறைந்திருக்காது; அதிகரித்தே காணப்படும். எனவே, காந்த பிரேஸ்லெட், கை கொடுக்காது என்கிற விழிப்பு உணர்வு வேண்டும்.

### பழம் சாப்பிட்டால் சளிப்பிடிக்குமா?


காய்ச்சல், சளித்தொல்லை இருந்தால், பழங்களைச் சாப்பிடக்கூடாது என்பார்கள். பழம் கொடுத்தால் சளி அதிகமாகிவிடும் என்பதே இவர்



களுடைய எண்ணம். உண்மையில், காய்ச்சலும் சளிப்பிடிப்பதும் நுண் கிருமிகளின் பெருக்கத்தால்தான். எனவே, அதற்கான சிகிச்சை மேற்கொள்ளும்போது, பழம் சாப்பிடுவதால் விரைவில் பலன் கிடைக்கும். பழங்களில், உடலுக்கு எதிர்ப்பாற்றலைத் தரக்கூடிய விற்றமின் சி அதிகமாக உள்ளது. விற்றமின்கள் மற்றும் தாது உப்புகளும் ஒக்ஸிகரணத்தைத் தடுக்கும் பொருள்களும் அதிகமென்பதால், இந்தக் காலகட்டத்தில் பழம் கொடுப்பது நோயிலிருந்து விரைவில் விடுபட உதவும்.

### யானையின் சாணம் தீர்வாகுமா?

சிலருக்கு ஒரு கால் மட்டும்



யானையின் கால் மாதிரி பெரிதாக இருக்கும். இதனை, 'யானைக்கால் நோய்' என்பார்கள். இது 'Wuchereria Bancrofti' என்ற நுண்ணிய புழு வடிவ ஒட்டுண்ணியால் ஏற்படக்கூடியது. இதை க்யூலெக்ஸ் (Culex) என்ற கொசுக்கள் மனிதர்களிடம் பரப்புகின்றன. இதனால், நிணநீர்ச் சுரப்பிகள், நிணநீர்க் குழாய்கள், நிணநீர் ஓட்டம் ஆகியவை பாதிக்கப்படுவதால் தொடையில் நெறிக்கட்டி யானைக்கால் போன்று வீங்கிவிடும். இந்த நோய் வந்தவர்கள், யானையின் சாணத்தை மிதித்தால் சரியாகிவிடுமென்று மக்களிடம் தவறான எண்ணமிருக்கிறது. இந்தவகை நோய் பாதித்தவர்களின் கால் வேண்டுமானால், 'யானை'யின் கால்போல இருக்கலாம். ஆனால், எந்தச் சாணமும் இதற்குப் பயன் தராது. இதற்கெனச் சிறந்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைகள் உள்ளன.

### மழையில் நனைந்தால் சளிப்பிடிக்குமா?

யாராவது தும்மல் போட்டால், மழையில் நனைந்துவிட்டீர்களா?



என்று கேட்பார்கள். ஏனென்றால், தடிமல் போன்ற பாதிப்புகள் மழையால்தான் ஏற்படுகின்றன என்று மக்கள் கருதுகிறார்கள். மழைக்காலத்தில் தடிமல் வந்தாலும், அதற்கு ரினோ வைரஸ் (Rhino Virus) போன்ற வைரஸ்களின் தொற்றுதான் காரணமாக இருக்கும். மேலும், தும்மல், தூசு, புகைநெடி ஆகியவற்றாலும்கூட தடிமல் ஏற்படலாம். மழையில் நனைபவர்களுக்குத்தான் தடிமல் வரும் என்று சொல்லமுடியாது.

### அம்மைநோய்க்கு யார் காரணம்?


அம்மை நோய் வந்தால், அதற்கு அம்மன்தான் காரணம் என்று பழியை அம்மன்மீது போடுகிறார்கள். அதனால், சின்னம்மை, தட்டம்மை போன்ற



நோய்கள் வந்தால், மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறாமல் மருந்து மற்றும் ஊசிகளைப் பயன்படுத்தவும் மறுக்கிறார்கள். ஏற்கெனவே, பெரியம்மை நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. சின்னம்மை, தட்டமைக்கும்கூடத் தடுப்பூசிகள் உள்ளன. மேலும், அம்மை வந்தாலும் அதற்கு முறையாக சிகிச்சைகள் செய்ய வழிகள் உள்ளன.

### வாதநோய்க்கு எண்ணெய்?


மூட்டுகளில் வலி, வீக்கம் என எது ஏற்பட்டாலும் அதை வாதநோய் என்று கூறி அதற்கு எண்ணெய் தடவி நீவிவிடுவதை வழக்கமாகக்



கொண்டிருக்கிறார்கள். 'பீட்டா ஹீமோலைட்டிக் ஸ்ட்ரெப்டோ காக்கஸ்' எனும் பக்டீரியாவால் வரக்கூடிய மூட்டுவாதக் காய்ச்சலாகவும் இருக்கலாம். இந்தப் பாதிப்புக்கு முறையாக சிகிச்சை எடுக்கவில்லை என்றால், இதய வால்வுகளைப் பாதித்து இளம்வயதினருக்கு இதயநோயை ஏற்படுத்திவிடும். இது இறப்பையும் ஏற்படுத்தும் அபாயம் இருப்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

### காயமும் ஊசியும்

கைகால்களில் அடிபட்டால் தடுப்பூசி போட்டு, 'டெட்டனஸ்' எனும் நோய் வராமல் தடுக்கவேண்டும்.




ஆனால், இன்றைக்கும் பலர் கைகால்களில் அடிபட்டால் அதைக் கண்டுகொள்ளாமல் அலட்சியமாக இருந்துவிடுவார்கள். அத்துடன் நின்றால் பரவாயில்லை. காயம் பட்ட இடத்தில் சாணத்தைத் தடவும் பழக்கமும் சில பகுதிகளில் இருக்கிறது. இதனால், அவர்களுக்கு மிக எளிதாக 'டெட்டனஸ்' பாதிப்பு ஏற்பட்டுவிடும். பிறந்த குழந்தையின் தொப்புள்கொடியில் சிலர் சாணம் வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இது நஞ்சாகி டெட்டனஸ் நோயால் குழந்தை பாதிக்கப்பட்டு இறந்துவிட நேர்கிறது. எனவே, 'செப்டிக்' ஊசி என்று மக்களால் அழைக்கப்படும் ஊசியை, எந்தக் காயமாக இருந்தாலும் போட்டுக்கொள்ள வேண்டும். இது உயிர் காக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

### மந்திர தந்திரங்களும் மனநலப் பிரச்னைகளும்

ஹிஸ்டீரியா (Hysteria) எனப்படும் மன அழுத்தம் பெரும்பாலும் பெண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக, இவர்களுக்குத் தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம், வயிற்றுவலி, படபடப்பு, மூச்சுவிட இயலாமை போன்ற பல்வேறு பாதிப்புகள் ஏற்படும். இத்தகைய பாதிப்புகளைப் பரிசோதனைகளால் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே,



இவர்களுக்குப் பேய் பிடித்து விட்டதாகக் கருதி மந்திரம், தந்திரம் என மக்கள் வேறுவழியில் செல்வார்கள். சிலர், சாமியார்களிடம் கொண்டுபோய் அவர்களை அடித்துத் துன்புறுத்தி, பேய் ஓட்டுவதாகச் சொல்வார்கள். இவையெல்லாம் தவறான செயல்கள். அவர்களை மனநல மருத்துவரிடம் அழைத்துச் சென்று சிகிச்சை அளிப்பதே சரியானது.

### பேய் அடிக்குமா?

திடீரெனயாராவது இறந்துவிட்டால் அவர்களைப் பேய் அடித்து விட்டதாகக் கூறிக் கதை கட்டுவார்கள்.



இதுபோன்ற திடீர் மரணங்களுக்கு மாரடைப்பு காரணமாக இருக்கலாம். நீரிழிவுநோய், ரத்த அழுத்தம் போன்றவற்றைக் கட்டுப்பாட்டில் வைக்காதவர்களுக்கும் இதயத்தில் பாதிப்பு ஏற்பட்டு அது மாரடைப்பை ஏற்படுத்திவிடும். சிலருக்கு அதிக ரத்த அழுத்தத்தால், மூளையில் ஏற்படும் ரத்தக்கசிவும் மரணத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

### எச்சில் துப்பினால் தொண்டைவலி வருமா?

தொண்டைவலி ஏற்பட்டால், 'நரகலில் துப்பினாயா?' என்று கிராமங்களில் கேட்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். கழிவறைக்குச் சென்று வருபவர்களுக்குக்கூட இதுபோல தொண்டை வலி ஏற்படும் என்று பலரும் நம்பு



கிறார்கள். ஆனால், தொண்டைவலி 'ஸ்ட்ரெப்டோ காக்கஸ்' வகைக் கிருமிகளால் பெரும்பாலும் ஏற்படுகிற்து. அவை பென்சிலின் வகை மருந்துகளுக்கு நன்கு கட்டுப்படும் என்பதே உண்மை.

### பல்வலி போக்குமா பாக்கு?

பாக்கு போடும் பழக்கம் உள்ளவர்



களிடம் கேட்டால், பல்வலிக்காகப் பாக்கு போடுவதாகச் சொல்வார்கள். பல் இடுக்குகள் மற்றும் பற்குழிகளால்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பல்வலி வரும். பாக்கு போடுவதால் பல் இடுக்குகளில் சென்று அவை சேர்வதால் வலி குறைந்ததுபோன்ற உணர்வு ஏற்படும். ஆனால் வாய் கொப்பளிக்கும்போது, மீண்டும் வலி உண்டாகும்என்பதைப்புரிந்துகொள்ள வேண்டும்.

## மாறுகண் அதிர்ஷ்டமா?

மாறுகண் குறைபாடு உள்ளவர்களை அதிர்ஷ்டக்காரர்களாகக் கருதும்



பழக்கம் இருக்கிறது. ஆனால், இந்தக் குறைபாடு உள்ளவர்களுக்குச் சில கோணங்களில் பார்க்கும்போது, பிம்பங்கள் இரட்டையாகத் தெரிவ துண்டு. மாறுகண் உடையவர்கள் வாகனம் ஓட்டுதல், கப்பற்படை, விமானப்படை சார்ந்த பணிகளுக்குச் செல்ல இயலாத சூழல் இருப்பதால் உடனடியாக சிகிச்சை செய்து கொள்வது நல்லது. இந்தக் கோளாறு பிறவிக் குறைபாட்டாலோ, கண்ணைச் சுற்றியுள்ள சிறு தசைக்கு வரக்கூடிய நரம்பு பாதிப்பினாலோ ஏற்படலாம்.

## கருணை காட்டுமா அரச மரம்?

குழந்தையில்லை என்றால் அரச மரத்தைச் சுற்றி வர வேண்டும் என்பார்கள். அதுவும் பெண்தான் சுற்றவேண்டும் என்பார்கள். கணவனிடம் குறைபாடு இருந்தால்,



பெண் அரச மரத்தைச் சுற்றி வருவதால் என்ன பயன்? இருவரையுமே பரிசோதனை செய்து, யாருக்குக் குறைபாடு இருக்கிறதோ, அதை நவீன மருத்துவத் தொழில்நுட்ப உதவியால் போக்கி குழந்தைகள் பெற்று நிம்மதியாக வாழலாம்.

## குழந்தை அழுதால் குடலிறக்கமா?


குழந்தைகள் நீண்ட நேரம் அழு



தாலோ, வயிற்றுவலியால் துடித்தாலோ வாந்தி எடுத்தாலோ குழந்தைக்குக் குடல் இறங்கிவிட்டதாகக் கூறி, அவர்களே சரி செய்ய முயற்சி செய்வார்கள். கிராமப்புறங்களில் இது இன்றைக்கும் பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்காக வயிற்றைப் பலமாகத் தட்டுவது, திருகிவிடுவது, குழந்தையைத் தலைகீழாகத் தொங்க விட்டுச் சுற்றுவது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். இதுபோன்ற செயல்களால் குழந்தை இறக்க வாய்ப்புள்ளது. உணவு செரிமானம் இல்லாமை, குடல் தொற்று போன்ற சாதாரண காரணங்களால்கூட இந்தப் பிரச்னைகள் ஏற்படலாம் என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.


## சிறுநீரகத்தில் சிக்கிக்கொள்ளுமா கல்?

சோறு சமைக்கும்போது, ஆண்களுக் குக் கல்லில்லாத சாப்பாடு கொடுக்க வேண்டும் என்பார்கள். அப்படியென்றால், பெண்ணுக்குக்



கல் உள்ள சாப்பாடு கொடுத்தால் பரவாயில்லையா? என்று கேட்டால் பெண்களின் வயிற்றில் கல் சென்றால், அது சிறுநீர் வழியாக எளிதாக வந்துவிடும்; ஆண்களுக்குத்தான் மாட்டிக்கொள்ளும் என்பார்கள். இது, தவறான எண்ணம். சிறுநீரகக் கல் என்பது சிறுநீரகம் மற்றும் சிறுநீர் வெளியே செல்லும் குழாய்களில் பல்வேறு சிறுநீரக, வளர்சிதை மாற்றங்களால் ஏற்படக்கூடியது. மாறாக உணவில் கல் இருந்தால் அது மலம் கழிக்கும்போது வெளியேறிவிடும். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், உணவில் கல் இருந்தால் சிறுநீரகத்துக்குப் போவதில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## மனிதப் பற்களுக்கு விஷமுண்டா?



மனிதப் பற்களுக்கு விஷம் உண்டு என்று சிலர் கருதுகிறார்கள். நம் ஆட்கள் பல்லையும் ஆயுதமாக மாற்றியதால் ஏற்பட்ட விளைவு இது. பாம்பு போல நம் பற்களுக்கு விஷமில்லை. ஆனால் வாயில் ஏராளமான நுண்கிருமிகள் இருக்கும். பற்கள் பட்டுத் தொற்று ஏற்படலாம். எனவே, மனிதர்கள் டெட்டனஸ் வராமல் தடுக்கத் தடுப்பூசி போட்டுக்கொள்வது அவசியம்.

## தொட்டால் தொற்றுமா?



தொழுநோய், முறையற்ற உடலுற வின் காரணமாக வருவதாகச் சிலர் நம்புகிறார்கள். அதுவும் எம்.ஆர்.ராதா நடித்த 'ரத்தக் கண்ணீர்' படத்தில், அவருக்குத் தொழுநோய் வந்ததுபோல 'மேக்கப்' போட்டிருப்பார்கள். முறையற்ற உடலுறவால் எய்ட்ஸ் நோய் மட்டுமல்லாமல் வேறு சில தொற்றுநோய்கள் ஏற்படலாம். தொழுநோய் ஏற்படாது.

## கண்களில் எண்ணெய் விடலாமா?


'காதில் புழு எடுக்கிறேன், தலையில் பேன் எடுக்கிறேன்' என்று பலர் சுற்றிக்கொண்டிருப்பார்கள். இவர்களில் சிலர், காதில் மட்டு மல்லாமல் கண்ணிலும் எண்ணெய் ஊற்றிச் சுத்தம் செய்கிறேன் என்று



சொல்லிக்கொண்டு சுத்தமில்லாத எண்ணெயைப் பயன்படுத்துவார்கள். கண், காது பிரச்னைகளுக்கு உரிய மருத்துவரிடம் காண்பித்துச் சரி செய்ய வேண்டியது அவசியம். கசடுகள் நிறைந்த எண்ணெயால், கண்கள், காதுகள் நிரந்தரமாகவே பாதிப்புக்குள்ளாகும் அபாயம் உள்ளது!

## சாம்பிராணி போடுவது சரிதானா?

சாம்பிராணிப் புகை போடுவதை அனைத்து மதத்தினருமே பின்பற்றி வருகிறார்கள். அது எதிர்மறைச் சக்திகளை அகற்றும் என்றும், விஷ ஜந்துக்களை விரட்டும் என்றும் நம்புகிறார்கள். இந்தப் புகை, கிருமித்தொற்றைப் போக்கிவிடும் என்பதை மருத்துவரீதியாக ஏற்க



முடிவதில்லை. போஸ்வெல்லியா மரத்திலிருந்துப் பெறப்பட்ட ஒரு பிசின்தான் சாம்பிராணி. இதனால், கண் எரிச்சல், கண் சிவத்தல், மூக்கில் தண்ணீர் வடிதல், மூக்கடைப்பு போன்ற பிரச்னைகள் ஏற்படும். ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாம்பிராணிப் புகையின் ரசாயனங்களால் மூச்சுத்திணறல் பாதிப்புகள் ஏற்படும்.

## சுளுக்கு எடுக்கலாமா?

நம் மக்கள் கீழே தவறி விழுந்து வலி ஏற்பட்டால், உடனே 'சுளுக்கு வழிக்கப் போகிறேன்' எனக் கிளம்பிவிடுவார்கள். விழுந்ததால், எலும்பு முறிந்துள்ளதா? மூட்டு விலகியுள்ளதா? தசை/தசை



நாணில் பிசகு ஏற்பட்டுள்ளதா என்பன குறித்தெல்லாம் எலும்பு சிகிச்சை நிபுணரிடம் ஆலோசனை பெற்ற பிறகே முறையாக சிகிச்சை செய்ய வேண்டும். செய்ய முடியும். இல்லையென்றால் பின்னாளில் பல பாதிப்புகளும் ஏற்படும்.

## மொட்டை அடித்தால் முடி வளருமா?

அடிக்கடி ஷேவ் செய்தால் முடி முளைக்கும்; மொட்டை போட்டால் தலை முடி வளரும் என்ற தவறான



எண்ணங்கள் மக்களிடம் இருக்கின்றன. இதற்கு அறிவியல்பூர்வமான காரணங் களோ விளக்கங்களோ இல்லை.

## தேள்கடிக்கு மருந்தாகுமா கொடுக்கு?



தேள் கொட்டினால் அதன் கொடுக்கை கொட்டிய இடத்தில் வைத்து சிகிச்சை செய்யும் தவறான பழக்கமும் நம்மிடம் இருக்கிறது. இதனால் எந்தப் பயனும் இல்லை. தேள் விஷத்தால் இதயம் சீரில்லாமல் துடிக்கலாம். நுரையீரல் பாதிப்பினால் சுவாசப்பிரச்னையும் ஏற்படும். எனவே நோயாளியை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.



"திருடும்போது எப்படி மாட்டிக்கிட்ட?"

"தூக்கத்துல யாரோ தண்ணி கேட்டாங்க, பிடிச்சிட்டுப் போயி குடுத்தேன்."

"உங்க கூட்டத்துக்குப் பாதுகாப்புக்கு வரணும்னா, போலீஸ் கண்டிஷன் போடுது தலைவரே..."

"என்னவாம்..?"

"கூட்டமும் வரணுமாம்..!"





# லண்டன் தந்தையால் வவுனியாவில் குழந்தை கடத்தல்!

## பின்னணியில் நடந்தது என்ன?

✎ ஆரோன்

வவுனியா குட்செட் வீதியில் மர்ம கும்பல் ஒன்றினால் கடந்தவாரம் குழந்தை கடத்தப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. 31.05.2018 அதிகாலை முகத்தை கறுப்பு துணியால் மூடிக்கட்டியபடி வந்த மர்ம குப்பல் கத்தியை காட்டி மிரட்டி, 08 மாத குழந்தையை கடத்திச் சென்றனர். சினிமா பாணியில் நடந்த இந்த கடத்தல் ஊடகங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை கிளப்பியிருந்தது. வாள்வெட்டு, கட்டப்பஞ்சாயத்து என வடக்கில் அச்சமான சூழ்நிலை உருவாகி வரும் நிலையில், குழந்தை கடத்தலின் பின்னணியில் பெரிய வலையமைப்புக்கள் இருக்கலாமென ஊகிக்கப்பட்டது.

ஆனால், குடும்பத்தவர்களிற்கு அப்படியொரு சந்தேகமும் இருக்க வில்லை. காரணம் இந்த கடத்தல் சில காலமாக நீடித்த குடும்ப பிரச்சனையின் எதிரொலியாகவே நடந்து முடிந்தது!

கடத்தப்பட்ட எட்டு மாத குழந்தையான வானிஷனின் தாய், தந்தைக்கிடையில் இருந்த குடும்ப சிக்கலே இந்த கடத்தல் நடக்க காரணமாக இருந்துள்ளது.

இந்த கடத்தலின் பின்னணி என்ன? குடும்பத் தகராறின் காரணம் என்ன? இவை தொடர்பில் நாம் ஆராய்ந்தபோது, அதிர்ச்சியளிக்கும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடத்தப்பட்ட குழந்தையின் தாய் மோனிஷாவும், தந்தை வசுதரனும் முரண்பாடு காரணமாக தற்போது சுமுகமற்ற உறவில் உள்ளனர். அவர்களிற்கிடையில் என்ன பிரச்சனை?

ரமேஷ் மோனிஷா 17 வயதாக இருந்தபோது, அவரை பிரித்தானியாவிற்கு அழைக்க அவரது சித்தி முயன்றார். இதற்கான ஏற்பாடுகளை அவர் செய்துகொண்டிருந்தபோது, இலண்டனில் உள்ள ஆசைப்பிள்ளை வசுதரன் என்பவரின் உதவியையும் நாடியுள்ளார். வசுதரனின் மகள் என கூறி, பிரித்தானியாவிற்கு அழைப்பதற்கான முயற்சிகள் நடந்தன. இதற்காக மோனிஷா இந்தியாவிற்கு அழைக்கப்பட்டார்.

தனது 17வது வயதில் வெளிநாட்டு கனவுடன், தனது மூத்த சகோதரியுடன் இந்தியாவிற்கு கிளம்பி சென்றார் மோனிஷா. வசுதரனும் இந்தியா வந்தார். அங்கிருந்து பிரித்தானியா செல்வதற்கு முயற்சிகள் நடந்தபோது, அவர்கள் இந்தியாவில் சில காலம் தங்கியிருந்தனர்.

இந்தியாவில் தங்கியிருந்தபோது, வசுதரனிற்கும் மோனிஷாவிற்குமிடையில் நெருக்கம் ஏற்பட்டது. அங்கு தங்கியிருந்து, நெருங்கிப்பழகி வந்தது, இருவரையும் வேறு ஒரு கட்ட உறவிற்குள் நுழைய பிள்ளையார் சுழி போட்டது.

இந்த நெருக்கம் நாளடைவில் காதலாக மாறியது. இந்த காதலை மோனிஷாவின் சகோதரி கவனித்து விட்டார். மோனிஷா அப்பொழுது 17வயதானவர். வசுதரனுக்கு அவரை விட 20 வயது அதிகம். இந்த வயது வேறுபாட்டை குறிப்பிட்ட சகோதரி, இது தொடர்பில் பெற்றோருடன் பேசி நல்ல முடிவெடுப்பதாக வசுதரனை சமாளித்துவிட்டார். ஆனால் பின்னர், மோனிஷாவின் பிரித்தானியா கனவு பலிக்கவில்லை. மீண்டும் சகோதரியுடன் வவுனியாவிற்கு திரும்பி வந்தார்.

மோனிஷாவின் பிரித்தானியா கனவு பலிக்கவில்லையே தவிர, பிரித்தானியாவிலிருந்த வசுதரனின் தொடர்பு துண்டிக்காமலிருந்தது. மோனிஷா வவுனியா வந்ததன் பின்னரும், வசுதரன் அவருக்கு தொலைபேசி அழைப்பேற்படுத்தினார். இருவரும் இரகசியமாக காதலிக்க ஆரம்பித்தனர். இதை எப்படியோ மோப்பம் பிடித்த மோனிஷாவின் பெற்றோர், அந்த காதலிற்கு தடை விதித்தனர்.

அப்போது வசுதரனை உயிருக்கு உயிராக காதலித்து வந்தார் மோனிஷா. அதனால் பெற்றோரின் கட்டுப்பாட்டை அவரால் ஏற்கமுடியவில்லை. எப்படியோ, வீட்டுக்கு தெரியாமல் வசுதரனிற்கு தொலைபேசி அழைப்பேற்படுத்தி, தனது நிலைமை கூறியிருக்கிறார். குடும்பத்தினர் சித்திரவதை செய்கிறார்கள் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு மோனிஷாவிற்கு ஆலோசனை சொன்னார் வசுதரன். அத்துடன், யாழ்ப்பாணம் உரும்பிராயில் வீடொன்றை ஏற்பாடு செய்வதாகவும், அங்கு சென்று தங்குமாறும் கூறினார்.

காதல் கண்ணை மறைக்கும் என்பார்கள். மோனிஷாவிற்கும் அதுதான் நடந்தது. வசுதரனின் பேச்சை கேட்டு, தனது தாய், சகோதரி, சகோதரனை பிரிந்து வருங்கால கணவன் வசுதரனை நம்பி, அவன் ஏற்பாடு செய்த வீட்டிற்கு சென்றார். இந்த காலத்தில் மோனிஷாவிற்கு வசுதரனால் பணம் அனுப்பி வைக்கப்பட்டது.



பின்னர் 2015 இல் இந்தியாவிற்கு அழைத்து தமிழ்நாட்டின் வளசரவாக்கத்தில் உள்ள நாகாச்சியம்மன் ஆலயத்தில் மஞ்சள் தாலி கட்டி, மனைவியாக்கினார். திருமணத்தின் பின்னர் நான்கைந்து தடவைகள் தனது கணவனைகாண இந்தியாவிற்குசென்று வந்தார் மோனிஷா. அந்த சமயங்களில் வசுதரனும் பிரித்தானியாவிலிருந்து இந்தியா வந்திருந்தார். இறுதியாக கணவனை சந்தித்து விட்டு, நாடு திரும்பிய சில வாரங்களில் அவர் குழந்தையை சுமப்பதை அறிந்தார்.

கர்ப்பவதியாக வவுனியாவில் தனித்து வாழ்வதில் மோனிஷாவிற்கு பிரச்சனையிருந்ததால், மீண்டும் தாயாருடன் உறவை சுமுகமாக்கி, அவருடன் வந்திருந்தார். வவுனியாவில் வாடகை வீடொன்றை பெற்று, அங்கு வாழ்ந்து வந்தனர். 2017 ஒக்ரோபரில் மோனிஷா வானிஷனை பெற்றெடுத்தார்.

வானிஷன் பிறந்த சில மாதங்களில் மோனிஷாவிற்கு பேரிடியாக செய்தியொன்று வந்தது. கணவன் பிரித்தானியவிலும், யாழ்ப்பாணத்திலும் ஒவ்வொரு திருமணம் செய்திருந்த விசயத்தை இதன்பின்னரே அறிந்தார். இந்த திருமணங்களின் மூலம் 17, 15 வயதுகளில் மோனிஷாவை விட சில வயது குறைந்த பிள்ளைகள் இருப்பதையும் அதன்பின்னர்தான் அறிந்தார்.

இந்த விபரங்களை வசுதரனிடம் கேட்டு சண்டை பிடித்துள்ளார். இந்த சண்டையின் உச்சத்தில் வானிஷன் தனக்கு பிறக்கவில்லையென்ற ஒரு வார்த்தையை வசுதரன் கூறியுள்ளார். இதனால் வசுதரனுடனான உறவை மோனிஷா துண்டித்துள்ளார்.

இதன்பின் சிறிதுகாலம் கழித்து, மீண்டும் மோனிஷாவிற்கு தொலைபேசழ அழைப்பேற்படுத்தி வானி

தொடர்ச்சி 19-ம் பக்கம்...



## ஜீவிதாவின் பெஸ்ட்

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் கல்யாணமாம் கல்யாணம் சீரியலில் மொடர்ன் வில்லியாக மிரட்டுபவர் ஜீவிதா. சென்னைக்கு வந்து டான்ஸ் கற்றுவிட்டு, சொந்த ஊரான நாமக்கல்லில் டான்ஸ் கற்றுக்கொடுக்கலாமென்ற திட்டத்துடன்தான் சென்னை வந்திருக்கிறார். ஏவிஎம் ஸ்ரூடியோவிற்கு ஷூட்டிங் பார்க்க சென்றவரை, நடிக்க சொல்ல... அப்படியே நடிகையாகி விட்டார். அந்தப்படம் ஓடவில்லை. பிறகு சப்போர்ட்டிங் ரோல்ஸ் செய்ய ஆரம்பித்தார். இதுவரை ஆண்தேவதை உள்ளிட்ட பத்திற்கு மேற்பட்ட படங்களில் நடித்துவிட்டார். கடைக்குட்டி சிங்கம் படத்தில் கார்த்திக்கின் அக்காவாக நடித்திருக்கிறார். பாசமலர், மெல்ல திறந்தது கதவு சீரியல்களிற்கு பின்னர் கல்யாணமாம் கல்யாணம் சீரியலில் நடித்து வருகிறார். இவருக்கு நீளமாக முடி. ஆனால் இந்த சீரியலுக்கர்க கட் பண்ணிவிட்டாராம். நெற்றியில் ஒரு மரு வைத்திருந்தாராம். அதையும் எடுத்து விட்டாராம். இந்த சீரியலில் தனது பெஸ்ட் நடிப்பை கொடுக்கிறேன் என்கிறார்.'



## சமீராக்கு டும் டும் டும்!

றெக்கை கட்டி பறக்குது மனசு சீரியலில் மலர் கதாபாத்திரத்தில் நடிப்பவர் சமீரா ஷெரீப். இந்த சீரியலை தயாரிப்பவரும் சமீராதான். பகல் நிலவு சீரியலில் அன்வருடன் சேர்ந்து நடிக்கும்போது, காதலாகி இப்பொழுது இருவரும் லிவ்விங் டு கெதர் வாழ்க்கை வாழ்கிறார்கள். சையது ஸ்ரூடியோஸ் என்ற பெயரில் அன்வர் ஒரு தயாரிப்பு நிறுவனம் வைத்திருக்கிறார். ஒரேஞ் ச் மீடியா புரொகூஷன்ஸ் என்ற பெயரில் சமீரா ஒரு நிறுவனம் வைத்திருக்கிறார். இந்த வருட இறுதிக்குள் திருமணம் செய்ய திட்டமிட்டுள்ளது இந்த ஜோடி.



சின்னத்திரை

## நந்தினி சீரியல் நண்பிகள்!



சன் டிவியின் நந்தினி சீரியலில் நடித்து வருபவர் ஸ்ரேயா அன்சான். பெங்களூரை சேர்ந்தவர். கன்னடத்தில் சீரியல்கள், சினிமாக்களில் நடித்திருக்கிறார். நான்கு மொழியில் ஒளிபரப்பாகும் நந்தினி சீரியல் கன்னடத்திலும் பிரபலம். காயத்ரி கேரக்டர் சீரியலின் இடையில்தான் அறிமுகமானது. இதற்காகத்தான் ஸ்ரேயா செலக்ட் ஆனார். நந்தினி சீரியலில் இன்னொரு கன்னட நடிகையான நித்யாவும் நடிக்கிறார். அவர் மூலம்தான் மொழிப் பிரச்சனையை ஆரம்பத்தில் ஸ்ரேயா சமாளித்துக் கொண்டாராம்.



## ஐந்து மொழியில் நடிக்க ஆசை

விஜய் டிவியில் ஒளிபரப்பான நீலி சீரியலில் ரேகாவாக நடித்தவர் கவிதா. நெகடிவ் பாத்திரத்தில் நடித்திருந்தாலும் தனக்கென ரசிகர் கூட்டத்தை உருவாக்கி வைத்திருக்கிறார். இவர் கன்னடத்தை சேர்ந்தவர். இப்பொழுது இரண்டு கன்னட படங்களில் ஹீரோயினாக நடித்து வருகிறார். நீலியை தொடர்ந்து நிறைய சீரியல் வாய்ப்புக்கள் வந்ததாகவும், ஆனால் அனைத்திலும் நெகடிவ் பாத்திரங்கள் வந்ததால் அவற்றை நிராகரித்ததாகவும் சொல்கிறார். பரத நாட்டியத்தை முறைப்படி கற்றுள்ள கவிதா, இப்பொழுது கன்னடத்தில் இரண்டு படங்களில் நடித்து வருகிறார். ஒரு சீரியலிலும் நடிக்கிறார். கன்னடம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் என ஐந்து மொழிகளில் அம்மணி பரிச்சயமானவர். ஐந்திலும் நடிக்க வேண்டுமென்பதே இலட்சியமாம்!

அர்பிதா

## குப்பைக்கதையில் நடிக்க மறுத்த நாயகிகள்!

காளி ரங்கசாமி இயக்கத்தில் நடன அமைப்பாளர் தினேஷ் நாயகனாக அறிமுகமாகிய படம் 'ஒரு குப்பை கதை'. இந்த திரைப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த படத்தில் கதாநாயகியாக நடிக்க பல நடிகைகள் முதலில் தயங்கியுள்ளனர். ஒரு குழந்தைக்கு அம்மா வேடம் என்பதால் நடிக்க அவர்கள் விரும்பவில்லை என்கிறார் படத்தின் இயக்குநர் காளிரங்கசாமி. கதையை கேட்டதும் மனிஷா யாதவ் மட்டும் தான் நடிக்க சம்மதம் தெரிவித்தாக அவர் தெரிவித்தார்.

## மூன்றாவது காதலி

கோலிவுட் முதல் பாலிவுட் வரை ஹீரோ, ஹீரோயின்களுக்கு இடையே காதல் மலர்வது அவ்வப்போது நடந்து வருகிறது. பிரபுதேவா, சிம்பு போன்றவர்கள் 2 பிரபல ஹீரோயின்களுடன் இணைத்து கிசுகிசுக்கப்பட்டனர். காதல் மன்னன்கள் பாலிவுட்டிலும் இருக்கின்றனர். ரன்பீர் கபூர் தற்போதைக்கு காதல் மன்னனாக வலம் வந்துகொண்டிருக்கிறார். முதலில் தீபிகா படுகோனுடன் டேட்டிங் செய்தவர் பின்னர் கேத்ரினா கைப்புடன் டேட்டிங் மற்றும் லிவிங் டு கெதர் பாணியில் காதல் வாழ்க்கையை அனுபவித்தார். தற்போது புதுக் காதலியுடன் இணைந்திருக்கிறார். பாலிவுட் இளம் ஹீரோயின்களில் ஒருவர் அலியா பட். இவருடன்தான் தற்போது ரன்பீர் கபூருக்கு காதல் மலர்ந்திருக்கிறது. அலியாவுடனான காதலை முதன்முறையாக ரன்பீர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இதுபற்றி பேட்டி அளித்த ரன்பீர், "அலியாபட்டுடன் உங்களுக்கு காதல் மலர்ந்துள்ளதா?" என்றபோது "இப்போதைக்கு இது புதியது. அதிகம் பேச விரும்பவில்லை. ஒரு நடிகையாக, ஒரு பெண்ணாக அலியாவை கண்டு நான் வியக்கிறேன். என்னுடைய வாழ்க்கையிலும் அவர் சரியான தேர்வாக இருப்பார். இதற்கு இன்னும் சில காலம் தேவைப்படுகிறது. இன்றைக்கு நான் மிகவும் பக்குவப்பட்டிருக்கிறேன். உறவுகளை மதிக்க தெரிந்துகொண்டேன்" என்றார்.

# வண்ணத் திரை

## ஆலியா பட் மகாராணி!

பாலிவுட் பிரபலங்களின் பாராட்டு மழையால், மகிழ்ச்சியில் திக்கு முக்காடி போயுள்ளார், ஆலியா பட். இவர் நடித்து சமீபத்தில் வெளியான, ராஜி என்ற ஹிந்தி படம், 100 கோடி ரூபாய் வசூலை குவித்துள்ளது. இதில், உளவாளியாக நடித்து, பட்டையை கிளப்பியுள்ளார், ஆலியா. இது, முழுக்க முழுக்க ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள படம். அதனால் தான், பாலிவுட் பிரபலங்கள், இவரை பாராட்டி தள்ளுகின்றனர். நடிகை கங்கனா ரணாவத், "இப்படி ஒரு கேரக்டரில் ஆலியா நடிப்பார் என நினைக்கவே இல்லை. ஒரே படத்தில், பாலிவுட்டின் மகாராணியாக உருவாகி விட்டார்" என, வாழ்த்து மழை பொழிந்துள்ளார். இதுமட்டுமல்லாமல், ஹாலிவுட் படத்திலும் நடிக்க, ஆலியாவுக்கு அழைப்பு வந்துள்ளதாம்.

## தமிழ் படத்திற்கு எதிர்ப்பு கிளம்புமா?

தமிழ் சினிமாவில் இன்றைய தலைமுறை ரசிகர்களுக்கு "ஸ்பூப்" வகை சினிமாவை அறிமுகப்படுத்தியவர் இயக்குனர் சி.எஸ்.அமுதன். அவர் இயக்கத்தில் சிவா நடித்த "தமிழ்ப் படம்" 2010ம் ஆண்டு வெளிவந்து கமர்ஷியல் ரீதியாகவும் வெற்றி பெற்றது. அதற்குப் பிறகு அமுதன் இயக்கிய "ரெண்டாவது படம்" வெளிவராமல் பல வருடங்களாக முடங்கிக் கிடக்கிறது. இருப்பினும் "தமிழ்ப் படம் 2.0" படத்தை எடுத்த முடித்துவிட்டார். இப்படத்தின் டீசர் வெளியிடப்பட்டது. டீசரில் ஓ.பன்னீர்செல்வம் முதல் விஷால் வரை பலரையும் கிண்டலடித்திருக்கிறார்கள். கடந்த சில வருடங்களில் ரசிகர்களால் அதிகம் பேசப்பட்ட முன்னணி நடிகர்களின் படங்களின் காட்சிகள் இந்த டீசரில் இடம் பெற்றுள்ளன. ஏற்கெனவே, விஜய், அஜித் ரசிகர்களுக்கு இடையில் பல தகராறு உள்ளது. இதற்கிடையில் இந்தப் படத்தின் டீசரில் அவர்களையும் விட்டுவைக்காமல் கிண்டலடித்திருக்கிறார்கள். இதனால், அவர்களது ரசிகர்களும் சேர்ந்து இந்தப் படத்தை எதிர்ப்பார்களா என்பது படம் வந்தால்தான் தெரியும். ஆனால், டீசரைப் பார்த்து சமூக வலைத்தளங்களில் பலரும் பாராட்டி வருகிறார்கள். டீசர் வெளியான ஐந்து மணி நேரத்திலேயே 10 லட்சம் பார்வைகளைக் கடந்திருக்கிறது.

## கேங்ஸ்டராகும் ஸ்ருதி!

முதன் முதலாக ஸ்ருதிஹாசன் ஸ்டைலான கேங்ஸ்டர் கேரக்டரில் நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்கு பிறகு அவர் ஹிந்தியில் மகேஷ்பாபு மஞ்ச்ரேக்கர் படத்தில் நடித்து வருகிறார். இன்னும் பெயரிப்படாத இந்தப் படம் கேங்ஸ்டர் கதை. இதில் வித்யூத் ஜமால் ஹீரோவாக நடிக்கிறார். இதன் முதற்கட்ட படப்பிடிப்பு மும்பையில் சமீபத்தில் நடந்து முடிந்தது. விரைவில் தொடங்க உள்ள இரண்டாம்கட்ட படப்பிடிப்பில் ஸ்ருதிஹாசன் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்படவுள்ளன. பொதுவாக இயக்குனர் மகேஷ்பாபு மஞ்ரேக்கரின் படத்தில் நடிக்கும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளும் அவர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் விதமாக கதாபாத்திரங்களும் அமைந்திருக்கும். இதனால் இந்த படத்துக்கு கூடுதல் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. ஸ்ருதிஹாசன் லண்டனில் சர்வதேச இசை கோர்ப்பு சம்மந்தப்பட்ட பணிகளை முடித்துவிட்டு இந்தியா திரும்பியதும் படப்பிடிப்பு தொடங்கும். இந்த படப்பிடித்தின் படபிடிப்பை முடித்தக் கையோடு தனது தந்தை கமல்ஹாசன் இயக்கும் சபாஷ் நாயுடு படத்தில் நடிக்கவிருக்கிறார் ஸ்ருதிஹாசன்.

## பத்து வயது குறைந்தவருடன் பிரியங்கா டேட்டிங்!

பிரியங்கா சோப்ரா, நிக் ஜோனஸ் டேட்டிங்தான் இப்பொழுது பரபரப்பாக பேசப்படும் விடயமாகியுள்ளது. நிக் ஜோனஸ் ஹாலிவுட் நடிகர், பாடகர், தயாரிப்பாளர் என பன்முகம்கொண்டவர். சமீபத்தில் இங்கிலாந்து இளவரசர் ஹாரி, மேகன் மார்கெல் இருவருக்கும் நடந்த ரோயல் திருமணத்தில் பிரியங்காவும், நிக் ஜோனஸும் ஜோடியாக பங்கேற்றனர். தவிர வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் இருவரும் நெருக்கமாக அமர்ந்து விருந்தில் பங்கேற்றதுடன், படகு பயணங்களும் செய்திருக்கின்றனர். இதுபற்றி பிரியங்கா சோப்ராவிடம் கேட்டபோது, "ஆம் நாங்கள் இருவரும் ஒரே எண்ணத்தில் இருக்கிறோம். ஏற்கனவே நாங்கள் இருவரும் நன்கு அறிமுகமாகியிருக்கிறோம். ஒருமுறை விழா ஒன்றுக்கு இணைந்து செல்வோமா என்று ஜோனஸ் கேட்டார். நானும் அதை விரும்பியதால் ஓகே என சம்மதம் தெரிவித்தேன்" என்றார். பிரியங்கா சோப்ராவுக்கு 35 வயது ஆகிறது. அவரை விட ஜோனஸ் 10 வயது குறைந்தவர். ஜோனஸை பொறுத்தவரை ஏற்கனவே ஹாலிவுட் நடிகை ஒலிவியா கல்போ உள்ளிட்ட மேலும் சில அழகிகளுடன் டேட்டிங் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழில் ரீமேக் ஆகும் ஸ்பானிஷ் படம்!

கடந்த 2010ஆம் ஆண்டு ஸ்பானிஷ் மொழியில் வெளியான படம் ஜூலியாஸ் ஐஸ். ஐரோப்பிய நாடுகளில் வரவேற்பை பெற்றதுடன் இந்தியாவிலும் வரவேற்பு பெற்றது. தன் சகோதரியின் சாவில் இருக்கும் மர்மத்தை கண்டறியும் முயற்சியில் ஜூலியா தன் பார்வையை இழக்கிறாள். அதன் பிறகு நடப்பதை படம் சஸ்பென்ஸ் த்ரில்லராக கூறுகிறது. தற்போது தமிழ், தெலுங்கில் ரீமேக் செய்யப்படுகிறது. ஒளிப்பதிவாளர் கபீர் லால் தயாரித்து, இயக்குகிறார். இவர் கமல்ஹாசன் 4 வேடங்களில் நடித்த மைக்கேல் மதன காமராஜன் படத்தில் ஒளிப்பதிவாளராக பணியாற்றியதுடன் 100க்கும் மேற்பட்ட படங்களில் ஒளிப்பதிவாளராக பணியாற்றி உள்ளார். இதுபற்றி இயக்குனர் கூறும்போது, 'சுவாரசியமான திரைக்கதை கொண்ட இப்படத்தை தமிழ் தெலுங்கு ரசிகர்களும் காண வேண்டும் என்ற எண்ணத்தில் ரீமேக் செய்கிறேன். பிறகு மற்ற மொழிகளிலும் ரீமேக் செய்யப்படும்' என்றார் கபீர் லால்.

## இந்திக்கு போகும் காஜல்!

குயின் ரீமேக்கான பாரிஸ் பாரிஸ் படத்தில் நடித்து வரும் காஜல் அகர்வால், தெலுங்கில் கல்யாண்ராமுடன் எம்எல்ஏ படத்தில் நடித்தவர், இப்போது பெல்லம்கொண்ட ஸ்ரீனிவாஸ் நடிக்கும் பெயரிடப்படாத படத்தில் நடிக்கிறார். இந்த படம் தெலுங்கு மட்டுமின்றி இந்தியிலும் வெளியாகிறது. இந்தப்படத்தில் ஹிந்தி நடிகர் நீல் நிதின் முகேஷ் நடிக்க உள்ள நிலையில் இன்னொரு நடிகராக ஹிந்தி நடிகர் ஹர்சவர்தன் ராணேவும் இணைந்துள்ளார். இன்னும் டைட்டில் வைக்கப்படாத இந்த படத்தின் இந்தி சார்ட்டிலைட் ரைட்ஸ் இப்போதே ரூ.9.5 கோடிக்கு விலைபோய் உள்ளதாம்.



மாள்விகா

# சி(ரி)த்ராலயா
## மேடை ஏறிய ரத்த பாசம்

டி.ஏ.நரசிம்மன்

காரைக்குடியில் இண்டர்மீடியட் படிப்பை முடித்துவிட்டுத் திரும்பினால் இன்னொரு சலுகையும் உண்டு என்று உறுதி அளித்திருந்தார் கோபுவுடைய தந்தை. குடுமியை எடுத்துவிட்டு கிராஃப் வெட்டிக்கொள்ளும் சலுகை அது. படிப்பு முடிந்து ரிசல்ட் வருமுன்பே கிராஃப் வெட்டிக்கொண்டார் கோபு. பெரிய விடுதலை கிடைத்ததுபோல ஒரு ஃபீல். ஆனால், நண்பன் ஸ்ரீதர் இல்லாத செங்கல்பட்டு கோபுவுக்குக் கசந்தது. அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, தங்கை என்று கலகலப்பான குடும்பத்துடன் வசித்த கோபுவுக்குப் புதிய நண்பர்கள் கிடைத்தார்கள்.

ஆனால், ஸ்ரீதரின் இடம் அப்படியே காலியாக இருந்தது. ரெங்கடு என்ற ரங்கநாதன், பின்னாளில் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியின் மூத்த அதிகாரியாக வட தமிழகம் முழுவதும் பெயர்பெற்ற வெங்கடேசன் என்ற வெங்கு ஆகிய இருவரும் கோபுவின் நட்பு வட்டத்துக்குள் வந்தனர்.







இந்தக் கூட்டணியுடன் வந்து இணைந்துகொண்டார் செங்கல்பட்டு திருமலை டாக்கீஸ் உரிமையாளர் நாயுடுவுடைய மகன் கிட்டப்பா.

அன்று கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்த பாலாற்றில் நீச்சலடிப்பதில் தொடங்கி பொதி சுமக்காமல் மந்தையில் திரிந்துகொண்டிருக்கும் கழுதைபோல் பொழுதை வீணாக்கிக் கொண்டிருந்தனர். இந்தக் கூட்டணியில் தனது வீரதீரச் செயல்களுக்காகச் செங்கல்பட்டு நகரத்தில் கோபு மட்டும் தனித்த புகழைப் பெற்றிருந்தார்.

**ஸ்ரீதரை மேடையேற்றி, 'இந்த நாடகத்தை எழுதிய ஆசிரியர் ஸ்ரீதர் இவர்தான்!' என்று அறிவித்தார்கள். கோபுவுக்கு பரமானந்தம். கையைத் தட்டிக்கொண்டே இருந்தார். ஸ்ரீதருக்குக் கிடைத்த பெருமை, செங்கல்பட்டுக்கே கிடைத்தது போல் ஒரு பெருமிதம்.**

### வாத்தியாரை வாழ்த்திய மாணவன்

கோபு அப்போது செங்கல்பட்டில் பள்ளி இறுதி வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். பள்ளியில் சம்ஸ்கிருதம் அவருக்குச் சிறப்புப் பாடம். ஒருநாள் பள்ளியிலிருந்து சற்று முன்னதாகவே வீட்டுக்குத் திரும்பியிருந்தார் தந்தையார் துரைசாமி. அவரது முகத்தில் கோபமும் கையில் ஒரு புளியமரக் குச்சியும் துடித்துக்கொண்டு இருந்தன. அடித்தால் அத்தனை சீக்கிரம் உடையாது அந்தக் குச்சி. கோபு புத்தகப்பையுடன் வீட்டுக்குள் நுழையும்போதே கோபத்துடன் கேட்டார்.

" ஏண்டா... இப்படிச் செஞ்சே?"

"பின்னே என்னப்பா? 35 மார்க் எடுத்தா பாஸ். 34 மார்க் எடுத்துட்டேன். 'மீதி ஒரு மார்க் போட்டா உங்க பாட்டனார் வீட்டு ஆஸ்தி குறைஞ்சுப்போயிடுமா'ன்னு கேட்டேன். அவர் பதிலுக்கு... 'தேவ பாஷையான சம்ஸ்கிருதத்தை நான் அசுரர் பாஷையா மாத்திட்டேன்'னு எல்லார் முன்னாடியும் திட்டினார். எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துடுச்சு!

அப்படியா, தேவ பாஷை சொல்லித் தர உங்களை இதோ இப்போ தேவர்கள் ஆசிர்வதிக்கிறா பாருங்கோன்'னு சொல்லி ஆன்சர் பேப்பரைச் சுக்கு சுக்கலா கிழிச்சு, சடார்ன்னு பெஞ்சுமேலே ஏறி அவர் தலையிலே கொட்டினேன். கிளாஸே கொல்லுன்னு சிரிச்சுது. வாத்தியார் சுதாரிக்கிறதுக்குள்ள உஷாராகி ஒரே ஓட்டம் எடுத்துட்டேன். நான் இனிமே சம்ஸ்கிருத கிளாஸ் போக மாட்டேன்ப்பா'

கோபு அப்பாவையே அதட்ட, அந்த அதட்டலில் வாத்தியார் துரைசாமியே ஆடிப்போய்விட்டார். அத்தனைக்கு மத்தியிலும் கோபுவின் மாடுலேசன் அவரது கோபத்தைத் தணித்து, சிரிப்பை வரவழைத்துவிட்டது. அந்தச் சம்பவத்துக்குப் பின் சில நாட்கள் பள்ளிக்கூடத்துக்கு மட்டம்போட்ட கோபுவை வாத்தியாரின் மகன் என்பதால் மன்னித்து மறுபடியும் உள்ளே அனுமதித்தது பள்ளி நிர்வாகம்.

### போய்யா நீயும் உன் வேலையும்

இப்படிப் பள்ளிக் காலத்தில் புகழ்பெற்றிருந்த கோபுவின் எதிர்காலத்தைக் குறித்து அவருடைய பெற்றோர் கவலைப்பட்டுக்கொண்டிருந்தனர். தங்கள் உறவினர் மூலம் கோபுவை தபால் ஆபீஸ் வேலைக்கு அனுப்ப முயன்றனர். உறவினர் மூலம் ஒரு தபால் அதிகாரியைப் பிடித்த பெற்றோர் அவரிடம் அனுப்பிவைத்தனர். பெற்றோரின் வார்த்தையைத் தட்ட முடியாமல் கோபுவும் அவரைக் காணச் சென்றார். கோபு கிராப் ஹேர் ஸ்டைல் வைத்துகொண்டிருப்பதைக் கண்டு அவரை ஏற இறங்கப் பார்த்தார் அந்த அதிகாரி.

"என்னடா அம்பி கிராப் வச்சிருக்கே? குடுமி வச்சுக்கோ. வேலை வாங்கித் தரேன்" என்றார் அவர்.

"அதெல்லாம் முடியாது. இந்த கிராப்பு தலைக்கு ஏத்த வேலை ஏதாவது இருந்தா தர முடியுமா?!" என்றார் கோபு. "குடுமி வச்சுக்கிறதா இருந்தா குமாஸ்தா வேலை தரேன்!"

"அந்த வேலையை நீங்களே வச்சுக்கங்க..!" என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினார் கோபு. வீம்பாகப் பேசிவிட்டு திரும்பிவந்த கோபு பெற்றோருக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் இருட்டியதும் மெல்ல வீட்டுக்குள் நுழைந்துவிடலாம் என்றுபொழுது சாயும்வரை காத்திருந்து தெருவுக்குள் நுழைந்தார். அப்போது இருட்டுக்குள்ளிருந்துஞ்

"டேய்கோபு அசையாதே. அப்படியே நில்லு" என்று ஒரு குரல் மிரட்டியது. திடுக்கிட்டுப் பயந்து நின்ற கோபுவின் முன் வந்து நின்றார் ஸ்ரீதர். சென்னையிலிருந்து வந்திருந்த ஸ்ரீதர் அவருக்காகக் காத்திருந்தார்.

"உடனே கிளம்பு! நான் எழுதிய 'ரத்த பாசம்' நாடகம் நாளைக்கு அரங்கேறுது. அதை நீ பார்க்க போறே!" என்றபடி அன்றிரவே ரயிலைப்பிடித்துகோபுவை அழைத்துக்கொண்டு மெட்ராஸுக்கு வந்தார் ஸ்ரீதர். மயிலாப்பூரில் நாடகம்.

இடைவேளையின் போது, ஸ்ரீதரை மேடையேற்றி, 'இந்த நாடகத்தை எழுதிய ஆசிரியர் ஸ்ரீதர் இவர்தான்!' என்று அறிவித்தார்கள். கோபுவுக்கு பரமானந்தம். கையைத் தட்டிக்கொண்டே இருந்தார். ஸ்ரீதருக்குக் கிடைத்த பெருமை, செங்கல்பட்டுக்கே கிடைத்தது போல் ஒரு பெருமிதம்.

### திண்ணையில் ஒரு திரைக்கதையாளர்

ஸ்ரீதர் டி.கே.எஸ் நாடகங்களில் மும்முரமாக இருக்க, கோபு செங்கல்பட்டிலும் மெட்ராஸிலுமாக மிமிக்ரி நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். வேலை கிடைக்காத கோபுவுக்குச் சொத்தாவது கிடைக்கட்டும் என்று தனது விதவைத் தங்கை கமலாவுக்கு அவரைத் தத்துக் கொடுத்துவிட்டார் அப்பா. இதனால் காஞ்சிபுரத்தில் அத்தையின் வீட்டில் குடியேற வேண்டிய கட்டாயம் கோபுவுக்கு ஏற்பட்டது. காஞ்சிபுரத்தில் கமலா அத்தையின் வீட்டுக்கு எதிரே கூரத்தாழ்வார் கோயில் இருந்தது.

அதற்கு இரு கட்டிடங்கள் தள்ளி திராவிட நாடு பத்திரிகையின் அலுவலகம். அதன் வெளித் திண்ணையில் உட்கார்ந்து சட்டை கூட போடாமல், ஒரு டவலைத் தோளில் போட்டுக்கொண்டு, மிக எளிய தோற்றத்துடன் தெரிந்த ஒருவர் மும்மரமாக ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். அவரைப் பார்த்த கோபு தன் அருகே நின்றிருந்தவரிடம் 'அவரு யாரு, என்ன எழுதறாரு.?' என்று விசாரித்தார். "அவர்தான் சி.என். அண்ணாத்துரை. சினிமாவுக்கு கதை, வசனம் எழுதறாரு!" என்று பதில் வந்தது.

" யார்!? 'வேலைக்காரி', 'நல்லதம்பி' படங்களின் கதாசிரியரா?" என்று வியப்பாகக் கேட்டார் கோபு. "ரெண்டு படத்தையுமே பார்த்திருக்கிறாயே தம்பிஞ். நீ காஞ்சிபுரத்தானா இவ்வளவு விசாரணை தொடுக்கிறாய்?" என்று கேட்டவர் அரங்கண்ணல். அண்ணா அரசியலில் வளர்ந்திராத அக்கால கட்டத்தில் திரைப்படங்களுக்கு அவர் கதை வசனம் எழுதிக்கொண்டிருந்த அந்த திண்ணைக்காட்சி கோபுவின் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துபோனது.

பின்னாளில் எத்தனை பெரிய அல்லது சிறிய பட நிறுவனமாக இருந்தாலும் சரி ஹோட்டல் அறை வேண்டாம் என்று கோபு அன்புடன் மறுத்துவிட்டு, மாடிப்படி, மொட்டை மாடி, ஸ்ரீதர் காரின் முன்இருக்கை அல்லது பானட் ஆகியவற்றில் அமர்ந்து கிடுகிடுவென்று நகைச்சுவைக் காட்சிகளை எழுதிக் கொடுக்க அண்ணாவின் எளிமை கோபுவுக்குப் பெரும் தாக்கத்தைத் தந்தது. அப்படிப்பட்ட அண்ணாவுக்கு எதிராக கோபு தன் குழுவினருடன் தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை உருவானது. *(சிரிப்பு தொடரும்)*

21 நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்

# பொருள் கொள்முதல்... கவனிக்க வேண்டிய 5 விஷயங்கள்!



ஏற்றுமதித் தொழிலை வெற்றிகரமாகச் செய்வதற்கான பல்வேறு விஷயங்களை ஒவ்வொரு வாரமும் பார்த்து வருகிறோம். ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறைகள், எப்படி பொருளை வாங்குவது, எங்கெல்லாம் நம் பொருளை விற்க வாய்ப்பிருக்கிறது என்பதையெல்லாம் விரிவாகப் பார்த்திருக்கிறோம். எந்தப் பொருளுக்கெல்லாம் தடை இருக்கிறது என்பதையும் பார்த்தோம்.

ஏற்றுமதி செய்யக்கூடிய எந்த ஒரு பொருளையும் நீங்கள் தேர்ந்தெடுத்து ஏற்றுமதி செய்யலாம். ஆனால், இறக்குமதியாளரிடமிருந்து ஆர்டர் கிடைத்து, பின்னர் பொருளைக் கொள்முதல் செய்யப் போகும்போது நாம் கவனத்தில்கொள்ள வேண்டிய ஐந்து விஷயங்கள் இருக்கின்றன. அவை *1. சரியான நேரத்தில் டெலிவரி 2. உள்ளூர் சந்தையைக் கவனித்தல் 3. இலவச சாம்பிள் 4. பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ளுதல் 5. ரிட்டர்ன் அல்லது எக்ஸ்சேஞ்ச்*

**1. சரியான நேரத்தில் ஏற்றுமதி**

ஏற்றுமதிக்காகக் கொள்முதல் செய்யப்பட்ட பொருளை அந்தப் பொருளின் தன்மை மற்றும் தரத்துக்கு ஏற்ப குறிப்பிட்ட காலத்துக்குள் ஏற்றுமதி செய்து இறக்குமதியாளருக்கு அனுப்பிவிட வேண்டும். தாமதப்படுத்தினால் அந்தப் பொருள் கெட்டுப்போகவோ, தரம் குறையவோ வாய்ப்பிருக்கிறது. அப்படியே அனுப்பினால் இறக்குமதியாளரிடையே நம்முடைய பெயரும் கெட்டுப்போகும். எப்போதுமே இறக்குமதியாளர் விரும்பும் தரத்தில், கேட்கப்பட்ட அளவில் நாம் அனுப்பும் பொருள்கள் சரியாக இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு அவரிடமிருந்து ஆர்டர் தொடர்ந்து கிடைப்பதோடு மட்டுமில்லாமல், அவருக்குத் தெரிந்தவர்களிடத்திலிருந்தும்கூட ஆர்டர்கள் கிடைக்கும் வாய்ப்பு உருவாகும்.

**2. உள்ளூர் சந்தையைக் கவனிக்கவும்**

ஏற்றுமதிக்காக வாங்கப்படும் பொருள் முழுமையாக ஏற்றுமதி செய்யப்பட்டுவிட்டால் நல்ல விஷயம். ஒருவேளை கொள்முதல் செய்த பொருள் மீதமடைந்துவிட்டால் அதனை என்ன செய்வது? முதல் போட்டு வாங்கிய பொருள் வீணாகி விடக்கூடாது அல்லவா! எனவே, அந்தப் பொருளை உள்நாட்டுச் சந்தையில் விற்பதற்கான வழி இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கான வாய்ப்பு இருக்கும்பட்சத்தில் விற்பனை செய்துவிட வேண்டும். உள்நாட்டுச் சந்தையில் ரீடெய்ல் மூலம் விற்கலாம். இல்லையென்றால் வியாபாரிகளிடம் மொத்தமாகவும் விற்பனை செய்யலாம்.

**3. இலவசம் மூலம் விளம்பரம்**

உள்நாட்டில் விற்பதற்கான முயற்சி முழுமையாக வெற்றியடையவில்லை எனும் பட்சத்தில் மீதமிருக்கும் பொருளை சிறிய அளவில் சாம்பிள் பேக்குகளாக மாற்றி இலவசமாகக் கொடுக்கலாம். அப்படி இலவச சாம்பிள் கொடுப்பதன் மூலம் நம்மிடம் இந்தப் பொருள் இத்தகைய தரத்தில் உள்ளது என்று விளம்பரப்படுத்த முடியும். சாம்பிள் பாக்கெட்டுகளில் நிறுவனத்தின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியவை அவசியம் இருக்க வேண்டும்.

**4. பற்றாக்குறை ஏற்படக்கூடாது**

ஏற்றுமதிக்காக நாம் வாங்கிய பொருள் இறக்குமதியாளர் கேட்ட அளவைவிட குறைவாக, அதாவது பற்றாக்குறையாக இருக்கவே கூடாது. எனவே, எப்போதும் இறக்குமதியாளர் கேட்கும் அளவைவிட சற்றுக் கூடுதலாகவே பொருள்களை வாங்க வேண்டும்.

உதாரணத்துக்கு, இறக்குமதியாளர் அரை டன் வெல்லம், 500 கிராம் பேக்கில் 1000 பாக்கெட்டுகளாகக் கேட்கிறார் என்று வைத்துக்கொள்வோம். நாம் மிகச் சரியாக 500 கிலோ வாங்கினோம் என்றால் நம்மால் சரியாக ஆயிரம் பேக்குகளைச் செய்ய முடியாது. ஏனெனில், எப்படியும் பேக்கிங் செய்யும்போது குறிப்பிட்ட அளவில் பொருள் வீணாக வாய்ப்புள்ளது. மேலும், பேக்கிங் எடையும் துல்லியமாக 500 கிராம் இருக்காது; அளவு சற்றுக் கூட குறைய இருக்கவும் வாய்ப்புள்ளது. எனவே, எந்தவொரு பொருளாக இருந்தாலும் வாங்கும்போது சற்றுக் கூடுதலாகவே வாங்க வேண்டும்.

சரியான அளவில் வாங்கினால் பின்னர் முழுமையாக ஆர்டரை அனுப்ப முடியாமல் போகலாம். இறக்குமதியாளர் கேட்டபடி பொருளை அனுப்பாவிட்டால் கெட்டபெயரே கிடைக்கும். பிறகு, கஷ்டப்பட்டு ஆர்டர் பிடித்தது எல்லாம் வீணாகப் போய்விடும். நேரடியாக 500 கிராம் பாக்கெட்டுகளாகவே வாங்கிவிட்டால் எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால், அப்படி வாங்கிக் கொடுப்பதைக் காட்டிலும் ரீபேக்கிங்கில் கணிசமான லாபத்தைப் பார்க்கலாம் என்பதால் 500 கிலோவுக்குச் சற்றுக் கூடுதலாக வாங்கிக் கொள்ளலாம். குறைந்தபட்சம் குறிப்பிட்ட அளவைவிட 5 சதவிகிதம் கூடுதலாகக் கொள்முதல் செய்துகொண்டால் நல்லது.

**5. ரிட்டர்ன் மற்றும் எக்ஸ்சேஞ்ச்**

ஏற்றுமதிக்காகக் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களை உள்ளூர் சந்தையில், ரீடெய்லிலோ மொத்தமாகவோ, அல்லது சாம்பிள் மூலமோ விற்க உங்களால் முடியாதபட்சத்தில் நீங்கள் கொள்முதல் செய்தவரிடமே இந்தப் பொருளைத் திரும்பக் கொடுத்துவிட முயற்சி செய்யலாம். பொருளை ரிட்டர்ன் செய்துவிட்டு அதற்கான தொகையைப் பணமாகவும் பெறலாம் அல்லது வேறு பொருள்கள் ஏதேனும் நமக்கு தேவைப்படுகிறது எனில் அந்தப் பொருளையும் வாங்கிக் கொள்ளலாம். அதனால் கொள்முதல் செய்யும்போதே அதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்பதை உற்பத்தியாளரிடம் அல்லது டீலரிடம் கேட்டுக்கொள்ளவும்.

ஏற்றுமதிக்காகப் பொருள் கொள்முதல் செய்யப்படுவதற்கு முன் இந்தஐந்து விஷயங்களுக்கும் வாய்ப்பிருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்வது நல்லது. தன்மூலம் நஷ்டமடையாமல், எதிர்பார்த்த லாபத்தை அடையமுடியும். அடுத்த இதழில் ஏற்றுமதியாளர்களுக்குக் கைகொடுக்கும் புரோமோஷனல் கவுன்சில்கள் பற்றிப் பார்க்கலாம். அதில் யார் எந்த கவுன்சிலில் மெம்பராக வேண்டும், இந்த புரோமோஷன் கவுன்சில்களால் என்ன பயன் என்பதைப் பற்றிப் பார்க்கலாம்.

*(ஜெயிப்போம்)*









### உதவிக்கு வரும் உயிரியல் - 5

# சிறு துண்டு நிலம்... 8 தொன் உரம் தயாரிக்கலாம்!

முனைவர் அ.உதயகுமார்





இந்த உலகம், மனிதர்களுக்கு மட்டுமானதல்ல; கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் உள்பட கோடிக்கணக்கான உயிர்களுக்கும் உறைவிடம். நாம்தான் உலகை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறோம் என எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் உலகை ஆட்டிவைப்பவை பூச்சிகளும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்தான். நுண்ணுயிர்கள் என்றாலே மனிதனுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் உண்டு. உண்மையில் அப்படி இல்லை. தனது அனைத்துப் படைப்புகளிலும் இரண்டு வாசல்களை வைத்தே இருக்கிறது, இயற்கை. ஒரு வாசல் அடைத்தால், இன்னொரு வாசல் திறக்கும். அதன்படி, தீமை செய்யும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்த, சில நன்மை செய்யும் நுண்ணுயிர்களையும் படைத்துள்ளது. அப்படிப்பட்ட நுண்ணுயிர்களைப் பற்றிய புரிதலே இந்தத் தொடர்.

உயிர்ச்சங்கிலியில் யானை, சிங்கம், மனிதன் எல்லோரும் இருப்பதைப் போல நுண்ணுயிர்களும் முகவும் முக்கியமானவை. உயிரற்று மண்ணில் விழும் அத்தனை பொருள்களையும் மட்கவைக்கும் அவசியமான பணியைச் செய்யும் உலகின் துப்புரவாளனான நுண்ணுயிர்கள், நம்மைச் சுற்றி எப்போதும் இருந்துகொண்டேதான் உள்ளன. நுண்ணுயிர்கள் இல்லையெனில், இந்த உலகமே சில நாள்களில் குப்பை மேடாகப் ஆகிவிடும். அதற்கு உதாரணம் பிளாஸ்டிக். நுண்ணுயிர்களால் மட்க வைக்க முடியாத நிலையில் பிளாஸ்டிக் பொருள்கள் இருப்பதால்தான், அவை குவிந்து கிடக்கின்றன.

நன்மை செய்யும் நுண்ணுயிர்களைக் கண்டறிந்து, அதை மனிதகுல மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் ஆராய்ச்சிகள் உலகெங்கும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. பிளாஸ்டிக் பொருள்களை மட்கவைக்கும் நுண்ணுயிர்களைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இன்னமும் அதில் வெற்றி பெற முடியவில்லை. அதே நேரம், கடலில் கலக்கும் எண்ணெய்க் கசிவுகள், கிரீஸ் போன்றவற்றைச் சுத்திகரிக்கும் நுண்ணுயிர்களை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டறிந்திருக்கிறார்கள்.

இறந்துபோன விலங்குகள், மனித உடல்கள் மற்றும் தாவரங்கள் எதையும் நுண்ணுயிர்கள் மட்க வைக்கவில்லை என்றால் என்னவாகும் என்று யோசித்துப் பாருங்கள். நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகிறது.

ஆக, உலகம் உயிர்த்திருப்பதற்காக ஓயாது உழைத்துக்கொண்டே இருக்கும் நுண்ணுயிர்களும் பல்வேறு காரணிகளால் அழிந்து வருகின்றன. அவற்றைக் காக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நுண்ணுயிர்களைக் காப்பதற்காக விவசாயிகள், தங்கள் நிலங்களில் ரசாயன இடுபொருள்கள் பயன்பாட்டைக் குறைத்து, தொழுவுரம், குப்பை உரம் போன்ற இயற்கை இடுபொருள்களைப் பயன்படுத்த வேண்டும். 'தொழுவுரம், குப்பை உரங்களை நிலத்தில் கொட்ட நாங்கள் தயார். ஆனால், குப்பை உரங்கள் கிடைப்பதில்லையே...' என்ற ஆதங்கம் விவசாயிகளிடம் இருக்கிறது. கால்நடைகளின் அழிவு, நிலங்களுக்கும் தொழுவுரங்களுக்குமான தொலைவை அதிகப்படுத்திவிட்டது.

தொழுவுரம் கிடைக்கவில்லையே எனக் கவலைப்படும் விவசாயிகளின் விசனத்தைப் போக்க, குறுகிய காலத்தில் உரம் தயாரிக்கும் முறை ஒன்று இருக்கிறது. மிக வேகமாக மட்கக்கூடிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தொழுவுரம் தயாரிக்கும் முறையைப் பற்றிச் சொல்லப்போகிறேன். உங்களிடம் ஒரு சிறிய நிலமும், குறைந்தளவு கால்நடைக் கழிவு, தாவரக்கழிவு ஆகியவை இருந்தால் போதும், ஆண்டுக்கு 8 தொன் உரத்தைத் தயாரிக்க முடியும்.

இந்த உரத்தயாரிப்புக்கு இலை தழைகள், தென்னைநார்க் கழிவு, மர அரவை ஆலைகளில் கிடைக்கக்கூடிய தூள், நெல் உமி, சாம்பல், வீணான தானியங்கள், மாவு... போன்ற அனைத்துத் தாவரக் கழிவுகளையும் பயன்படுத்தலாம். ஆடு, கோழி, மாடு என எந்தக் கால்நடைக் கழிவுகளாக இருந்தாலும், அவற்றைத் தனித்தனியாகவோ, மொத்தமாகச் சேர்த்தோ பயன்படுத்தலாம்.

தொழுவுரம் கிடைக்கவில்லை எனக் கவலைப்படாமல், குறைந்த அளவில் கால்நடைக்கழிவுகளைப் பயன்படுத்தி இம்முறையில் தொழுவுரம் தயாரித்துப் பயன்படுத்தலாம். இதன்மூலம் மண்ணில் நுண்ணுயிர்கள் அதிகளவில் பெருகும். இதனால் மண் வளமாவதோடு, பயிர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துகளும் அதிக அளவில் கிடைத்து மகசூல் பெருகும்.

குறைந்த செலவில் உரத்தைத் தயாரிக்க முடிவதோடு இடுபொருள்களின் தேவை குறைகிறது. நிலமும் காலப்போக்கில் மேன்மேலும் வளமாகிக்கொண்டே வரும்.

நுண்ணுயிர்கள் விவசாயத்துக்குச் செய்யும் நன்மைகள் குறித்துத் தொடர்ந்து பார்ப்போம்... **பரவும்**


## சிறு துண்டு நிலத்தில் 8.1 தொன் இயற்கை உரம் தயாரிப்பது எப்படி?

நான்கடி அகலம், ஆறடி நீளம், மூன்றடி ஆழத்தில் அருகருகே 10 குழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இக்குழி ஒரு தொன் கழிவுகளைக் கொள்ளும் அளவில் இருக்கும். 750 கிலோ தாவரக்கழிவுகள், 250 கிலோ கால்நடைக் கழிவுகள் ஆகியவற்றை எடுத்து நன்றாகக் கலந்துகொள்ள வேண்டும். 36 லிட்டர் தண்ணீரில் 36 மில்லி இ.எம் ஊற்றி நன்றாகக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். இ.எம் கிடைக்காத நிலையில் ஒரு கிலோ டிரைக்கோடெர்மா விரிடியை 36 லிட்டர் தண்ணீரில் கலந்துகொள்ளலாம்.

கழிவுகள் கலந்த கலவையை முதல் குழிக்குள் அரையடி ஆழத்துக்கு நிரப்ப வேண்டும். நுண்ணுயிர்கள் கலந்த தண்ணீரை 6 லிட்டர் அளவுக்கு எடுத்து, கழிவுகள் மீது தெளிக்க வேண்டும். மீண்டும் அரையடி உயரத்துக்குக் கழிவுகள், அதன் மீது 6 லிட்டர் நுண்ணுயிர்கள் கலந்த நீர் என அடுக்கடுக்காக அமைக்க வேண்டும். இப்படிச் செய்யும்போது, மூன்றடி ஆழமுள்ள குழியில் ஆறு அடுக்குகள் வரை போடலாம். இப்படிக் குழியை நிரப்பி, 'வினைல் ஷீட்' கொண்டு மூடி, ஷீட் நகராத அளவுக்கு அதன் மீது மண்ணைப் போட்டு விட வேண்டும். அதாவது, குழிக்குள் காற்று புகாதவாறு மூடிவிட வேண்டும். இதே முறையில், மொத்தம் ஒன்பது குழிகளை நிரப்ப வேண்டும். பத்தாவது குழி காலியாக இருக்க வேண்டும்.

15 நாள்கள் கழித்து, ஒன்பதாவது குழியில் இருக்கும் கழிவுகளை வெட்டி எடுத்து பத்தாவது குழியில் நிரப்பி, காற்றுப்போகாமல் மூடி வைக்க வேண்டும். அடுத்து எட்டாவது குழியில் இருக்கும் கழிவை ஒன்பதாவது குழியில் கொட்டி மூட வேண்டும். இப்படி அனைத்துக் குழிகளிலும் உள்ள கழிவுகளையும் குழி மாற்றும்போது அவை புரட்டப்பட்டுவிடும். அடுத்த 15 நாள்களில் இந்தக் குழிகளில் இருக்கும் கழிவுகள் நன்றாக மட்கி உரமாக மாறிவிடும்.

நாம் மொத்தம் 9 ஆயிரம் கிலோ (9 தொன்) கழிவுகளைக் கொட்டியிருந்தாலும், உரமாக எடுக்கும்போது, 8,100 கிலோ (8.1 தொன்) அளவில் உரம் கிடைக்கும்.








▶ உலக சுற்றுச்சூழல் தினம், உலக தேனீக்கள் தினத்தை முன்னிட்டு தேனீக்கள் கிராமம் திட்டத்தின் தொடக்க நிகழ்வு கோண்டாவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் இந்த திட்டத்தின்படி கோண்டாவில் முதலாவது தேனீக்கள் கிராமமாக உருவாகிறது. த.தே.ப. இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் வடக்கு முதலமைச்சர், வடக்கு விவசாய அமைச்சர் உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். பயனாளிகளிற்கு தேனீப்பெட்டியும், தேனீக்களும் வழங்கப்பட்டன.

▶ கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால், கமநல வங்கியின் அனுசரணையுடன் விவசாயிகளுடனான புதுவருட விழா ஒட்டுசுட்டான் சூழாமுறிப்புகுளத்தில் நடைபெற்றது. இதில் மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, கமநல உதவிஆணையாளர், பிரதி மாகாண நீர்பாசன பணிப்பாளர், பிரதேச செயலர், கமக்காரர் அமைப்பின் சமாஜதலைவர், அயல் பாடசாலை அதிபர்கள் மற்றும் விவசாயிகளுடன் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு சுயதொழில் மேம்பாட்டு கடனுதவி திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.










▶ மவடமாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் 2017ம் ஆண்டுக்கான மாகாண நிதியொதுக்கீட்டில் வவுனியா மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவிலுள்ள கணேசபுரத்தில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

13-ம் பக்க தொடர்ச்சி...

ஷனை தனக்கு காட்டுமாறு தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளார். முன்னர் செய்த இரண்டு திருமணங்களை மறைத்தது, வானிஷனை தனது பிள்ளையில்லையென கூறியது போன்ற காரணங்களால் பிள்ளையை காட்ட மறுத்து வந்தார். வசுதரனின் தொல்லை அதிகரிக்க, தனது தொலைபேசி இலக்கத்தை மோனிஷா மாற்றியுள்ளார்.

மோனிஷாவை பழிவாங்கும் நோக்கத்துடன், வவுனியாவுடன் தொடர்புடைய முகப்புத்தகக பக்கமொன்றை உருவாக்கிய வசுதரன், மோனிஷாவுடன் எடுத்துக்கொண்ட அந்தரங்க புகைப்படங்களில் தனது படங்களை மறைத்துவிட்டு வெளியிட ஆரம்பித்தார். இந்தபடங்களை மேலும் சில இணையத்தளங்களில் வெளியிட முயன்றும் வந்தார். அதுமட்டுமல்லாமல், திருகோணமலையை சேர்ந்த தனது இரண்டு நண்பர்களை அனுப்பி, 'பிள்ளையை விரைவில் தூக்குவோம்' என்று அச்சுறுத்தியுள்ளார். அத்துடன், தனது மூத்த சகோதரியின் மகனையும் வசுதரன் அனுப்பி அச்சுறுத்தியுள்ளார்.

இந்த சமயத்தில் மோனிஷா குடும்பம் வசித்த வாடகை வீட்டில் திருத்த வேலைகள் செய்ய வீட்டின் உரிமையாளர் தீர்மானித்திருந்தார்.



அதனால் அதேகாணியில் அந்த வீட்டிற்கு பின்புறமிருந்த வீட்டில் அவர்களை தங்க வைத்தார்.

இந்த நிலையில் 31.05.2018 அன்று இரவு 2.05 மணியளவில் 22 தொடக்கம் 25 வயது மதிக்கத்தக்க மூவர் முகத்தை நன்றாக மறைத்தபடி மதில்பாய்ந்து வீட்டு வளவிற்குள் நுழைந்துள்ளனர். மோனிஷா குடும்பம் முன்னர் வாழ்ந்த தற்போது திருத்த வேலைகள் நடந்த வீட்டிற்குள் நுழைந்தனர். அந்த வீட்டில் வேலை செய்பவர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். 52 வயதான ஒருவரை அழுத்திப்பிடித்து, அவரது கழுத்தில் கத்தியை வைத்து, பிள்ளை எங்கே என விசாரித்துள்ளனர். மற்றையவர்களை எழும்ப விடாமல் மரம் அரியும் வாளை வைத்து அச்சுறுத்தியுள்ளனர். அங்கு பிள்ளையில்லையென தெரிந்ததும், அந்த வீட்டிற்கு பின்புறம் இருந்த வீட்டுக்குள் நுழைந்தனர்.

வீட்டை பூட்டிவிட்டு மோனிஷா குடும்பம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. கதவை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த குண்டர்கள், 08 மாத குழந்தையான வானிஷனை தூக்கிக்கொண்டு தப்பியோடி சென்றனர். அவர்கள் முகத்தை மூடிக்கட்டியிருந்ததால் அடையாளம் காண முடியவில்லை.

மோனிஷாவின் அக்கா, தம்பி ஆகியோர் குழந்தையை மீட்க ஓடிச்சென்றபோதும், கடத்தல்காரர்கள் தப்பிச்சென்றுவிட்டனர். குழந்தையை அவர்கள் தூக்கிக்கொண்டு ஓடிய போது, மோனிஷா குடும்பம் கூக்குரலிட்டபோதும், யாரும் உதவிக்கு வரவில்லை.

இந்த சம்பவம் முடிந்து அதிகாலை 02.25 ஆன போது, வசுதரனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மோனிஷா அழுது கொண்டிருக்கும் சத்தத்தைகேட்ட பின்னர் தொலைபேசி அழைப்பை துண்டித்து விட்டார்.

உடனடியாக பொலிசாரிற்கு தகவல் கொடுக்கப்பட்டு, பொலிசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். தடயவியல் பொலிசாரும் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

குடத்தல் தொடர்பாக பல கோணங்களில் விசாரணையை ஆரம்பித்துள்ள பொலிசார், வசுதரனின் சகோதரியின் மகனையும் விசாரணைக்கு உள்ளாக்கியிருந்தனர்.

இதன்பின்னர் வவுனியா பொலிசாருக்கு இலக்கத்தை மறைத்து மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பொன்றை வசுதரன் ஏற்படுத்தி பேசியுள்ளார். வானிஷனை நான்தான் கடத்தியுள்ளேன், மூன்று நாளின் பின் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதாகவும் கூறி தொலைபேசியை துண்டித்துள்ளார்.

02ம் திகதி குழந்தையை வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதாக கடத்தல்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அன்றிரவு வரையும் குழந்தையின் தாயார் வவுனியா பொலிஸ் நிலையத்தில் காத்திருந்தும், குழந்தை ஒப்படைக்கப்படவில்லை. மறுநாள், கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பகுதி வீடொன்றை சுற்றிவளைத்த பொலிசார் அங்கிருந்து குழந்தையை மீட்டெடுத்துள்ளனர். அந்த வீட்டிலிருந்த இரண்டு பெண்களையும் கைது செய்தனர். இத்துடன் குழந்தை கடத்தல் நாடகம் முடிவுக்கு வந்தது.

இதுவரை மூவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடந்து வருகின்றன.

✒ சாள்ஸ் ஜே போர்மன்

02. நாட்டுக்குள்ளேஒருநாடு



# 2 அதிரியாட்டிக் கடல் தன் கைப்பட எழுதிய கவிதை

பேருந்து அலுவலகக் கட்டடத்தின் ஒரு ஓரமான பகுதியில் கதிரை எங்கள் பெட்டிகளுடன் நிற்கச் சொன்னேன். சிறு வயதிலிருந்தே நாங்களிருவரும் போகும் பயணங்களில் நிலைமை இப்படித்தான். அதனால், அப்படியான சந்தர்ப்பங்களுக்கு அவன் பழக்கமானவன். "யார் வந்து எதைக் கேட்டாலும் என்னைக் காட்டு" என்று சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

நான் போய் அங்குள்ள முகவர்கள் ஒருவரின் முன்னால் நின்ற வரியில் காத்திருந்து எனது சமயம் வந்ததும் விசாரித்து பயணச் சீட்டுக்களை வாங்கிக் கொண்டேன். கிரவேஷியாவின் நாணயம் குணாவை நான் ஏற்கனவே விமான நிலையத்தில் வாங்கியிருந்ததால் நாணய மாற்றுப் பிரச்சினை இப்போ எழவில்லை.

மகனையும் கூட்டிக்கொண்டு வெளியே வந்து குறிப்பிட்ட இடத்தில் நின்ற சில நிமிடங்களிலேயே பேருந்து வந்து விட்டது. இணையத் தொடர்புக்கான இலவச வசதியுடன், குளிர்சாதன வசதியுமுள்ள வண்டி. நீண்டதூரப் பேருந்துகளெல்லாம் நவீன வசதிகளுடன் இருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. பிரயாணத் திட்டத்தைப் போடும் போது நான் ஏன் ரயிலைத் தெரிவு செய்யவில்லையென்று பின்பு யோசித்தேன். என்னிடமே பதிலில்லை. கடற்கரையோரமே பல முக்கிய நகரங்கள் இருப்பதால் பயணிகள் கப்பல்களில் ஒன்றிலாவது பயணித்துப் பார்த்திருக்கலாமே என்று பின்பு எண்ணிக் கொண்டேன். எப்படியோ எங்கள் பயணத்தில் கிரவேஷியாவின் பேருந்தைத் தெரிந்து கொண்டதில் எனக்குச் சந்தோசமே. எல்லா வண்டிகளுமே மிக வசதியாக இருந்தன. நிறையச் சேவைகளுடன் பயணிகளை மதிப்புடன் எதிர்கொள்கிறார்கள் ஊழியர்கள்.

எங்களிடமிருந்த பெரிய பயணப் பெட்டிகளை பேருந்தின் கீழ்ப்பகுதியில் வைப்பதற்காக வாங்கிக் கொண்டு அதற்கான ரசீதையும் தந்தார் சாரதி.

அப்போதுதான் "பசிக்குது" என்றான் மகன். நான்கு மணித்தியாலப் பயணம் எங்கள் முன்னால் இருந்தது. ஸ்பிளிட் நகரிலிருந்து டுப்ரோவ்னிக் சுமார் 215 கி.மீ தூரத்திலிருந்தது. கதிரிடம் வண்டிக்குள் இருக்கச் சொல்லிவிட்டு வேகமாகப்போய் அருகிலிருந்த உணவுச் சாலையில் உணவுப் பொட்டலங்களை வாங்கிக் கொண்டு வந்தேன்.

பேருந்து பார்ப்பதற்கு மட்டும் நவீனமாக இருக்கவில்லை, ஓட ஆரம்பித்த போதும் அலுங்காமல் குலுங்காமல் சென்றது. வண்டிக் காரரோ, பயணிப்பவர்களோ பாட்டுக்கள் , எதையும் போட்டுத் தலை வலியை உண்டாக்கவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். அழகான, சுத்தமான ஸ்பிளிட் நகரினூடாக நகர்ந்த வண்டி நகரைத் தாண்டியதும் வேகம் பிடித்தது.

இரண்டு பக்கமுமே கண்கொள்ளாக் காட்சிகள். ஒரு பக்கம் அதிரியாட்டிக் கடலால் உண்டாக்கப்பட்ட விதம்விதமான அமைப்புக்களிலான கரையோரம். மற்றப் பக்கமோ உயர்ந்து வளைந்து சென்ற மலைப்பரப்பு.

ஸ்பிளிட் நகரத்தில் இறங்கியும் எதற்காக நாங்கள் டுப்ரோவ்னிக் நோக்கி உடனேயே பயணத்தை ஆரம்பித்தோம் என்று நீங்கள் வியக்கலாம். நாங்கள் திரும்பிப்போகும் போதும் அதே நகரிலிருந்துதான் விமானத்தில் திரும்பவிருந்தோம் என்பது அதற்கான காரணங்களில் ஒன்று.

கிரவேஷியா ஐரோப்பியர்களிடையே பிரபலமான சுற்றுலா ஸ்தலமாகியதன் முக்கிய காரணம் அதன் கடற்கரைதான் என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். அதனால்ஸ்பிளிட் தவிர,டுப்ரோவ்னிக், பூலா, ஸடார், ஆகிய கடற்கரை வாசஸ்தல நகரங்களுக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து தினசரி பல விமானங்கள் பறக்கின்றன. நாட்டின் தலைநகரான ஸாகிரெப்புக்கும், ஸ்பிளிட் நகருக்கும் பறக்கும் விமானப் பிரயாணிகளின் எண்ணிக்கையில் அதிக வித்தியாசமில்லை.

நான் கிரவேஷியாவை பற்றித் தேடி வாசித்த விபரங்களிலிருந்து என்னைக் கவர்ந்தது டுப்ரோனிக். எழுத்தாளர் ஜோர்ஜ் பெர்ணாட்ஷா "If you want to see heaven on earth, then come to Dubrovnik" என்று எழுதியிருக்கிறார். அந்த நகரை ஐரோப்பாவின் மிக அழகான நகர் என்று பலர் விபரிக்கிறார்கள். தவிரவும் நீங்கள் "Game of Thrones" என்ற பிரபலமான, பல பரிசுகளையும் வென்ற தொலைக்காட்சித் தொடரை பார்த்து என்னைப் போன்று அதன் ஆதர்ச ரசிகராக மாறியிருப்பின் அத்தொடரின் பல பகுதிகளில் காட்டப்படும் கோட்டையை நேரில் பார்க்க ஆசைப்படுவீர்கள். அக் கோட்டை டுப்ரோவ்னிக்கில் இருக்கிறது என்று அறிந்து கொண்டபோது கிரவேஷியாவுக்குப் போகும் சந்தர்ப்பம் வரும்போது வேறெதை முதலில் பார்க்க ஆசைப்பட முடியும்?

எனது ரோடோஸ் பயணக் கட்டுரையை நீங்கள் வாசித்திருப்பின் அங்கிருக்கும் பழங்காலக் கோட்டை என்னை எத்தனை கவர்ந்தது என்பதைப் புரிந்துகொண்டு சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களை நேரில் கண்டு விபரங்களைத் தெரிந்துகொள்ள எனக்கிருக்கும் ஆர்வத்தையும் புரிந்து







தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# பற்றைக்காடுகளாக மண்டிக் கிடக்கும் கட்டடங்கள் சந்தையாக மாறுவது எப்போது?

## போரதீவுப்பற்றில் இருந்து ஓர் மனு

திலக்ஸ் ரெட்ணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பிரதேசத்தில் போரதீவுப்பற்று பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசத்தில் பிரதேசசபைக்கு உரித்தான பழுகாமம், பெரிய போரதீவு, மண்டூர், பாலையடிவட்டை ஆகிய நான்கு பொதுச்சந்தைகளில் இரண்டு பற்றைக்காடுகளால் சூழப்பட்டு மந்தைகளின் தரிப்பிடமாகவும், 01 கவனிப்பாரற்றும்,பழுகாமம் சந்தை கட்டடிடம் இல்லாமல் ஆக்கப்பட்டும் விட்டுள்ளமைமிகவும் கவலைக்கிடமானஒருவிடயம்.

இப்பிரதேசத்தை பொறுத்தமட்டில் மக்கள் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டுமாயின் பலமைல்தூரம் கடந்து களுவாஞ்சிகுடி, கல்முனை போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைதான் உள்ளது. பெருந்தொகை பணத்தை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த சந்தைகளை அரச நிறுவனங்கள் மக்கள் பாவனைக்காக சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாலையடிவட்டை பொதுச்சந்தையும், பெரிய போரதீவு பொதுச் சந்தையும் பற்றைக்காடுகளால் மூடப்பட்டு மந்தைகளின் வாழ்விடங்களாக காணப்படுகின்றது. மண்டூர் சந்தை கட்டடத்தில் ஓரிரு விற்பனையாளர்கள் விற்பனை செய்கின்றனர். பழுகாமம் சந்தை கட்டிடம் இருந்த வளாகத்தில் கட்டடத்தை அகற்றி விட்டு கலாசார மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போது போரதீவு சந்தி சந்தையாக மாறிவருகின்றது.

இந்த பகுதி மக்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை இப்பிரதேசத்தில் வணிகம் செய்ய முடியாமல் ஏனைய பகுதிகளுக்கு கொண்டு சென்று குறைந்த விலையில் கொடுக்கிறார்கள். இங்கிருந்து பொருட்களை கொண்டு செல்வதால், அங்கு மொத்தமாக கொள்வனவு செய்பவர்கள் குறைந்த விலைக்கே வாங்குகிறார்கள். மறுவளமாக, இங்குள்ள சந்தைகளை நோக்கி மொத்தமாக கொள்வனவாளர்கள் வரும்போது, ஓரளவு நல்ல விலைக்கு அவற்றை விற்க முடியும்.

வீண் பிரயாண செலவு, வீண் அலைச்சல் என்று மக்கள் பல இன்னல்களுக்கு முகங் கொடுக்கின்றனர். இவ்வாறான சந்தைகளை நடைமுறைப்படுத்தும் போது இப்பிரதேச மக்கள் அதிக நன்மையும் அடைவார்கள். போரதீவுப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட நான்கு சந்தைகளையும் வாரத்தில் ஓர் நாள் அல்லது தினந்தோறும் நடைமுறைப்படுத்தினால் பிரதேசசபையும் வருமானத்தை ஈட்டக்கூடியவாறு அமையும்.

இச்சந்தை கட்டிடங்கள் பல வருடங்களாக இயங்காமல் உள்ளது. தற்போது உருவாகியுள்ள பிரதேசசபை உறுப்பினர்கள் அடங்கிய குழு இதனை பிரேரணையாக நிறை வேற்றி, பற்றைக் காடுகளாக மண்டிக்கிடக்கும் சந்தைக் கட்டிடங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வருவார்களா என்பதே மக்களின் கேள்வியாக உள்ளது. ●






கொள்வீர்கள்.

நாங்கள் பின்பு வந்து தங்கத் திட்டமிட்டிருந்த மாக்கர்ஷ்கா என்ற அழகிய பிராந்தியத்தைக் கடந்து சென்றது பேருந்து. உயரமான சாலையில் பேருந்திலிருந்து பார்க்கும் போது கடற்கரையோரமிருக்கும் அழகிய பிராந்தியங்கள் எங்களை மிகவும் கவர்ந்தன.

வழியில் எல்லை போன்ற ஓரிடத்தில் வண்டி நின்றது. கடற்கரையின் மிக அருகாக உள்ள அச்சாலையில் இருந்த கட்டடத்தின் ஊடே சென்றிருந்தோம். வண்டிக்கு உள்ளே சில இராணுவ வீரர்கள் ஏறினார்கள் கைகளில் இயந்திரத் துப்பாக்கிகளுடன். பேருந்துக்குள் கடைசிப் பாகம் வரை மெதுவாகப் பயணிகளை பார்த்தபடி நடந்து சென்றுவிட்டு சாரதியிடம் திரும்பி பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு கீழிறங்கினார்கள்.

ஏன், எதற்காக என்ற கேள்விகள் எனக்குள் எழுந்து கொண்டிருக்க,



பதில் கிடைக்க முன்பு அருகிலிருந்த பேருந்து நிலையத்தில் எங்கள் வண்டி நிறுத்தப்பட்டது. சுமார் பதினைந்து நிமிடங்கள் இடைவேளையின் பின்பு திரும்பவும் பயணம் தொடரும் என்று அறிவித்தார் சாரதி. நாங்களும் எல்லாப் பயணிகளைப் போலவே கீழே இறங்கினோம். அழகிய கடற்கரை சாலைக்கு அடுத்த பக்கம் தெரிந்தது.


கிடைத்த சிறிய நேரத்தை வீணாக்கலாகாது என்று முடிவு செய்து கொண்ட நாம் அந்தக் கடற்கரைப் பகுதியில் சென்று காலாற நடந்தோம்.


அந்த நகரின் பெயர் நெவும் [Neum]. அப் பிராந்தியம் கிரவேஷியா நாட்டின் நடுவில் இருக்கிறது. ஆனால், அது பொஸ்னியா ஹெர்ஸகொவினா நாட்டுக்குச் சொந்தமானது. கிரவேஷ்யாவினூடே பயணம் செய்யும்போது நாங்கள் பொஸ்னியாவை கடந்துதான் ஆக வேண்டும்.

அந்தச் சுமார் 20 கி.மீற்றர் கடற்பிரதேசம்தான் பொஸ்னியா ஹெர்ஸகொவினா நாட்டுக்குச் சொந்தமான கடல் எல்லையாக இருக்கிறது. சர்வதேச ரீதியாகப் பார்த்தால் உலகின் மிகச் சிறிய கடற்கரைத் துண்டுகளைக் கொண்ட நாடொன்றாக இருக்கிறது பொஸ்னியா ஹெர்ஸகொவினா. மிகச் சிறிய சுமார் 4.1 கி.மீற்றர் கடற்கரைப் பகுதியைக் கொண்டதாக இருப்பது மொனொகோ ஆகும். **தொடரும்**

# உலக யன்னல்

தேசமித்ரன்





பிலிப்பைன்ஸில் நடப்பது போல நடாத்தப்படும் போதைப் பொருட்களுக்கு எதிரான அரச வேட்டையில் கடந்த இரண்டு வாரங்களில் 100 க்கு அதிகமான போதை மருந்து விற்பவர்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரக் கணக்கணக்கானோர் கைது செய்யப்பட்டிருப்பதாக பங்களாதேஷ் பொலீஸ் தெரிவிக்கிறது.

15.06 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைகளில் சுமார் 12, 000 பேர் கைது செய்யப்பட்டு வெவ்வேறு நீதிமன்றங்களில் ஆஜராக்கப்பட்டு ஒரு வாரம் முதல் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக நாட்டின் உள்விவகார அமைச்சர் அஸாதுஸ் மான் கான் தெரிவிக்கிறார்.

கொல்லப்பட்டவர்கள் பற்றிய விமர்சனங்கள் மனித உரிமைக் குழுக்களால் எழுப்பப்பட்டிருக்கின்றன. "பொலீசுடன் துப்பாக்கிப் போரில் ஈடுபட்டபோதே அவர்கள் கொல்லப்பட்டனர். துப்பாக்கிகளை வைத்து, போதைப் பொருட்களை விற்கும் விபாரிகளே அவர்கள்," என்று பதிலளிக்கிறார் அமைச்சர்.

போதைப்பொருள் வியாபாரத்தை அழிக்க ஒரு பிரத்தியேகக் குழு பிரத்தியேக அதிகாரங்களுடன் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களது நடவடிக்கைகள் தொடரும் என்று தெளிவாகக் கூறுகிறார் அமைச்சர் அஸாதுஸ்மான் கான்.



ஆனி 12 ம் திகதி சிங்கப்பூரில் நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் டொனால்ட்டிரம்ப் கிம் யுங் ஒன் சந்திப்பு 'நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்து விடும்' கட்டத்தில் இருக்கிறது. பல புருவங்களையும் பல கேள்விகளுடன் சுருக்க வைத்த அந்தச் சந்திப்பு நடக்கும் என்று கடைசியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.


அஃதயும்விட அதிகமானவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது ஆனி 12 இல் ரஷ்யாவில் நடக்கப் போகும் கால்பந்து உலகக் கோப்பைக்கான போட்டிகளை எனலாம். 32 நாடுகள் பங்குபற்றி விளையாடியபின் இறுதிப் பந்தயங்கள் ஆனி 30 ம் திகதி ஆரம்பமாகி , ஆடி மாதம் 15 ம் திகதியன்று யார் உலகக்கோப்பையை வென்றார்கள் என்பது தெரியவரும்.

14 ஐரோப்பிய நாடுகளும் ஆசியா, தென்னமெரிக்கா, ஆபிரிக்காவிலிருந்து தலைக்கு 5 நாடுகளும் பந்தயத்தில் பங்குபற்றுகின்றன. வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, கரீபியன் பிராந்தியத்திலிருந்து மூன்று நாடுகள் பங்குபற்றுகின்றன.

வடகொரியா அமெரிக்கா அதிபர்களின் சந்திப்பைப் போலவே என்னாகும், எப்படியாகும் என்று இழுபட்ட இன்னொரு முக்கிய விடயம் இத்தாலியின் அரசியல் நிலைமை.

பொதுத்தேர்தல் நடந்து மூன்று மாதங்களாக மீண்டும் தேர்தல் வரப் போகிறது என்று பலரும் நம்ப ஆரம்பித்த பின் ஹுசேப்பே கொன்தே என்ற சட்ட வல்லுனர் நாட்டின் பிரதமராகியிருக்கிறார். அவரும் முதலில் அமைச்சரவை அமைக்க முற்பட்டுப் பின்வாங்கிய பின்பு மீண்டும் தனது அமைச்சர்களை மாற்றி அறிவித்த பின்புதான் பிரதமராகியிருக்கிறார்.

புதிய பிரதமர் அறிவித்திருக்கும் அமைச்சர்களை ஏற்று, அவர்கள் முன்வைக்கவிருக்கும் புதிய வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுப் பாராளுமன்றத்தில் எதிரும் புதிருமாக இருக்கும் கட்சிகள் வாக்களித்தால் இத்தாலியின் அரசாங்கம் தனது அடுத்த நடவடிக்கைகளை அறிவிக்க ஆரம்பிக்கும். அதுவரை இத்தாலியும், அது பங்குபற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் மூச்சைப் பிடித்துக்கொண்டு காத்திருக்கிறார்கள்.




அமெரிக்காவின் ஸ்டார்பக் உணவகமொன்றினுள் எதையும் கொள்வனவு செய்யாமல், யாருக்காகவோ காத்திருந்த இரண்டு கறுப்பு அமெரிக்கர்கள் அங்கிருந்த கழிவறையைப் பாவித்தார்கள். உணவக ஊழியர்கள் அவ்விருவரையும் பிடித்து பொலீஸில் கொடுத்து விட்டனர். அச்சம்பவம் இணையத்தளத்தில் பரவவே பெரும் கொந்தளிப்பு உண்டாகி அதைப் பலர் கண்டித்தனர்.

தங்கள் நிறுவனத்துக்கு நிறவெறி இருப்பதாக கருதப்படலாகாது என்ற முடிவில் ஸ்டார்பக் நிறுவனம் அமெரிக்காவிலிருக்கும் தனது 8,000 உணவகங்களையும் நான்கு மணிநேரம் மூடிவைத்து, தங்கள் ஊழியர்களுக்கு விருந்தினர்களுடன் எப்படி நடக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தது. ஸ்டார்பக் நிறுவனத்தின் ஊழியர்கள் நிறவெறியுடன் நடந்து கொண்ட விபரங்கள் வெளியாவது இது முதல் தடவையல்ல.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நான்காவது பெரிய நாடான ஸ்பெயினிலும் அரசியல் நிலநடுக்கம் ஏற்பட்டது. மீண்டும் மீண்டுமென்று மூன்று தடவைகள் முயற்சித்த பின் 2011 இல் ஸ்பெயினின் பிரதமராகிய மரியானோ ரஜோய் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் பதவியிழந்தார். வலதுசாரிக் கட்சியின் பிடியிலிருந்த ஸ்பெயினில் இடதுசாரிக்கட்சியின் பெற்றோசான்சேஸ் புதிய பிரதமராகினார்.

சமீபகாலத்தின் பல ஐரோப்பிய நாடுகளில் நடந்தது போலவே ஸ்பெயினின் வலதுசாரிக் கட்சியும் இரகசியமாக கட்சி நிதி சேர்த்தது வெளிவந்ததுவே மரியானோ ரஜோயின் பதவியிழப்புக்கு காரணம். 1999 2005 வரை அக்கட்சி நாட்டின் பல முக்கிய நிறுவனங்களிடம் இருந்து நிதி வசூலித்து கணக்கில் காட்டாத ஒரு கட்சி நிதியை வைத்திருந்தது. அதை இயக்கியவர் கட்சியின் பொருளாதாரப் பொறுப்பிலிருந்த லூயிபர் சேனாஸ் என்பவராகும். அவ்விபரங்களை ஸ்பானியப் பத்திரிகையொன்று இவ்வருட ஆரம்பத்தில் வெளியிடவே ஸ்பானிய அரசியலின் மிகப்பெரிய ஊழலொன்று பொதுமக்களுக்குத் தெரிய வந்தது.


நீதிமன்றத்தில் லூயிபர் சேனாஸ் தன்னுடன் சேர்ந்து ஒத்துழைத்தவர்களை வெளியிட்டதுடன் அந்த நிதியிலிருந்து பணம் பெற்றவர்களை வெளியிட்டார். அவர்களில் ஒருவர் பிரதமர் பதவியிழந்த மரியானா ரஜோய். அவர் தனக்கு அந்த நிதியுடன் தொடர்பு உள்ளது என்று ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் கூட மக்கள் அதை நம்பவில்லை.

லூயிபர் சேனாஸ் 33 வருடங்கள் சிறைத் தண்டனை பெற்றார். கூட்டாக இருந்த நிறுவன அதிபரொருவர் 51 வருடங்கள் உள்ளே தள்ளப்பட்டிருக்கிறார். உயர்மட்டத்திலிருந்த மேலும் பலரும் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள்.



இரண்டு மில்லியன் மக்களைக் கொண்ட ஸ்லோவேனியா ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்று. அங்கே நடந்த தேர்தலில் முதல் தடவையாக குடியேற்றவாதிகளுக்கு எதிரான கட்சியொன்று வெற்றி பெற்று அரசைக் கைப்பற்றியிருக்கிறது. ஏற்கனவே ஹங்கேரி, சமீபத்தில் இத்தாலி நாடுகளில் ஏற்பட்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அகதிகள் கோட்பாடுகளுக்கு எதிரான அலை ஸ்லோவேனியாவிலும் பரவியிருப்பதாக கருதப்படுகிறது.





மயக்க மருந்து கொடுக்காமல் மிருகங்களை இறைச்சிகாக வெட்டுவதை அனுமதிபெற்ற இறைச்சிக் கடைகளில் மட்டுமே செய்யலாம் என்கிற துஐரோப்பிய ஒன்றியச் சட்டம். அக் காரணத்தால் தங்களது பெருநாள் சமயத்தில் தமது தேவைகளுக்கு இறைச்சி கிடைப்பது தாமதமாகிறது. எனவே அது ஒரு மதத்துக்கு எதிரான நடவடிக்கை என்று பெல்ஜியத்தில் அண்ட்வெர்ப்பன் நகரசபைக்கு எதிராக அங்கே வாழும் முஸ்லீம்கள் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார்கள்.

இஸ்லாமியப் பெருநாட்கள் நடக்கும் சமயங்களில் தற்காலிகமான இறைச்சி வெட்டும் கடைகள் அனுமதிக்கப்பட வேண்டும், என்பதே பெல்ஜிய முஸ்லீம்களின் கோரிக்கையாகும்.

அவர்களது வழக்கை எடுத்துக் கொண்ட ஐ.ஒன்றிய நீதிமன்றம் தற்காலிகமான இறைச்சி வெட்டும் கடைகளை ஒழுங்கு செய்வது இலகுவான விடயமல்ல. அதற்கான நடவடிக்கைகள் எடுப்பது நகரசபைக்கு தகுந்த சமயத்தில் முடிவதில்லை என்பதே நிலைமை என்று சுட்டிக்காட்டியிருப்பதுடன், அது ஒரு மத நம்பிக்கைக்கு எதிரான நடவடிக்கை அல்ல என்று தீர்ப்பளித்திருக்கிறது.

# உலக யன்னல்

அமெரிக்கா ஏற்கனவே அறிவித்திருந்தபடி ஆனி மாத ஆரம்பத்தில் ஐரோப்பிய ஒன்றியம், மெக்சிகோ, கனடா மீது வர்த்தகப்போர் ஆரம்பமானது. குறிப்பிட்ட இப்பிராந்தியங்களிலிருந்து வரும் இரும்பு மற்றும் அலுமீனியப் பொருட்களின் மீது அமெரிக்கா 25 விகித இறக்குமதி வரியைப் போட்டிருக்கிறது. அதே போன்ற வரிகளை சீனாவின் மீதும் அறிமுகம் செய்யப்போவதாக அறிவித்திருந்தது அமெரிக்கா. ஆனால், அவ்விரு நாடுகளுக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளால் அவ் வரிகள் தற்போதைக்கு தள்ளிப் போடப்பட்டிருக்கின்றன.

இவ் வரிகள் அமெரிக்காவின் குறிப்பிட்ட பொருட்களின் இறக்குமதியாளர்களை அமெரிக்க பொருட்களை பாவிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவைகளில் முக்கியமானவை கார்கள்.டொனால்ட்டிரம்ப் அடுத்த கட்டமாக அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கும் வரிகள் விதிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

ஈரானுடனான அணு ஆராய்ச்சி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக் கொண்டாலும் தாங்கள் அவ்வொப்பந்தத்தில் தொடரவிருப்பதாக சொல்லும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் தமது நாடுகளை அமெரிக்கா தண்டிக்காமலிருக்க என்ன செய்யலாம் என்று யோசனைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

ஈரானோ அமெரிக்கா உலக நாடுகளின் மீது நடாத்திவரும் ஆதிக்கத்தை எதிர்க்க உலக நாடுகளெல்லாம் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

வெனிசுவேலா, ஈரான் ஆகிய நாடுகளுக்கெதிராக அமெரிக்கா போட்டிருக்கும் வர்த்தக கட்டுப்பாடுகளாலும் உலகச்சந்தையில் ஏற்பட்டிருக்கும் எண்ணெய் தட்டுபாடு உலகத் தேவைக்கான பெற்றோலியப் பொருட்களின் விலைகளை அளவுக்கு மீறி அதிகரிக்க வைப்பதாக இந்தியா, சீனா ஆகிய நாடுகள் பலமாக எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கின்றன.

விளைவாக சவூதி அரேபியா, ரஷ்யா உட்பட்ட எண்ணெய் வள நாடுகள் தமது எண்ணெய்த் தயாரிப்பை அதிகரித்து அதன் மூலம் உலகச் சந்தையில் மேலதிக எண்ணெய்ப் பொருட்களை விநியோகிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றன.

விளைவாக பெற்றோலின் விலை சொட்டுச்சொட்டாகக் குறைந்து வருவதை நாமெல்லாம் காண முடிகிறது. ஆனால், அது மீண்டும் 2017 ஆண்டளவு மலிவாகுமென்று கனவு காணலாகாது.



**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

தொடர்புகளிற்கு

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com


மூன்று கில்லாடிகள்!
கதை, படம்: ராஜே
2
இரண்டாம் உலகப் போர் நேரத்தில் முரே ஒரு பண்ணையில் வேலைக்குச் சேரச் செல்கிறான். வழியில் ஒரு வீட்டில் தங்கிக் கிளம்பும்போது, ஒருவன் முரேவைத் துப்பாக்கியால் தடுத்து மிரட்டுகிறான். இனி...
நம்மைக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்றே முடிவு கட்டிவிட்டான். இனி, இங்கிருக்கும் ஒவ்வொரு விநாடியும் நமக்கு ஆபத்துதான்.
நண்பரே! என் குதிரைக்கு லாடம் கட்ட வேண்டும். அதற்கான உபகரணம் கொடுத்து உதவ முடியுமா?
லாயத்தில் இருக்கிறது எடுத்துக் கொள். ஆனால், உன் தேவை முடிந்ததும் திரும்பிச் சென்றுவிடு.
நன்றி நண்பரே!
லாடம் கட்டி முடிக்கப்பட்டது.
எனது அண்ணன் பீட்டர், மிகவும் கோபக்காரன். அவனுக்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியவில்லை.
நன்றி! நான் புறப்படுகிறேன்.
ம்...வா...இன்று பனிப்பொழிவு மிக அதிகமாக உள்ளது. காலச் சூழ்நிலை சரியில்லை. பனிப்புயல் உருவாகுமென்று தோணுது.
ஆஹா... பனிப்புயல் உருவாகிவிட்டதே! இந்தப் பனிமலை அடிவாரத்தில் இவர்கள் வசிப்பது ஆபத்தாயிற்றே! எச்சரிக்கை செய்வோம்.
நண்பரே! ஆபத்து! எச்சரிக்கை.
என்ன உளறுகிறாய்.
இங்கு, இப்போது பனிப்புயல் வீசும் சூழல் உள்ளது. தப்பிக்க முயற்சி செய்... தேவைப்பட்டால் உனக்கு உதவுகிறேன்.
அங்கே பார்! மலை உச்சியில் பனிப்பாறைகள் நிறைய உருவாகயுள்ளன. இது, எப்போது வேண்டுமானாலும் சரிந்து விழலாம்.
முரேவின் எச்சரிக்கையை ஏற்றனர்.
முதலில் பனிப்புயலுக்குள் சிக்காமல் விரைவாக இந்த மலையைக் கடந்துவிடுங்கள்.
பெண்கள் இருவரும் பயத்துடன் பனிமலையைக் கடந்தனர்.
நண்பரே, ரெடியா? நான் முன்னால் செல்கிறேன்.
ஏன் சண்டித்தனம் செய்கிறாய்?
புறப்பட மறுத்த குதிரையை பயமுறுத்த, துப்பாக்கியால் சுட்டான்.
முரே, மலை உச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.
துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்ட அதேநேரம், பனிப்பாறைகள் சரியத் தொடங்கின.
நண்பரே! இனித் தாமதித்தால், உயிருக்கு ஆபத்துதான்.
முரே, முன்னால் வேகமாகப் பயணித்தான்.
இவனது கணிப்பு மிகச் சரியாக இருக்கிறது. நான் தேவையில்லாமல் கொள்ளையடிப்பவன் என்று சந்தேகித்துவிட்டேன்.
நண்பரே, வேகமாகப் பின் தொடருங்கள்.
பனிப்படிவத்தில் குதிரைகள் வேகமாகச் செல்ல முடியாமல் திணறின.
பனிப்புயல் வேகமாக வீசத்தொடங்கியது. முரேவைப் பின்தொடர்ந்துசென்ற பீட்டர், தன் வீட்டைத் திரும்பிப் பார்த்தான்.
கடவுளே என் வீடு.
மலையிலிருந்து பனிப்பாறைகள் சரிந்து, வீட்டையும் குதிரை லாயத்தையும் கபளீகரம் செய்திருந்தன.
(தொடரும்)

## வல்டர் ராலே

வல்டர் ராலேவுக்கு கவிதை எழுதத் தெரியும். கத்தி பிடித்துச் சண்டை போடத் தெரியும். அரசியலில் ஈடுபாடு உண்டு. உளவு வேலையும் பார்ப்பார். அயர்லாந்தில் நிறைய நிலங்கள் இருந்தன. ஆனால், ராலேவின் விருப்பம் ஒன்றுதான். சாகசங்கள் நிறைந்த கடல் பயணங்கள் மேற்கொள்ள வேண்டும், இதுவரை யாரும் கண்டிராத புதிய இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதுதான் அது.

அவருடைய கனவு 1584ம் ஆண்டு நிறைவேறியது. ஒருநாள் எலிசபெத் மகாராணியிடம் இருந்து கடிதம் வந்தது. 'இதுவரை ஆக்கிரமிக்கப்படாத எந்தப் பகுதியையும் ஆக்கிரமிக்கலாம். கிடைப்பதில் ஐந்தில் ஒரு பகுதியை ராலே வைத்துக்கொள்ளலாம்' என்றது அந்த அரசாங்க உத்தரவு. கப்பல்கள், ஆட்கள் என அனைத்தும் ராணியிடம் இருந்து வந்துவிடும். பிறகென்ன கவலை?

உற்சாகமாகக் கிளம்பினார் ராலே. அவரின் கனவு, தென் அமெரிக்கா. குறிப்பாக, எல் டொராடோ. அதிலும் குறிப்பாக ஆண்டிஸ் மலைத்தொடர் தான் அவருடைய இலக்கு. இந்த மலைப்பகுதியில் சில பழங்குடிகள் வசிந்து வந்தார்கள். அவர்களுக்கு வெளியுலகம் தெரியாது. நீண்ட மலைத்தொடர் என்பதால், அதைக் கடந்து வருவது கஷ்டம். இந்தப் பழங்குடிகள், மலை மலையாகத் தங்கம் வைத்திருக்கிறார்கள். எப்படிக் கிடைத்தது, எங்கிருந்து வந்துசேர்ந்தது? ஒருவருக்கும் தெரியாது. ஆனால், மலை அளவுக்கு தங்கம் அவர்களிடம் இருக்கிறது.



# 17 சென்றதும் வென்றதும்!

இந்தப் பழங்குடிகள் தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்போது ஆற்றங்கரைக்கு வருவார்கள். தங்கத்தைப் பொடியாக்கி, புதிய தலைவரின் தலை முதல் பாதம் வரை பூசிவிடுவார்கள். அவர் உடல் முழுக்க தங்கம் மினுமினுக்கும். தங்களிடம் உள்ள தங்கக் கட்டிகளை ஆற்றில் வீசுவார்கள். இப்படி வீசினால், அது ஆற்றில் உள்ள கடவுளுக்குப் போய்ச் சேரும் என்பது அவர்கள் நம்பிக்கை.

ஆற்றில் போடும் அளவுக்கு தங்கம் இருக்கிறதென்றால், அதைப் பொடியாக்கி உடல் முழுக்க பூசிக்கொள்ள முடிகிறதென்றால், எவ்வளவு தங்கம் அவர்களிடம் இருக்க வேண்டும்! ராலேவின் திட்டம் தென் அமெரிக்காவுக்குச் செல்வது; அங்கே ஒரு காலனியை பிரிட்டனுக்காக உருவாக்குவது; அப்படியே தங்க மலையைக் கண்டுபிடித்து, முடிந்த அளவுக்கு பெயர்த்துக் கையோடு கொண்டுவருவது. பிறகு, என்னை மிஞ்ச இந்த உலகில் யார் இருக்கிறார்கள்?

கடல் அவரை மயக்கியது. உற்சாகமாகத் தன் குழுவினருடன் கப்பலில் ஏறிக்கொண்டார். வரும்போது தங்கத்தைக் கொண்டுவர இந்தக் கப்பல்கள் போதுமா என்ற கவலை மட்டும்தான் அவருக்கு. இதோ, கப்பல் கரையைத் தொட்டதும் 'சரித்திரம் படைத்துவிடுவேன்' என்றுதான் நம்பினார்.

கப்பல் கரையைத் தொட்டது.

●பிபிசி 2002-ம் ஆண்டு நடத்திய கருத்துக் கணிப்பின்படி இங்கிலாந்தின் தலைசிறந்த 100 பேரில் ஒருவராக வால்டர் ராலே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

●ஒரு கோட்டையில் சிறை வைக்கப்பட்ட ராலே, உலக வரலாறு பற்றி ஒரு புத்தகம் எழுதினார். ஆறு மொழிகளில் உள்ள நூல்களை அதற்காக அவர் வாசித்தார்.

●ராலே தன் பயணங்கள் மூலம் பெரிய அளவில் வருமானம் எதுவும் ஈட்டவில்லை.

●எலிசபெத் ராணியின் அரண்மனைத் தோழிகளில் ஒருவரை ராலே திருமணம் செய்துகொண்டார். அது, ராணிக்குப் பிடிக்கவில்லை.

●ராலே-யின் நினைவாக வட கரோலினாவின் தலைநகரத்துக்கு அவர் பெயர் சூட்டப்பட்டது.

வெனிசுலாவில் எல் டொராடோ இருக்கிறது என்று யாரோ சொல்ல, அங்கே போனார். ஓரினோகோ என்னும் ஆற்றைச் சுற்றிச் சுற்றி வந்தார். 400 மைல் தொலைவு பாயும் நீளமான ஆறு அது. கடலையும் மழையையும் புயலையும்தான் பார்க்க முடிந்தது.

இதற்கிடையில் மகாராணியும் நச்சரிக்க ஆரம்பித்துவிட்டார். 'என்ன ஆச்சு வால்டர் ராலே? தங்கம் கிடைத்ததா இல்லையா? உனக்காக கப்பல்களையும் ஆட்களையும் அனுப்பி என்ன பலன்?' எனக் கேட்டார்.

"இதோ கிடைத்துவிடும்... அதோ இருக்கிறது' என்று சாக்குப்போக்கு சொல்ல ஆரம்பித்தார் ராலே. ஆனால், அவருக்கே கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை போக ஆரம்பித்துவிட்டது.

பலர் கூட்டாகச் சேர்ந்து தேடினார்கள். சிலர் கடல் வழியாகவும், சிலர் நிலம் வழியாகவும் சென்றார்கள். 'கிடைத்தால் எனக்குத்தான்' எனச் சண்டையிட்டுக் கொண்டார்கள். மற்றவர்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காகவே பலரைக் கொல்லவும் செய்தார்கள். வாழ்நாள் முழுக்க தேடித் தேடி அலுத்துப்போனார்கள்.

'எல் டொராடோ' கிடைக்காமல் போனதில் ராலேவுக்கு வருத்தம். அவர் இறுதி வரை நம்பிக்கை இழக்கவேயில்லை. இன்னும் பல கடல்களைக் கடந்துபோனால் ஒருவேளை கிடைக்குமோ? இப்படியே



ஒருமுறை அல்ல, இரண்டு முறை. மீண்டும் ஒருமுறை போனார். வட கரோலினா என இன்று அழைக்கப்படும் பகுதியை ஆர்வத்துடன் சுற்றிவந்து பார்வையிட்டார். ஃபுளோரிடா வரை வந்தார். இந்தப் பகுதிக்கு இதுவரை யாரும் வந்தது இல்லை என்பதைக் கேள்விப்பட்ட ராலே, வேர்ஜீனியா என்று அதற்குப் பெயர்வைத்தார். ஒரு புதிய இடத்தைக் கண்டுபிடித்து, அதற்குப்பெயரும் சூட்டிவிட்டோம். அதுவும் மகாராணியின் பெயரையே (வேர்ஜின் ராணி என்று எலிசபெத்தை அழைப்பார்கள்) வைத்துவிட்டோம் என்பதில் அவருக்கு மகிழ்ச்சி.

அமெரிக்காவை பிரிட்டனின் காலனியாக மாற்றிவிடலாம் என அப்போதே அவருக்கு தோன்றிவிட்டது. காலி இடங்களையும் பழங்குடிகள் வசிக்கும் இடங்களையும் ஆக்கிரமித்துக்கொள்வது தவறில்லை என்பது அவர் நம்பிக்கை. எல் டொராடோவை அவர் தேடியதும் இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான். ஆனால் என்ன செய்வது? எல் டொராடோ கிடைத்தால்தானே...

தொடர்ந்து கப்பலில் மிதந்து கொண்டே இருந்தார் ராலே. எப்படியாவது கண்ணில் தங்கமலை பட்டுவிடாதா எனத் தேடி அலைந்தார். பயணம் மேல் பயணம் சென்றுகொண்டிருந்தால், ஒருநாள் அகப்படும் எனச் சமாதானமும் செய்துகொண்டார். அவர் எதிர்பார்ப்பு இறுதிவரை நிறைவேறவில்லை

ஆனால், எதிர்பாராவிதமாகப் பல விஷயங்கள் நடந்துவிட்டன. ராலேவை ஆதரித்து வந்த எலிசபெத் ராணி, அவருக்கு எதிராகத் திரும்பினார். எலிசபெத்தின் மரணத்துக்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்த முதலாம் ஜேம்ஸ், ராலேவை வெறுத்ததோடு, அவரைச் சிறையிலும் தள்ளினார். இத்துடன் விட்டிருந்தாலும் பரவாயில்லை. மரண தண்டனையும் விதித்துவிட்டார். 29 ஒக்டோபர், 1618 அன்று ராலே இறந்துபோனார்.

வால்டர் ராலே இன்று எதற்காக நினைவுகொள்ளப்படுகிறார் தெரியுமா? எங்கெங்கோ சென்று அவர் இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து சேர்த்த அல்லது அறிமுகப்படுத்திய இரண்டு விஷயங்களுக்காக. அவை, புகையிலை மற்றும் உருளைக்கிழங்கு. ஒரு முக்கியமான விஷயத்தைக் கடைசி வரை ராலே தெரிந்து கொள்ளவே இல்லை. அது, எல் டொராடோ என்பது முழுக்க முழுக்க ஒரு கற்பனை. 'தங்க மலை, என்று ஒன்று இல்லவே இல்லை, என்பதைத்தான். **(பயணம் தொடரும்...)**

# ராஜபக்சக்களின் காலம் திரும்புகிறதா?

நம்மாழ்வார்

இலங்கையின் ஆட்சியதிகாரத்திற்கு ராஜபக்சக்களை வரவேற்கும் காலமொன்றை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்றுதான் தோன்றுகிறது. கூட்டரசாங்கத்தின் பலவீனங்கள் இராஜபக்சக்களை தானாகவே அரங்கின் முன்னிலைக்கு நகர்த்தி வந்துள்ளது. இனி அவர்களை அரங்கிலிருந்து அப்புறப்படுத்துவது இயலாத காரியம்.

அதுவும் இந்த ஆட்சியாளர்களால் அது இயலாது. ஏனெனில், ஆட்சியாளர்களின் பலவீனம்தான் ராஜபக்சக்களை அரங்கிற்கு கொண்டு வந்தது.

ராஜபக்சக்கள் அரங்கிற்கு வந்தது மில்லாமல், இலங்கை வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவில், ஆட்சி நிர்வாகத்தின் போக்கை அரசுக்கு வெளியிலிருக்கும் சக்திகளே தீர்மானிக்கிறார்கள் என்ற ஆபத்தான, விசித்திர நிலைமையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த நிலைமையால் அதிகமும் சூழ்நிலை கைதியாகியிருப்பவர் மைத்திரிபால சிறிசேனதான். தனது பழைய வைராக்கியங்களை கைவிட்டு, ராஜபக்சக்களுடன் கைகோர்க்க வேண்டிய நெருக்கடி நிலைமைக்குள் தானாகவே அகப்பட்டுக் கொண்டார்போல தெரிகிறது.

சுதந்திரக்கட்சி எப்படி ஜனாதிபதி தேர்தலை சந்திக்க போகிறது, கூட்டு எதிரணியின் நகர்வு எப்படியிருக்கப் போகிறது என்பதெல்லாம் இன்னும் தெளிவாகவில்லை.

ஆனால் இரண்டு விசயங்களை ஊகிக்க முடிகிறது. முதலாவது, மீண்டுமொருமுறை ஜனாதிபதி தேர்தலை சந்திக்க மைத்திரிபால விரும்புகிறார். இதுவரை அவர் அப்படியான எண்ணத்துடன்தான் இருக்கிறார் போலத் தெரிகிறது. சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ராஜபக்சக்களில் யாராவது ஒருவர் வருவதை தடுப்பதற்கென்றாலும் அடுத்தமுறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டுமென மைத்திரி விரும்பலாம்.

ஆனாலும், ஜனாதிபதி தேர்தல் தொடர்பான நிலவரங்கள் ஒவ்வொரு நாளும் மாற்றமடைந்து, மைத்திரிக்கு எதிரான பக்கத்திலேயே சென்று கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி வேட்பாளராக ராஜபக்ச முகாமிற்கு சார்பான ஒருவர் நியமிக்கப்படாதவிடத்து, கூட்டு எதிரணி மைத்திரி முகாமை நோக்கி செல்ல வாய்ப்பில்லை. கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்படுவதெனில், கூட்டு எதிரணியின் நிபந்தனைகளிற்கு மைத்திரி தரப்பு சம்மதிக்க வேண்டும். அண்மையில் பசில் ராஜபக்ச சொல்லியிருந்த விசயமொன்று கவனிக்கப்பட வேண்டியது 'கடலை நோக்கித்தான் ஆறு வரவேண்டும். அவர்கள்தான் எம்மிடம் வரவேண்டும். கடல் ஆற்றை நோக்கி சென்றால் அது சுனாமியாகி விடும்'.

ரஜினி, விஜய் பட பஞ்ச் மாதிரி தோன்றினாலும், யதார்த்தம் இதுதான்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக தமது முகாமிற்குள்ளிருந்துமல்ல, குடும்பத்திற்குள்ளிருந்து வராவிட்டால் ராஜபக்ச குடும்பம் அதை ஆதரிக்கப் போவதில்லை. கோத்தபாயவா இல்லையா என்பது குடும்ப பிரச்சனையென்றளவில்தான் இருக்க வாய்ப்புள்ளதே தவிர, கூட்டணியில் அல்லது கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்க வாய்ப்பில்லை. தான் அல்லது தனது வாரிசுகள் யாராவது மீண்டும் அதிகாரத்திற்கு வருவதையே மஹிந்த ராஜபக்ச விரும்புகிறார்.

இப்பொழுது கோத்தபாயவையோ, மஹிந்தவையே கையாள 20வது திருத்தத்தை ஒரு ஆயுதமாக்க ஐ.தே.கவும் ஆர்வம் காட்டுவதாக தெரிகிறது. ஏனெனில், கோத்தபாய அல்லது மஹிந்தவுடன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதைவிட, சுதந்திரக்கட்சியுடன் போட்டியிட்டு ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றத்தை கைப்பற்ற வாய்ப்புள்ளதாக ரணில் கருதுவதாக தெரிகிறது.

20வது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்கப்பட்டுவிடும். பிரதமர் பதவிக்கு மீண்டும் போட்டியிட எந்த தடையுமிருக்காதென்பதால், 20 ஐ ஆதரிக்கலாமா என்ற குழப்பத்தில் ஆரம்பத்தில் மஹிந்த இருந்ததாக சொல்லப்படுகிறது. ஆனால், இப்பொழுது 20ஐ ஆதரிப்பதில்லையென்ற முடிவை கூட்டு எதிரணி எடுத்துள்ளது. 20ஐ கூட்டு எதிரணி ஆதரிக்காத பட்சத்தில், தமது முகாமை சேர்ந்த ஒருவரை ஜனாதிபதியாக்கலாமென அவர்கள் கருதுகிறார்கள் என்பதுதான் அர்த்தம்.

இப்போதைய நிலைமையில் மஹிந்த ராஜபக்ச மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை. அரசியலமைப்பில் திருத்தங்கள் செய்யப்பட்டாலே அவரால் மீண்டும் போட்டியிட வாய்ப்புண்டு.

அரசிலிருந்து விலகிய சுதந்திரக் கட்சியின் 'குரூப் 16' எம்.பிக்கள் அண்மையில் இரா.சம்பந்தனை சந்தித்திருந்தார்கள். அந்த சந்திப்பு குறித்து இரண்டு தரப்பும் மேலோட்டமான தகவல்களைத்தான் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் பகிரங்கமாக குறிப்பிட்டதற்கு அப்பாலும் பல விசயங்கள் அங்கு பேசப்பட்டுள்ளன என்பதே உள்வீட்டு தகவல்.

முக்கியமாக அடுத்து வரும் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச அணியை முன்னிலைப்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்பு பிரச்சாரம் செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையை 'குரூப் 16' வைத்துள்ளது. சுதந்திரக்கட்சி ஒரு அணியாக திரண்டு, ஜனாதிபதி தேர்தலை சந்திக்கும்போது, சிறுபான்மையின வாக்குகள் அவர்களிற்கு பிரச்சனையான விசயமாக இருக்கும். அதை சரி செய்யும் வேலைத்திட்டங்களில் ராஜபக்ச முகாம் இறங்கியுள்ளது.

முஸ்லிம்களின் வாக்குகளை கவர்வதில் கடந்த சில மாதங்களாகவே மகிந்த அணி நுணுக்கமாக திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. இம்முறை இப்தார் நிகழ்வுகளை அட்டகாசமாக பயன்படுத்தினார்கள். ராஜபக்சக்களிற்கு எதிரான முஸ்லிம் மக்களின் மனநிலையில் மாற்றங்கள் தென்பட தொடங்குவதை அவதானிக்க முடிகிறது.

இப்பொழுது ராஜபக்சக்களால் சமாளிக்க சிரமமான ஒரே தரப்பு தமிழர்கள்தான். அவர்கள் 'குரூப் 16' மூலம் தமிழர்களை கையாள முயற்சிக்ககூடும்.

சம்பந்தனுடனான பேச்சில் பேசப்பட்டதாக கூறப்படும் இன்னொரு விசயம் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வருவது குறித்தே. ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வருவதை ரணிலுடன் இணைந்து கூட்டமைப்பு எதிர்க்குமா என்ற சாரப்பட அவர்கள் வினவியதாகவும், சுதந்திரக்கட்சியை சேர்ந்த மைத்திரி ஆட்சிக்கு வர நாம் உதவினோம்தானே, இனப்பிரச்சனையை தீர்க்ககூடியவரை நாம் ஆதரிப்போம் என சம்பந்தர் பதிலளித்ததாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

அந்த சந்திப்பு குறித்த முழுமையான தகவல்கள் வெளியாகாத நிலையில் உத்தரவாதமாக எதையும் கூற முடியாது. ஆனால், மீண்டும் ராஜபக்சக்களின் யுகத்தை உருவாக்குவது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடி பிடித்து பார்க்கும் சந்திப்பாக அது இருந்திருக்கவே அதிக வாய்ப்புள்ளதை நம்ப முடிகிறது.


'குரூப் 16' உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் முன்னர் மைத்திரிதான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர்கள். இப்பொழுது அவர்கள் தமது எண்ணத்தை மாற்றி, மஹிந்தவிற்காக பணியாற்றுகிறார்கள்.

20வது திருத்தத்தை ஆதரித்தாலோ, தற்போதைய சரத்துக்களின்படியோ ராஜபக்சக்களின் மீள எழுச்சி சாத்தியமற்றது. இதனால்தான் 20வது திருத்தத்தை எதிர்க்க கூட்டு எதிரணி முடிவு செய்துள்ளது. மாறாக, இரண்டு முறைக்குமேல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பேற்படுத்தும் விதமாக இன்னொரு திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாமென தெரிகிறது. மஹிந்தவிற்கு வழியேற்படுத்தவே இந்தி திட்டம்.

கடந்தவாரம் சிங்கள ஊடகமொன்றிற்கு பேட்டியளித்த மஹிந்த ராஜபக்ச, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடவும் வாய்ப்புள்ளதாக கூறியது கவனிக்கத்தக்கது.

மொத்தத்தில், ராஜபக்சக்களிற்கான காலம் திரும்பிவந்து கொண்டிருப்பதாக தெரிகிறது.







காயத்திரி ரெக்ஸ்
சாறிவகைகள்,
பஞ்சாபி, சோளிகிற்,
ஸ்கேட், பிளவுஸ்
சிறுவர்களுக்கான ஏற்ற
ரெடிமெட் ஆடைகளின்
மகத்தான தெரிவிற்கு
GAYATHIRI TEX
No. 277, Point Pedro Road, Kodikamam
இல. 277 பருத்தித்துறை வீதி கொடிகாமம்


Sentamilkumaran Multi Shop &
N.V.T SUPER MARKET
உங்களுக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும்
பெற்றுக் கொள்வதுடன் உங்கள் உறவுகளுக்கான பொதிகளை
நம்பிக்கையாகவும் விரைவாகவும் அனுப்ப முடியும்
முள்ளியவளை வீதி
தண்ணீரூற்று
T.P: 0772881874


RUBAN TOURS & RUBAN ELECTRICALS
Mobile Sales & Accessories
Electrical Goods & wires
All kind of Reloards
Printing & Photocopy
Courier Service
Ruban Tours - Bus,
Van Booking Center
JAFFNA - COLOMBO
COLOMBO - JAFFNA
A/C, Non A/C & Adjustable Seats
Proprietor
S.Sivaruban
077-6351876
rubantours@gmail.com
Jaffna
Kandy Road
Kodikamam
Jaffna


அருள்நாயகி புத்தகசாலை
வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலயத்தின் தேர் உற்சவம்
சிறப்புற வாழ்த்துவதோடு எமக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிக்
கொண்டிருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு எமது நன்றிகள்
Arulnayaki,Book Depot, A9 Road,Busstand
Kodikamam Tel: 077-4937585


சிட்டிவேரம் கண்ணகி அம்மன் வருடாந்த தேர் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றார்கள்
மது ஸ்ராலின் தையலகம்
திருமண வைபவங்களுக்கான சாறி
பிளவுஸ் மற்றும் நியூ மொடல் பஞ்சாபி
தைத்து கொடுக்கப்படுவதுடன் மற்றும்
பெண்களுக்கான ஆடைகள் தைத்துக்
கொடுக்கப்படும்.
இவற்றுடன் பண்டிகைக் காலத்தில்
உங்களுக்குப் பிடித்த ஆடைகளை
இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்டு
விற்பனை செய்யப்படுகின்றது.
உரிமையாளர்: திருமதி.மதிவண்ணன்.பாலசரஸ்வதி
இல 436, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி தொ.எண்: 0775265715, 0788474393


Eye Care
Optical
ஐ கெயார் ஒப்டிக்கல்
கணனி மூலம்
கண் பரிசோதிக்கப்பட்டு
கண்ணாடி வழங்கப்படும்
எமது மற்றுமொரு கிளை
முல்லைத்தீவில் திறந்து
வைக்கப்பட்டுள்ளது
பிரதான வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளை
55,Bus stand Kandy Road, Vavuniya
49, Bus stand complex, Vavuniya
Shop.T.P No 0244905334
Hotline 0775717676


S.N.R காமாட்சி
ரெஜிபோம் கட்டிங்
வேக்ஸ் சொப் அன்
போட்டோ வீடியோ
அனைத்து
வடிவமைப்புக்களில்
திருமணவைபவம்,
பூப்புனித நீராட்டு விழா
வைபவம், புதுவீடு
இத்தியடி பிள்ளையார் கோவில் வீதி
சங்கத்தானை, சாவகச்சேரி
T.P : 077-3188659


ஓவியா ஐஸ்கிறீம்
Ice - Cream
Special Ice - Cream
Mega Special
Fruit Salad
இவை அனைத்தையும்
சுவைத்திட
ஓவியா ஐஸ்கிறீம்
OVIYA ICE - CREAM
பருத்தித்துறை வீதி
கொடிகாமம்
தொ.எண்: 0788474393

விளம்பரத் தொடர்புகளுக்கு 0768255563, 0214927561













இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 17.06.2018 அன்று வெளியிடப்பட்டது.